விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 06 செவ்வாய்க்கிழமை (22.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## முகாம்களில் உள்ள மக்களின் உணர்வை புரிந்த ஜனாதிபதி

### வடக்கு மாகாண சபையில் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டமைக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் நன்றி தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் மாகாண சபை பேரவை செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளர்ர்.

23ஆம் பக்

## இரகசிய சந்திப்பு

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்துடன் தொடர்புகளை வைத்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முக்கிய அரசியல்வாதியொருவர் பாரிய ஊழல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரிகளை இரகசியமாக சந்தித்துள்ளமை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட அரசியல்வாதி ஆணைக்குழுவின் மூத்த அதிகாரியொருவரை சந்தித்தவேளை தான் அப்பாவி என வலியுறுத்தியுள்ளார். இந்த சந்திப்பிற்காக குறிப்பிட்ட அரசியல்வாதி ஆணைக்குழுவின் அதிகாரி

23ஆம் பக்கம் பார்க்க

## மூதூர் படுகொலை விசாரணைகள் பாதிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினர் போதிய ஒத்துழைப்பை வழங்காததன் காரணமாக மூதூரில் அரசசார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் திருகோண

இந்த வருடம் குறித்த இருசம்பவங்கள் பற்றியும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இந்த விசாரணைகளை மேற கொண்டுள்ளனர்.

## அமெரிக்காவின் உதவியுடன் நாட்டில் அபிவிருத்தித்திட்டம்

### அமைச்சர் சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் உதவியுடன் நாட்டின் அபிவிருத்தி மேலும் வேக

பொதுக்கூட்டம்ஒன்றில்பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அமெரிக்கா நாட்டுக்கு தேவை

## ஐ.தே.கவில் முறைப்பாட்டு பிரிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அறிவிக்கவும் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக் கொள்ளவும் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் விசேட

# மூதூர் படுகொலை விசாரணைகள் பாதிப்பு

(கொழும்பு)
இராணுவத்தினர் போதிய ஒத்துழைப்பை வழங்காததன் காரணமாக மூதூரில் அரசசார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் திருகோணமலை கடற்கரையில் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் குறித்த விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் குறித்த இருசம்பவங்கள் பற்றியும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இந்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த படுகொலைகளை படையினரே மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் முன்னர்

23ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்காவின் உதவியுடன் நாட்டில் அபிவிருத்தித்திட்டம்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)
அமெரிக்காவின் உதவியுடன் நாட்டின் அபிவிருத்தி மேலும் வேகமடையும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

திஸ்மஹாராம போகஹாபெலஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம்ஒன்றில்பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அமெரிக்கா நாட்டுக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராக உள்ளது. இதன் மூலம் நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் அபிவிருத்தியை மேலும் துரிதப்படுத்தும்.

23ஆம் பக்கம் பார்க்க

# ஐ.தே.கவில் முறைப்பாட்டு பிரிவு

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அறிவிக்கவும் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக் கொள்ளவும் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் விசேட

23ஆம் பக்கம் பார்க்க

# லண்டனில் கவனயீர்ப்பு

(லண்டன்)
சிறைகளில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி லண்டனில் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒருங்கிணைப்பில் பிரித்தானியப்

23ஆம் பக்கம் பார்க்க

# தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதே தமிழ் மக்கள் பேரவையின் நோக்கம்



## சுரேஷ் பிரேமச்சந்திரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாகுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனே காரணமாகும். ஆனால் இந்த அமைப்பு கூட்டமைப்புக்கு குடைச்சல் கொடுக்கும் அமைப்பு அல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும், நாடாளுமன்றம் ஒரு தேசிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் சபையாக எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மாற்றப்

23ஆம் பக்கம் பார்க்க

# விசுவமடுவில் ஆயுதக் கிடங்கு



(விசுவமடு)
விஸ்வமடு கொளுந்துப்புளவு சந்தியில் நேற்று பி.ப 1.30 மணி

24ஆம் பக்கம் பார்க்க

# தமிழக மக்களுக்கான நிதியுதவி ஜெயாவிடம் கையளிக்கப்படும்

## அவைத் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவுவதற்காக வடக்கு மாகாண சபையினால் சேர்க்கப்பட்டுவரும் நிதி உரிய காலத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் கையளிக்கப்படும் என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நேற்றைய தினம்வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடை

23ஆம் பக்கம் பார்க்க

# குடும்பத்துடன் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு சுற்றுலா!

(கொழும்பு)
அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், இலங்கைக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை திடீர் பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், அவரது இந்தப் பயணம் தொடர்பான குழப்பமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சிறப்பு செய்தி ஒன்றுடன் நிஷா பிஸ்வால், கொழும்பு வந்திருப்பதாகவும், அவர் இலங்கை ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அவர் தனிப்பட்ட .

23ஆம் பக்கம் பார்க்க

# எமில் காந்தனை அழைக்கிறது அரசு

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் அமைப்புக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணம் வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்திடம் இருந்து விடுதலைப் புலிகள்

23ஆம் பக்கம் பார்க்க

# இராணுவத் தேவையை ஆராய சீனக்குழு இலங்கை வருகை!

(கொழும்பு)
சீன படைக்குழுவொன்று இலங்கை இராணுவத்தினருக்கு தேவையான பயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சீனாவின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் ஆறு பேர் கொண்ட குழுவொன்றே அண்மையில் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பயிற்சிப் பிரிவைச் சேர்

24ஆம் பக்கம் பார்க்க

# 2500 ரூபாய் உயர்த்தப்பட்டால் சம்பள முரண்பாடு ஏற்படும்

## வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)
அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளங்கள் 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டால், சம்பள முரண்பாட்டு நிலைமை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் நவின் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கோல்டன் கீ நிறுவன பணம் மீளளிப்பு!

(கொழும்பு)

கோல்டன் கீ நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டிருந்த பணத்தை வைப்பாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வின் இரண்டாம் கட்டம் நேற்று ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரண்டு மில்லியன் தொடக்கம் பத்து மில்லியன் வரை வைப்பீடு செய்திருந்தவர்களின் பணம் திருப்பி வழங்கப்பட்டது.

முதல் கட்டமாக இரண்டு மில்லியனுக்கு குறைவான தொகையை வைப்பீடு செய்திருந்தவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலை அடுத்து 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை வைப்பீடு செய்திருந்த 15 பேருக்கு நேற்று வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய கோல்டன் கீ நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்தவரகளின் பணம் திருப்பி கையளிக்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-11)

# இலஞ்சம் கேட்டால் முறையிடலாம்

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை பாடசாலைக்கு அனுமதிக்கும் போது இலஞ்சம் கேட்கப்பட்டால் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவிற்கு அறிவிக்குமாறு பெற்றோரிடம் கோரப்பட்டுளளது.

இதன்படி அடுத்த வருடம் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அரச பாடசாலைகளில் சேர்த்துக் கொளளும் பொருட்டு பாடசாலை நிர்வாகத்தால் அரசாங்கத்தினால் குறிப்பிட்டுள்ள பணத்திற்கு மேலதிகமாக பெற்றோரிடம் இலஞ்சம் கேட்கப்படும் பட்சத்தில் முறைப்பாடு செய்யமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு பாடசாலை அதிபர்கள் இலஞ்சம் கோருவதாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதே போல் பெற்றோரும் இலஞ்சம் கொடுத்து சிறுவர்களை பிரபலமான பாடசாலைகளில சேர்க்க முற்படுவது தொடர்பான முறைப்பாடுகளும்கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (எ-11)



உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக பிரியங்கர ஜயரட்ண நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். புத்தசாசன பிரதி அமைச்சராக சாரதி துஷ்மந்த மித்ரபால பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இந்த பதவிப் பிரமாணம் இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-11)

# குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன், மாத்தனை ஓடைப் பகுதியிலுள்ள தனியார் காணியிலிருந்து 180 மில்லிமீற்றர் மோட்டார் குண்டொன்று நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் காணியை துப்புரவு செய்யும் போது குண்டை அவதானித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் இராணுவத்தினரின் உதவியுடன் குண்டை மீட்டுள்ளனர். (எ-11)

# லசந்த படுகொலை பீல்ட் மார்ஷலிடம் விசாரணை

(கொழும்பு)

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக, முன்னாள இராணுவத் தளபதியும், ஜனநாயக கட்சியின் தலைவருமான, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பீல்ட் மார்ஷல் சரத பொன்சேகாவிடம் விசாரணை நடத்த தயாராகி வருகின்றனர்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த போதே, 2009 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம லசந்த விக்கிரமதுங்க இரத்மலானை உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அந்தக் காலகட்டத்தில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் நெருங்கிய சகாவான, பிரிகேடியர் கெப்பிட்டிவலன, இரத்மலானை உயர பாதுகாப்பு வலயத்துக்குப் பொறுப்பாக இருந்தார் என்பதும குறிப்பிடத்தக்கது. (எ-11)


## தையல் தெரிந்த ஆண்கள் உடன் தேவை

50,000/=க்கு மேற்பட்ட சம்பளம், தங்குமிட வசதி வழங்கப்படும்.

இடம் :- கிளிநொச்சி

தொ.பே.இல: 0774582344

(C-3036)



## பெயர் மாற்றம்

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் வசிக்கும் செல்வராசா கனகேஸ்வரி ஆகிய எனது பெயர் பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் கனகபூரணம் என பதியப்பட்டுள்ளது. ஏனைய சகல ஆவணங்களிலும் கனகேஸ்வரி என்றே பதியப்பட்டுள்ளது. எனவே பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்திலும் கனகேஸ்வரி என்று பெயரை மாற்றி இன்றிலிருந்து என் சார்ந்த சகல ஆவணங்களிலும் கனகேஸ்வரி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
செல்வராசா கனகேஸ்வரி

(2948)


# இலங்கைப் பெண் மர்ம மரணம்

(கொழும்பு)

சிங்கப்பூரில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில புரிந்து வந்த 30 வயதான இலங்கை பெண் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு பெண்ணின் உறவினர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குருநாகல் நாராம்பல ஓரொம்பாவ பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான இந்த பெண் கடந்த மார்ச் மாதம் சிங்கப்பூருக்கு சென்றுள்ளார். இந்த பெண் உயர்ந்த கட்டிடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து இறந்து போனதாக பெண்ணை சிங்கப்பூருக்கு அனுப்பி வைத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் இது கொலையாக இருக்கலாம் என உயிரிழந்த பெண்ணின் தாய் கூறியுள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை ஆறுமுகம்



துன்னாலை வடக்கை
பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

**வேலுப்பிள்ளை ஆறுமுகம்**

அவர்கள் 21-12-2015 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பசுபதி தம்பதியரின் அன்பு மகனும் இராசையா-வள்ளியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலவேணியின் அன்புக் கணவரும் கமலேஸ்வரன் (திருகோணமலை), குகனேஸ்வரன் உமாநிதி (மே.கு.ந.உ கிளிநொச்சி), கிருஸ்ணகுமாரி (ஆசிரியர் -இராமநாதபுரம் ம.வி), சிவகலா (உருத்திரபுரம் வைத்தியசாலை), ஜெனார்த்தனி (ஆசிரியர் -புத்தூர் வாதராவத்தை), ஜெயகௌரி (கு.ந.உ மாயவனூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்தணகுமாரி, கணேசநாதன், இரவீந்திரன் (அதிபர்-புளியம் பொக்கணை நாகேந்திரா வித்தியாலயம்) , பிரபாகரன், இந்திரகோபால் செல்வலிங்கம் (பாபு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முத்தையா, நமசிவாயம் பொன்னம்மா, சோதி, மனோன்மணி மற்றும் தம்பிஐயா (ஓய்வுபெற்ற மலேரியா தடை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வினுசியா, கஜன், கயேந்தினி, பிரியங்கா, பிரசாந், யதுர்சிகன், தண்குழலி, சதுர்சன், பிரணவி, ஹிருஜிகா, பிரதீப், நிறைமதி, பாமிலன், மஞ்சுதன், நவிஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது மகளான உமாநிதி (புதுக்காடு இராமநாதபுரம்) இல்லத்தில் நடைபெற்று இன்று (22/12/2015) செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :-
குடும்பத்தினர்

(C-3037)

# வசீம் தாஜூதின் கொலைக்கு யோசிதவுக்கும் தொடர்பு!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அணியில் இடம்பெற்றிருந்தவரும், ஷிராந்தி ராஜபக்ஷவின் சாரதியாக பணியாற்றியவருமான இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கப்டன் திஸ்ஸவுடன் யோசித ராஜபக்ஷ உரையாடுவதைப் போன்ற புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலையுடன் மகிந்த ராஜபக்ஷகுடும்பத்துக்கு தொடர்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், இக்கொலை யுடன கப்டன் திஸ்ஸவுக்கு தொடர்பிருப்பதாக விசாரணைகளின் போது பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து, மகிந்த ராஜபகஷவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவிடம் ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போது, அப்படி ஒரு நபரை தமக்குத் தெரியாதென கூறியிருந்த நிலையில், இந்தப் புகைப்படம் வெளியாகியுள்ளது.

புலனாய்வு பிரிவின் தகவல்களின் பிரகாரம், படைத்தரப்பில் இருந்து தப்பிச் சென்ற கப்டன் திஸ்ஸ, பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் நம்பிக்கைக் குரியவராக செயற்பட்டு வந்துள்ளார்.

அதேவேளை முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பமததிலும் கப்டன் திஸ்ஸ சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுடன் கப்டன் திஸ்ஸவுக்கு தொடர்பிருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில், அவர் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கப்டன் திஸ்ஸ, வெளிநாட்டுக்குச் செல்ல நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கச்சா எண்ணெயின் விலையில் மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

தற்போது ஒரு பீப்பாய் பிரெண்ட் கச்சா எண்ணெயின் விலை 36 அமெரிக்க டொலர்கள் அளவுக்கு விழுந்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக இந்த அளவுக்கு எண்ணெய் விலை குறைந்துள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்ததைவிட இந்த விலை 20 சதவீதம் குறைவு. அப்போது எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அமைப்பான ஒபெக் நிறுவனம் உற்பத்தியை குறைப்பதற்கு எதிரான முடிவை எடுத்தனர்.

எண்ணெய் விநியோகத் தேவை குறைந்த போதிலும், உற்பத்தியை குறைக்க அவர்கள் இணங்கவில்லை.

எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் இதன் மூலம் பலனடைந்துள்ளன என்றாலும், நைஜீரியா, வெனிசுவேலா மற்றும் வளைகுடா நாடுகளில் இதனால் உள்நாட்டு வரவு செலவுத் திட்டத்தில் கடுமையான வெட்டுக்கள் ஏற்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் எண்ணெய் விலைகளின் வீழ்ச்சி தடுத்து நிறுத்தப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் சர்வதேச சந்தைகளை சென்றடையும் நிலையிலும், ஈரான் மீதான தடை நீக்கப்பட்டதை அடுத்து, பல நாடுகள் அங்கிருந்து மேலும் இறக்குமதிகளை செய்யும் என்பதால் விலைவீழ்ச்சியை தடுக்க சிறிதளவே வாய்ப்புகள் உள்ளன என அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ-11)

# சாராயம் கடத்தியவர் கைதாகிப் பிணையில்

அரச சாராயம் கடத்திச் சென்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அந்நபரிடமிருந்து கால் போத்தல் கொள்ளவுடைய 41சாராயப் போத்தல்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நெல்லியடி நகரப்பகுதியிலிருந்து வல்வெட்டித்துறை நோக்கிச் சென்ற குறித்த நபர் தொடர்பாகநெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அந்நபர்கைது செய்யப்பட்டதுடன் கடத்திச் செல்லப்பட்ட சாராயப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர் நெல்லியடிப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின்பின்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-5-60)

## மணல் ஏற்றியவர் மடக்கிப் பிடிப்பு

அனுமதிப்பத்திரமின்றி உழவியந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்த நபர் ஒருவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மணற்காட்டுப் பகுதியில் மணலை ஏற்றிய மேற்படி நபர் மணற்காட்டில் இருந்து வல்வெட்டித்துறை நோக்கிச் சென்ற வேளையே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் வல்வெட்டித்துறைபொலிஸ்நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (இ-5-60)




## இலங்கையரின் மறியல் நீடிப்பு

மாலைதீவில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இலங்கையரின் விளக்கமறியல் நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கை இளைஞருக்காக இலங்கையில் இருந்து சட்டத்தரணி ஒருவரை அனுப்புவதாக அவரின் குடும்பத்தினர் சார்பில் மாலைதீவு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டமையை அடுத்தே இந்த விளக்கமறியல் நீடிப்பு செய்யப்பட்டுள் ளது.

லஹிரு மதுஷங்க என்ற இந்த இளைஞர், சினைப்பர் தாக்குதல் நடத்தி மாலைதீவின் ஜனாதிபதியை கொலை செய்வதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்டிருந்தார் என்ற வகையிலேயே விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் அவர் இலங்கை இராணுவத்தில் பணியாற்றினார் என்ற அடிப்படையிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும் தமது மகன் அவ்வாறான குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை நீதியற்ற செயல் என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஜனாதிபதியின் வாக்குறுதியை தேவவாக்காக நம்புகின்றோம்

### மீள்குடியேற்றக் குழுத் தலைவர் தெரிவிப்பு

**வலி.வடக்கு மக்களின் பிரச்சினையை தீர்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழில் வைத்து வழங்கிய வாக்குறுதியை தேவவாக்காக நம்புகிறோம் என வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர்அனுப்பியுள்ள அறிக்கையில்மேலும் தெரிவித்துள்ளதாவது.

பாலன்பிறப்பை கொண்டாட யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி 25 வருடங்களாக வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் அவல வாழ்க்கை வாழும் மக்களை நேரில் சென்று பார்த்து பேசி மிகவும் கவலையடைந்து ஆறுதல் கூறியுள்ளார். இது எமக்கு மிகவும் ஆறுதல் அளிக் கிறது.

மற்றும் இனவாத அரசியல்வாதிகளுக்கு மக்களின் துயர் பற்றி அறைகூவல் விடுத்ததுடன் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினையை 6 மாத காலத்துக்குள் முற்றாக தீர்த்து வைப்பதாக உறுதியளித்துள்ளார்.

இதுவரை காலமும் முன்பிருந்த அரசியல்வாதிகள் வலி.வடக்கு மக்களின் பிரச்சினையை நேரடியாக அணுகியதில்லை. நாங்கள் கடந்த காலங்களில் பலவிதமான அகிம்சைப்போராட்டங்கள் நடத்தியும் மற்றும் மகஜர்களை கொடுத்தும்உள்ளோம். ஆனால் அவர்கள் எமது போராட்டங்களுக்கு இடையூறு விளைவித்தார்களே தவிர எந்தவிதமான செயற்பாடும் எமக்கு சாதகமாக செய்யவில்லை. நல்லாட்சி அரசு அமைந்து ஒருவருட காலம் நிறைவடையும் நிலையில் இந்த அரசும் எம்மை ஏமாற்றப் போகிறது. எனவே எமது கோரிக்கைகளை முன்வைத்து அறவழிப் போராட்டங்களை முன்வைப்போம் என பல முறை எமது மக்கள் கோரிக்கை விடுத்தபோதும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அவர்களை சாந்தப்படுத்தினோம். அந்த நிலையில் ஜனாதிபதியின் வாக்குறுதி எமக்கு சாதகமாக அமைந்துள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்களைப்போல் தட்டிக்கழித்து ஏமாற்றாமல் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பதாகவே வலி வடக்கு மக்களின் மீள் குடியேற்றப்பணிகளை நிறைவு செய்து நல்லாட்சி அரசின் தேவதூதராக எமக்கு காட்சி அளிப்பார் என நம்புகிறோம் என அவ்அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது. (இ-9)

# மோசடிப் பெண் நேற்றுக் கைது

(நல்லூர்)

சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வங்கிக்கடன் பெற்றுத் தருவதாக கூறி மோசடி செய்த ஊரெழுவைச் சேர்ந்த பெண் யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஆனந்தபுரம் பகுதியில் 39 பெண்களிடம் மோசடி செய்தார் என்ற குற்றச் சாட்டில் நேற்றையதினம் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் இது தொடர்பான வழக்கு விசாரணையில் மல்லாகம்நீதிமன்றத்தால் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டவராவார்.

இந்நிலையிலே நேற்றையதினம் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கல்வியங்காடு ஆனந்தபுரம் பகுதியில் மூவாயிரம் ரூபா வீதம் 39 பெண்களிடம் மோசடி செய்துள்ளார். இப்பெண்ணிடம் ஏமாந்த கல்வியங்காடு ஆனந்த புரத்தைச் சேர்ந்த 39 பெண்களும் இப்பெண்ணை பல இடங்களிலும் தேடி வந்துள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப பெண் நேற்றையதினம் ஆனந்தபுரம் பகுதிக்கு மீண்டும் மோசடி செய்யும் நோக்கில் சென்றுள்ளார்.

இதேவேளையே அங்குள்ளவர்களால் மடக்கி பிடிக்கப்பட்டு உடனடியாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் அப் பெண்ணை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

பொலிஸார் உடனடியாக அப்பெண்ணை கைது செய்து விசாரணை தடுப்புக்காவலில் வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-5-134)

## ராஜபக்ஷவினரின் வங்கிக் கணக்கை வெளியிடுவதற்கு டுபாய் வங்கி மறுப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷவினரின் வங்கி கணக்குகள் சம்பந்தமான தகவல்களை வழங்க டுபாயில் உள்ள எமிரேட்ஸ் வங்கி மறுத்துள்ளது.

இந்த வங்கி கணக்குகள் சம்பந்தமான தகவல்களை பெற அரசாங்கம் முயற்சித்துள்ளது. எனினும் அதற்கு இடமளிக்க முடியாது என வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகவல்களை பெற்றுக் கொள்ள இலங்கை அதிகாரிகள் சமர்ப்பித்த விடயங்கள் போதுமானதல்ல என எமிரேட்ஸ் வங்கி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனால், தகவல்களை வழங்குவது வங்கி சட்டங்கள் மற்றும் வங்கி செயற்பாடுகளுக்கு முரணானது என்பதுடன் தகவல்களை வழங்குவது தமது வாடிக்கையாளர்களுக்கு கெடுதியான பாதிப்புகளை ஏற்படுத்தும்எனவும்வங்கிஅதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (இ-7)

## சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி 28ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளின் முதற் கட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம். என். ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

பரீட்சைக்கு தோற்றிய ஒரு இலட்சத்து 21 ஆயிரம் மாணவர்களின் விடைத்தாள்களை திருத்துவதற்கு 38 ஆயிரம் ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவரென்றும் அவர் கூறினார்.

முதற்கட்ட விடைத்தாள் திருத்தும் பணி டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குடும்பப்பெண்கள் பிணையில்

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்தவடமராட்சிதுன்னாலை பகுதிகளைச் சேர்ந்த இருகுடும்பப்பெண்கள்நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்படவுள்ளனர். நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே குறித்தஇருபெண்களும்கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் இவ்விரு பெண்களிடமிருந்தும் கசிப்பும் பொலிஸாரால்கைப்பற்றப்பட்டன. இதில் துன்னாலை வறாத்துப்பளைச் சேர்ந்த பெண் ஒருவரிடமிருந்து 21 லீற்றர் கொள்ளளவுடைய கசிப்பு கான் ஒன்று கைப்பற்றப்பட்டதுடன் துன்னாலை சக்குச்சம்பாவைச்சேர்ந்தபெண்ணிடம் ஒன்றரை லீற்றர் கொள்ளளவுடைய கசிப்பு போத்தல் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.


பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இக் குடும்பப் பெண்கள் மீது பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5-60)




இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இந்தியன் ஒயில் கம்பனியும் இணைந்து எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நேற்றைய தினம் கண்டி வீதியில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளன.இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டு புதிய எரிபொருள் நிரப்பு நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பிரதிப் பணிப்பாளர் சுடத் மடுகல்ல, இந்தியன் ஒயில் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் சியாம் போரா மற்றும் இந்தியன் ஒயில் கம்பனியின் சிரேஷ்ட உப தலைவர் தனஞ்சயன் சிறிவஸ்தாவ ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# ஆஸி பிக் பாஷ் இருபது-20 தொடர் ஸ்கோச்சர்ஸை வீழ்த்தியது அடிலெய்ட்





அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் லீக் தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற 6 ஆவது லீக் போட்டியில் பெர்த் ஸ்கோச்சர்ஸ் - அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெர்த் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி கிளிங்கர், ஷேன் மார்ஷ் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். கிளிங்கர் 19 ஓட்டங்களுடனும், மார்ஷ் 47 ஓட்டங்களுடனும ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த அடம் வோஜஸ் 32 பந்தில் 45 ஓட்டங்கள் குவிக்க பெர்த் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 151 ஓட்டங்கள் சேரத்தது.

152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அடிலெய்ட் அணி களம் இறங்கியது.

தொடக்க வீரர்கள் லுட்மன் 17 ஓட்டங்களும், சிம்மன்ஸ் ஒரு ஓட்டத்திலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த ஜெயவர்த்தன 42 ஓட்டங்களும், அலெக் ரோஸ் 38 ஓட்டங்களும் எடுக்க அடிலெய்ட் அணி 19.1 ஓவர்களில். 6 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதுவரை முடிந்த இரண்டு போட்டிகளிலும் வெற்று பெற்று அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் புள்ளிகள் பட்டியலில் 2-வது இடததை பிடித்துள்ளது. (க)

# நாக்பூர் ஆடுகளத்துக்கு ஐ.சி.சி எச்சரிக்கை

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாக்பூரில் உள்ள ஜம்தா மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த ஆடுகளம் முதல் நாளில் இருந்தே சுழற்பந்து வீச்சுக்கு அதிக அளவில் உதவியது.

அத்துடன் எதிர்பாராத வகையில் பந்து திரும்பியது (TURN) என்ற விமர்சனம் எழும்பியது. முரளி விஜய் அடித்த 40 ஓட்டங்களே அதிகபட்ச ஓட்டங்களாகும். 4 போட்டிகள் கொண்ட தொடர் முடியும் வரை இந்த விவகாரம் பற்றி பேசப்பட்டது.

இதற்கிடையில் இந்த ஆடுகளம் குறித்து போட்டி நடுவர்கள் ஐ.சி.சியில் புகார் அளித்தனர்.

ஐ.சி.சி. ஆடுகள கண்காணிப்பு செயலாக்கத்துறை இதுகுறித்து ஆராய்ந்தது. அதன்பின் ஐ.சி.சி. இந்த ஆடுகளத்துக்கு அதிகாரப் பூர்வ எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.சி.சியின் ஆடுகள கண்காணிப்பு செயலாக்கத் துறையின் கீழ் நாக்பூர் ஆடுகளம் அதிகாரப்பூர்வ எச்சரிக்கையை பெற்றுள்ளது என்று ஐ.சி.சி. அறிவித்திருப்பதாக இந்த போட்டிக்கான உயர்க்குழு அறிவித்துள்ளது.


இந்த போட்டிக்கு பின்னர் அங்கு நடைபெற்ற போட்டியில் ஆடுகளம் குறித்து எந்த பிரச்சினையும் எழும்பவில்லை.

இதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாக்பூர் ஆடுகளம் குறித்து முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் ஹெய்டன், மைக்கல் வோகன் விமர்சனம் செய்திருந்தனர். ஆனால், விராட் ஹோலி, ரவி சாஸ்திரி ஆடுகளத்தில் தவறு ஏதும் இல்லை என்று கூறியிருந்தனர். (க)

# அனுபவ வீரர்கள் இல்லாதது தொடரை இழக்கக் காரணம்

## மத்யூஸ் தெரிவிப்பு



நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை அனுபவம் இல்லாத வீரர்களால் தான் இழக்க நேரிட்டதாக இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் கூறியுள்ளார்.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள இலங்கை அணி அங்கு 2 டெஸ்ட் போட்டிகள் கொணட தொடரில் பங்கேற்றது. இதில் 2-0 என தொடரை இழந்துள்ளது.

இதுபற்றி இலங்கை அணித்தலைவர் மத்யூஸ் கூறுகையில், நாங்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இருக்க வேண்டும். ஓரளவு ஓட்டங்கள் குவிக் கும் பட்சத்தில்தான் எங் களது பந்துவீச்சாளர் களுக்கு வாய்ப்பு கிடைக் கும்.

முதல் இன்னிங்சில் சிறப்பாக செயல்பட்டோம். நாங்கள் முன்னிலை பெற்றிருந்த போதும் 2-வது இன்னிங்சில் சொதப்பி கோட்டைவிட்டு விட்டோம்.

இந்தப் போட்டியில் எங்களின் மோசமான 2-வது இன்னிங்ஸ்தான் எதிரணிக்கு வெற்றி வாய்ப்பை அதிகரித்து விட்டது. இந்த தோல்வி ஏமாற்றம் அளிக்கிறது.

டெஸ்ட் அணியை எடுத்துக் கொண்டால் நாங்கள் அனுபவமற்றவர்களாக இருக்கிறோம்.

5 டெஸ்ட் போட்டிக்கும் அதிகமாக விளையாடாத வீரர்களை கூட அணியில் வைத்தி ருக்கிறோம்.

மேலும், அதிக டெஸ்ட் போட்டிகளை விளையாடும் பட்சத்தில் அவர்கள் விரைவில் கற்றுக் கொள்வார்கள் என்று கூறியுள்ளார். (க)

# இந்திய அணிக்கு திரும்பிய யுவராஜை வாழ்த்திய காதலி



இந்திய அணிக்கு மீண்டும் திரும்பியுள்ள யுவராஜ் சிங்கிற்கு அவரது காதலி மற்றும் வருங்கால மனைவியான ஹேசல் கீச் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மோசமான போர்ம்காரணமாக நீண்டகாலமாக இந்திய அணியில் இடம்பிடிக்க முடியாமல் யுவராஜ் சிங் தவித்து வந்தார்.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் செலலும் இந்திய இருபது-20 அணியில் யுவராஜ் சிங்கிற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடிய காரணத்தில் அவருக்கு இந்த வாய்ப்பை இந்திய கிரிக்கெட் ச,பை வழங்கியுள்ளது. இதற்கு யுவராஜின் காதலி ஹேசல் கீச் தனது மகிழ்ச்சியை டுவிட்டரில் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் கூறுகையில், இந்த செய்தியை கேட்டு எனக்கு சிலிர்ப்பாகவும், உற்சாகமாகவும் இருந்தது. இது அவரின் உழைப்பு, பொறுமை, கடின உழைப்புக்கு கிடைத்த பரிசு. வாழ்த்துக்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் தான் யுவராஜ் சிங்கும் இங்கிலாந்து நடிகையும் மொடல் அழகியுமான ஹேசல் கீச்சும் இந்தோனேஷியாவில் உள்ள பாலி தீவில் ரகசிய நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர். (க)

# அரசியல் கைதிகளின் தடை உத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் 27 பேரின் தடை உத்தரவு மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.**

அரசியல் கைதிகளை கொழும்பு புதுக்கடை பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியதை அடுத்து அவர்களை எதிர்வரும் ஜனவரி நான்காம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய 27 அரசியல் கைதிகளில் 8 பேர்சிங்கள கைதிகளாவர். சட்டத்தரணிகளின ஆட்சேபனையை அடுத்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 சிங்கள கைதிகள் தொடர்பான மேலதிக புலனாய்வு அறிக்கையை எதிர்வரும் ஜனவரி நான்காம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார.பிரான்ஸிலுள்ள ரூபன்என்பவருடன்தொலைபேசியில் பேசியமை தொடர்பில் குறித்த 8 கைதிகளும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கைதிகள் சார்பில் ஆஜ ரான சட்டத்தரணி தெரிவித்தார்.(இ-7)

## ஈழத்துச் சிதம்பர தரிசனம்

சிதம்பரத்தில் வலம் வந்து தொழ வாழ்வு மலரும்

திண்ணபுர சுந்தரேசனின் தரிசனம் கண்டாலே
தேடற் கரிய செல்வமெலாம் பெருகி வரும்
எண்ணியவை நடந்தே ஏக்கமெலாம் தீரும்
ஈழத்து சிதம்பரத்தை நாடித்தொழ புண்ணியம் பெருகும்
வண்ணமாதரெலாம் வலம் வந்து சிவன் புகழ் பாட
வையமெலாம் வளமோங்கி நலன் காணும்
பண்ணிய பாவமெலாம் போயொழிந்திடும்
பணிவோம் திண்ணபுர ஈசனின் பாதம் தொழுவோம் வாரீர்

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்-
(இன்று (22/12/2015) செவ்வாய்க்கிழமை
6வது நாள் திருவெம்பாவை)

சி-3031

## புகையிரதம் முன்பாய்ந்து இளைஞன் பலி!

(கொழும்பு)

அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்து கொண்டிருந்த புகையிரதம் முன் பாய்ந்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கல்கமுவ தபால் அலுவலகத்திற்கு அருகே உள்ள புகையிரதக் கடவை முன்பாகவே குறித்த இளைஞன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

கிரிபாவ பகுதியைச் சேர்ந்த 18 வயதான இந்த இளைஞனின் சடலம் கல்கமுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

### தனியார் வைத்தியசாலைகளில்

## சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு விலைப்பட்டியல் வழங்க வேண்டும்

தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோயாளிகளுக்கு கட்டாயம் முழு விபரங்கள் அடங்கிய விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டியது கட்டாயமாக்கபட்டுள்ளது என இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

நோயாளிக்கு வழங்கப்பட்ட மருந்து மாத்திரைகளின் அளவு, அதற்கான விலைகள், விற்றமின் வகைகளின் பெயர்கள், அதன் அளவுகள் மற்றும் விலைகள், சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், கருவிகள், அதற்கான கட்டணங்கள் உள்ளிட்ட சகல விபரங்களையும் உள்ளடக்கி விலைப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

இந்த உத்தரவினை மீறிச் செயற்படும் தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக நுகர்வோர் விவகார சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தனியார் வைத்தியசாலைகளில் பதிவு செய்யும் பேரவைக்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

பல தனியார் வைத்திய சாலைகளில் நோயாளிகளுக்கு முழு விபரங்கள் அடங்கிய விலைப்பட்டியல்களை வழங்குவதில்லை எனவும் இதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் கூடுதல் விலையை அறவீடு செய்வதாக அடிக்கடி முறைப்பாடு செய்யப்படுவதாக மேலும் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளை கவனததற் கொண்டு, இந்த புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் 10(1)(அ) சரத்தின் அடிப்படையில் தனியார் வைத்திய சாலைகள் நோயாளிகளுக்கு பூரண விபரங்கள் அடங்கிய விலைப்பட்டியல் வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
21.08.1924

மறைவு
22.11.2015

**சபாரட்ணம் கனகரெத்தினம்**

(பிரதம காசாளர்- ஐக்கிய வியாபார சங்கம்- யாழ்ப்பாணம்),

கடந்த 22/11/2015 ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சபாரட்ணம் கனகரெத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 22/12/2015 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி,குறுஞ்செய்தி, இணையம் ஊடாக ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் பத்திரிகைகள்,துண்டுப்பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

616/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

(2935)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

16ஆவது அகவை தனில் பல்கிப் பெருகிடும் பொக்கிஷங்களைத் தன்னகத்தே சுமந்து வந்து மூலைமுடுக்கெங்கிலும் முரசொலி எழுப்பிடும் வலம்புரியின் உன்னதமான, உண்மையான பணிக்கு இதயம் நிறைந்த வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றோம். நேர்மை,உண்மை யதார்த்தமான தகவல்களை உடனுக்குடன் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தி நிறைவான கருத்துக்களை மிக நெருக்கடியான காலத்திலும் தளர்வின்றி வழங்கி வந்த வலம்புரியின் பணியானது அன்பு நிறைந்த வாசகர்களை தன்வசம் இழுத்து நாட்டு நடப்புக்களை செப்பிடும் அதி நிறைவான நாளிதழ் எனின் அது மிகையாகாது.

யாவராயினும் தன் பணிதனை இன்றே செய்க அவற்றை நன்றே செய்க என்ற உயரிய சிந்தனை நோக்கோடு பாரினில் பரிணமிக்கும் பல்துறைசார் தகவல்களைத் தாங்கி வந்து வாசகர்கள் கையினில் தவழ்ந்திடும் உன்பணி 16 ஆண்டுகள் மட்டுமல்ல பலகோடி நூறாண்டுகள் மாண்புடன் மிளிர எம் இனிய நல்வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றோம்.

**தலைவர்,பணிப்பாளர்கள், பணியாளர்கள்,இல்லக் குழந்தைகள்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,ஜெயந்திநகர்,கிளிநொச்சி.**

## ராசி பலன்

22.12.2015

(மார்கழி 06, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு,
துவாதசி முன்னிரவு 9.54 மணிவரை
பரணி பிற்பகல் 3.53 மணிவரை
இராகுகாலம் 3.25-4.55 மணிவரை
சுபநேரம் 10.55-12.25 மணிவரை
கார்த்திகை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம், சித்திரை<br>இரவு 9.05 இற்கு<br>இட-சந் | | |
| சூரி<br>புத | சனி | சுக் | குரு<br>ராகு<br>செவ் |

**மீனம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சுப செலவுகள் கூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைச்சுமை கூடும் நாள், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**இடபம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் நாட்டம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் பொறுமையாக இருப்பது நல்லது.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** பொன்னான நாள், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கிடைக்கும்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**சிம்மம்:** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்தியுண்டு.

**தனுசு:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம், பிரயாண பயமுண்டு.


# சண்டிலிப்பாயில் பழைமையான தமிழ்க்கல்வெட்டு கண்டுபிடிப்பு

வட இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களை கண்டறியும் நோக்கில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவு மாணவர்கள் சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலை மதிலில் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்றை அடையாளம் கண்டுள்ளனர். இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் பொறிக்கப்பட்ட இக் கல்வெட்டு நன்கு வடிவமைக்கப்பட்ட 3 அடி நீளமும், 1 1/2 அடி அகலமும் கொண்ட கற்பலகையில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல் வெட்டு வாசகத்தின் பொருள் பின்வருமாறு:



**'இவ்வித்தியாலயமும், தண்ணிர்த் தொட்டியும், சுப்பிரமணியர் பாரியார் சிதம்பரத்தின் உபயம்'** என்பதாகும்.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் குடும்பத்தினர் 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இக்கல்லூரி, தணணீர் தொட்டியுடன் பிற இடங்களில் மடங்கள், ஆலயங்கள், இடுகாடுகள் சுமைதாங்கிகள், ஆவுரஞ்சிக் கற்கள், கேணிகள் என்பவற்றையும் தமது குடும்பத்தாரின் நினைவாக அமைத்துக் கொடுத்துள்ளனர். அவ்வாறு அமைக்கப்பட்ட சின்னங்களில் அவை யாரின் பெயரில் நன்கொடைகள் வழங்கப்பட்டன என்ற விபரங்களும் கல்வெட்டுக்களில் பொறித்ததாகவும் அறிய முடிகிறது. ஆயினும் அவற்றை உறுதி செய்யும் ஒரேயொரு கல்வெட்டாக சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலை மதிலில் வைத்துக் கட்டப் பட்டிருக்கும் இக் கல்வெட்டுக் காணப்படுகிறது.19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிறிய கட்டடங்களுடன் தொடங்கப்பட்ட இப்பாடசாலைக்கு ஆரம்பத்தில் சுற்று மதில் இருக்கவில்லை.



ஆனால் பிற்காலத் தில் சுற்று மதில் அமைக் கப்பட்ட போது இக் கல்வெட் டையும் பாதுகாக்கும் நோக் கில் மதிலுடன் இணைத்துக் கட்டப்பட்டதால் தற்காலத் திலும் அக்கல்வெட்டு பாதுகாப்பாக காணப்படுகிறது.


இக்கல்வெட்டுக் காணப்படும் இடத்திற்கு அருகே சுமை தாங்கிக் கல், ஆவுரஞ்சிக்கல், கேணி என்பனவும் காணப்படுகின்றன. இவை எப்போது, யாரால் அமைக்கப்பட்டன என்பதை அறிய முடியவில்லை. ஆனால் சங்க காலத்தில் போர்வீரர், பொது நன்மைத் தியாகிகள், சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களுக்கு அமைக்கப்பட்ட நடு கற்களின் இன்னொரு கட்ட வளர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் சுமை தாங்கிக் கல், ஆவுரஞ்சிக் கல், கேணி என்பன அமைக்கப்பட்டன.

அவையனைத்தும் ஒன்று சேர சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகே காணப்படுவது பண்டைய காலத்தில் இவ்விடம் மக்கள் ஒன்று சேரும் முக்கிய மையமாக இருந்ததற்குச் சான்றாகும் என யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தொல்லியல் ஆய்வு வட்டத்தினர் குறிபபிட்டுள்ளனர். (இ-7)

# சைகைமொழி மாற்றப்படுவதற்கு எழுந்துள்ள எதிர்ப்பை உரியவர்களிடம் தெரிவித்து தீர்வைப் பெற நடவடிக்கை எடுப்பேன்

## வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் வாக்குறுதி





செவிப்புலன் வலுவற்ற மாற்றுத்திறனாளிகளினால் பலதசாப்தங்களாக பயன்படுத்தப்பட்டு வரும் சைகை மொழியில் மத்திய அரசு மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது. இது செவிப்புலனற்ற மாற்றுத் திறனாளிகள் மத்தியில் பல எதிர்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த பிரச்சினை தொடர்பாக எமது எம்.பிக்கள் மற்றும் முதல்வரூடாக மத்திய அரசுடன் பேசி உரியநடவடிக்கை எடுக்க முயற்சிப்பேன் என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

யாழ்.கலட்டி, சீனியர் வீதியில் அமைந்துள்ள செவிபபுலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட்ட நத்தார் விழாவில் விருந்தினராகக கலந்துகொண்டு பேசும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக்கழகமானது கிட்டத்தட்ட 30 வருடமாக சுமார் 600 அங்கத்தவர்களுடன், அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக உழைக்கும் உயரிய நோக்கத்தோடு இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் நத்தார் விழாவில் கலந்து கொண்டுள்ளமை மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இயற்கையாலும் போராலும் எம்மக்களில பலர் செவிப்புலன் வலுவற்றவர்களாக மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில் இச்சங்கத்தின் பணி மிகவும் போற்றுதலுக்குரியது. ஆயினும் இங்கு பேசிய பலரும் தம்முடைய பல மனக்குறைகளை வெளிப்படுத்தியுள்ளனர். தாம் தனியாக பல அரசநிறுவனங்களுக்குசேவைகளைப் பெறச் செல்லும் போது ஏளனமாக நோக்குவதாகவும், தொடர்பாடல் பிரச்சினை காரணமாக சேவைகளை இலகுவாக பெற முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இப்பிரச்சினையை எமது மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் நிச்சயமாகத்தீர்க்க முடியும். அதைவிட தாம் பல தசாப்தங்களாக பயின்று பயன்படுத்திவரும் சைகை மொழியில் மாற்றங்களை ஏற்படுத்த இருப்பதாக அறிய வந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இம்மொழி மாற்றம் இடம் பெற்றால் முன்னைய மொழியில் கல்விகற்ற அனைவரையுமே இது முடக்கி விடும். அவர்களின் வாழ்வே இல்லாது போய்விடும். இருப்பே முடங்கிவிடும். நாம் மொழி தெரியாத இடத்துக்குப்போனால் சைகை யைத்தான் பயனபடுத்துவோம். ஆனால் அந்த சைகை மொழியே மாற்றமடைந்தால் என்ன செய்ய முடியும். அதே போன்ற ஒரு பிரச்சினையை இவரகள் எதிர்நோக்குவதாக காணப் படுகிறது. இது எமது வடக்கு மாகாணசபையூடாக தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினையாக இல்லாதபடியால் இப்பிரச்சினையை மத்திய அரசிடம் பேசியே தீர்க்க முடியும். இப்பிரச்சினை சம்பந்தமாக எமது முதல்வர் மற்றும் எமது நாடாளுமன்ற உறுப்பினர் களூடாக மத்திய அரசிடம் பேசி, இப்பிரச்சினையைத் தெரியப்படுத்தி தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க முயற்சிப்பேன் என இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின் றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. மாகாணசபை உறுப் பினருடன் வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம், அமெரிக்கன திருச்சபை போதகர் டானியல், நிறுவன உறுபபினர்கள், பொதுமக்கள் என்ப பலரும் கலந்து கொண்டனர்.(இ-7)

# நல்லவர்களைக் காண்பதே மிகவும் அரிதாகிப்போகிறது

## யாழ்.ஆயர் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் வல்லவர்களை காண்கிறோம். ஆனால் நல்லவர்களை காண்பது மிகவும் அரிதாகிப் போகின்றது என யாழ்.மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் பீ.ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.**

தேசிய நத்தார் பண்டிகை நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் யாழ்.மாநகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

தேசிய நத்தார் தினம் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக நடைபெறுகிறது. அனைத்து மக்களுக்கிடையில் சமாதானம் வருவதற்காக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

நத்தார் விழா அனைவருக்கும் மகிழ்ச்சியான விழா. கடவுள்மண்ணில்தன்மகனை அனுப்பி மனிதன் இந்த உலகத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதை காட்டித் தந்துள்ளார் .இரக்கத்தோடு மற்றவர்களை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்து வாழவேண்டும் என கூறியுள்ளார்.

இறைவன் வாழ்ந்து காட்டினார் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்றால் மன்னித்து இரக்கம் காட்டுபவனாகவும் தேவைகளை உதவிசெய்பவர்களாக இருக்க வேண்டும் எனகடவுள் மனித உருவில் வந்து சொல்லியிருக்கிறார். அதை கடைப்பிடிக்க வேண்டும்.

ஒருகாலத்தில் பண்புள்ளவர்கள் நல்லவர்கள் உள்ள இடம் என பேர் பெற்ற யாழ்ப்பாணம் இப்போது அந்த நிலையில் இருக் கிறதா?என சிநதித்து எமது வாழ்வை மாற்றியமைக்கவேண்டும் என அவா மேலும் தெரிவித்தார். (இ-9)




# திருத்தி வாசிக்கவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைதிறந்தபல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் 20.12. 2015 திகதிய பக்கம் 11இல் பிரசுரிக்கப்பட்டவிளம்பரத்தில் முகாமைத்துவ பட்டநெறிக்கான (B.M.S) கல்வித்தகைமை எம்மால் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் க.பொ.த.உ/தரப் பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று (3) பாடங்கள் சித்தியடைந்திருத் தல் வேண்டும் என்பதே சரியானதாகும். இதை அனைவரும் திருத்தி வாசிக்கவும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே. கந்தவேல் அறிவித்துள்ளார். (இ-7)

# தென்கிழக்குப் பல்கலை மாணவர்கள் போராட்டம்

(கொழும்பு)

**தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.**





இந்த போராட்டம் நேற்றுக காலை 9.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

"எங்களுக்கு போதியளவு வசதிகள் இல்லை. எமது பல்கலைக்கழக அமைவிடமும் பொருத்தமானதாக இல்லை. இது பற்றி கடந்த அரசாங்கத்திடமும் இந்த நல்லாட்சி அரசாங்கத்திடமும் எழுத்து மூலமாக பல கோரிக்கைகளை, பல தடவைகள முன்வைத்தோம்.

ஆனால் அதற்கான எந்விதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

மூடி மறைக்கவே பார்க்கிறார்கள், தீர்வை பெற்றுத்தரவில்லை.

கடந்த 10ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தோம். அதற்கான தீர்வு கிடைக்காதமை யினாலேயே மீண்டும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

இதற்கும் தீர்வு கிடைக்காவிடின் மேலும் போராட்டங்களை தொடர்ந்து நடத்துவோம் என்று தெரிவித்தனர்.

இந்த பல்கலைக்கழகத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் பலர் கல்வி கற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் ஊடகவியலாளர்களுக்கு மோ.சைக்கிள்

ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படவுள்ள தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்களை தவணைக் கொடுப்பனவு முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் வழங்குவது தொடர்பில் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் சுமார் இரண்டாயிரம் ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களுக்கான தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்களை ஒரே தடவையில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வசதியற்றிருப்பதால் தவணை முறையில் அதன் கட்டணத்தை செலுத்த அனுமதி கோரி மனு செய்துள்ளனர்.

இதனை ஏற்றுக் கொண்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க, ஊடகவியலாளர்களுக்கான மோட்டார் சைக்கிள்களை தவணைக்கட்டண அடிப்படையில் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## 61 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் 61 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா 3 தினங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான மண்டபத்தில் மேற்படி விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதற்கமைய நாளை புதன்கிழமை ஆரம்ப நிகழ்வானது இலங்கை மத்திய வங்கி வடமாகாண முகாமையாளர் பாலகிருஸ்ணன் சிவதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தா மு.சுந்தரலிங்கம் திருவாசக திருமுறைகளை ஓதவுள்ளார். பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் சொற்பொழிவு வழங்கவுள்ளார்.

தொடர்ந்து காரைநகர் மணிவாசகர் சபை அண்மையில் நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் அதி விசேட சித்திபெற்ற மாணவர்கள் ஐவருக்கு தங்கப்பதக்கம், பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வின் 2 ஆம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சைவபரிபாலன முன்னாள் சபைத் தலைவரும் சைவப்புலவர் சங்கத் தலைவருமான சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையினை ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார். சொற்பொழிவினை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், பண்டிதை கலாபூஷணம் யோகலட்சுமி சோமசுந்தரம்



ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய சைவ சமயப் பரீட்சையில் விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இரவு 8 மணிக்கு சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையினை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் வழங்கவுள்ளார்.

சொற்பொழிவுகளை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், காரைநகர் மணிவாசகர் சபை முன்னாள் செயலாளர் சிவநெறிச் செல்வர் சிவத்தமிழ்க் காவலர் ஆ.செந்தில்நாதன் நிகழ்த்தவுள்ளனர். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா:30 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/3526

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 32சூரிசெவ் 8 இல்
உயரம்: 5’10"
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/3529

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 14 செவ் இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:BBC/உதவிகணக்காளர் அவுஸ்ரேலியா PR
தொ.இ: B/3533

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 34
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: B/3536

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 28செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/3818

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 33செவ் 1 இல்
உயரம்: 5’2’
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/3827

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 34
உயரம்: 5’
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/3835

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 46
உயரம்: 5’2’
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3837

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# மீள்குடியேறுவதற்கு 748 குடும்பங்கள் பதிவாகின

## கிளி. அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் 748 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான பதிவுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 2009 ஆம் ஆண்டின் இறுதி முதல் மீள்குடியேற் றப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் 748 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்து பதிவுகளை மேற் கொண்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 129 குடும்பங்களின் காணிகளும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 16 குடும்பங்களுக்கு சொந்தமான காணிகளும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இரணைதீவு மட்டுவில் நாடு பகுதியில் பத்து குடும்பங்களின் காணிகளுமாக மொத் தம் 346 காணிகள் படையினரின் கட்டுப் பாட்டின் கீழ் காணப்படுகின்றன.

இதற்கமைய கரைச்சிப் பிரதேச செய லாளர் பிரிவின் கீழ் 129 குடும்பங்களும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 16 குடும்பங்களும் பூநகரி செயலாளர் பிரிவின் கீழ் 346 குடும்பங்களும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 257 குடும்பங்களுமாக மொத்தம் 748 குடும் பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இவர்களில் 449 குடும்பங்கள் கிளி நொச்சியிலும், 229 குடும்பங்கள் மாவட்டத் திற்கு வெளியிலும் மற்றும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் வாடகை வீடுகளி லும் வாழ்ந்து வருகின்றன.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இத்தாவில் முகமாலை, வேம்பொடுகேணி உள்ளிட்ட பகுதிகளில் வெடிபொருள் அச்சம் காரண மாக 257 குடும்பங்கள் மீள்குடியேற முடியாத நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (2-281)

# கால்நடைகளை கட்டி வளர்க்குக

## கலந்துரையாடலில் வலியுறுத்து

அக்கராயன் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள வயல் பிரதேசங்களினுள் கட்டாக் காலி கால்நடைகள் உள்நுழைந்து பயிர் அழிவை ஏற்படுத்தி வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து கட்டாக்காலி கால்நடை கள் கட்டுப்பாடின்றி பயிரழிவை ஏற்படுத்தி வருவதைக் கருத்திற்கொண்டு கடந்த 18 ஆம் திகதி அக்கராயன் கமநல சேவை நிலைய நிர்வாகத்தினரால் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலுக்கு அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர்கள், கால்நடை சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கால்நடைகளை கட்டி மேய்ச் சல் தரைகளில் விடுவது, இரவு வேளைகளில் பராமரிப்பில்லாது கால்நடைகளை வெளியில் திரிய விடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மீறி இரவு வேளைகளில் வயல் வெளிகளிலோ அல்லது பொது இடங்களிலோ அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடை களைப் பிடித்து அவற்றின் உரிமையாளர் களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (2-60)




முள்ளியவளை நண்பர்கள் கலை வட்டாரத்தின் ஏற்பாட்டில் முல்லை. மைந்தர்களின் படைப்பில் உருவாக்கப்பட்ட செருப்பு குறுந்திரைப்படத்தின் வெளியீட்டுவிழா அண்மையில் முள்ளியவளை மத்திய பொது நோக்கு மண்டபத்தில் ஆசிரியை திருமதி சாந்தி கமலகாந்தன் தலைமையில் நடைபெற்ற போது... (படம் பனிக்கன்குளம், முள்ளியவளை செய்தியாளர்கள்)

# முள்ளியவளை-குமுழமுனை வீதி அடுத்தாண்டு புனரமைக்கப்படும்

முள்ளியவளை - குமுழமுனை வீதி அடுத்த வருடம் புனரமைக்கப்படும் என வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி வீதியை புனரமைக்குமாறு அங்குள்ள மக்கள் வழங்கிய விண்ணப் பத்திற்கு அமைவாக, அமைச்சர் பா.டெனீஸ் வரன் அண்மையில் அங்கு நேரில் சென்று நிலைமையை பார்வையிட்ட பின்னர் அடுத்த ஆண்டு வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக குறித்த வீதியை மக்கள் போக்குவரத்துக்கு உகந்த வகையில் புனரமைத்து தருவதாக அவர் உறுதிமொழி வழங்கினார். (2)




# பகைமை உணர்வைத் தூண்டும் அனைத்து நடவடிக்கைகளும் தடைசெய்யப்பட வேண்டும்

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)

இனங்களுக்கு இடையில் முரண்பாடு களை தோற்றுவிக்கும் வகையிலான பிர சாரங்கள் முன்னெடுக்கப்படுவதை நல் லாட்சிக்கான தேசிய அரசு இனியும் அனும திக்கக் கூடாது என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத் துள்ளார். அவரது அறிக்கையில், அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை.

இலங்கையில் இனங்கள் மற்றும் சமயங் களுக்கிடையே நல்லுறவைச் சிதைத்து பிரிவினைகளை ஏற்படுத்த காலத்துக்குக் காலம் பல சக்திகள் உருவாகி எமது தேசத் துக்கும், தேசிய ஒற்றுமைக்கும் ஈடுசெய்ய முடியாத பல சேதங்களை ஏற்படுத்தியதன் விளைவை நாம் இன்று அனுபவிக்கின் றோம்.

அநாகரிமான முறையில் எவ்வித தடை களும் இன்றி வளரவிடப்பட்ட இனவாதம் மற்றும் தீவிரவாதத்தின் பிடியில் இன்று எமது பொருளாதாரம் சுமார் 50 வருடங்களால் பின்னடைந்துள்ளது.

மேலும், 'நாம் இலங்கையர்' என்ற ஒரே குடையின் கீழ் மக்களை ஒன்று திரட்டுவதில் இன்று பாரிய நெருக்கடிகளையும் எதிர் கொண்டு வருகிறோம்.

எனவே இலங்கை கைச்சாத்திட்டுள்ள ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சாசனத்தின் 20(2) ஆம் சரத்துக்கு அமைய பகைமை உணர்வைத் தூண்டும் அனைத்து நடவடிக்கை களும் இலங்கையில் தடைசெய்யப்பட வேண்டும்.

ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா உட்பட பொதுவாகவே அனைத்து ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளும், எமது அயல் நாடான இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட உலகின் பெரும்பாலான நாடுகளில் பகைமை உணர்வைத் தூண்டும் நடவடிக்கைகளைத் தடைசெய்யும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றன.

எனவே நாட்டில் நிலையான இன நல் லிணக்கத்தை உருவாக்கி மீண்டும் பயங்கர வாதம் மற்றும் இனப்பிரச்சினைகள் தோன் றாமல் இருக்க, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றவியல் தண்டனை (திருத்தம்) சட்ட மூலம் உடனடியாக நிறைவேற்றப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி, பிரதமர் தேசிய அரசாங்கத்தை யும் வேண்டிக் கொள்வதாக அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-250)

### நாடகமும் அரங்கியலும்

# கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7, 11 ஆகிய வகுப் புக்களில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசியர்களுக்கான புதிய பாடத்திட்ட செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மு/மாங்குளம் வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறுமென துணுக் காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி தரங்களில் கல்வி பயிலவுள்ள மாணவர்களுக்கு அடுத்தாண்டு தொடக்கம் நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டத் திற்கு அமைய கற்பிக்கப்படவுள்ளதால் இப் பாடத்தை கற்பிக்கின்ற அனைத்து ஆசிரியர் களும் இச் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளவேண்டுமென அவர் அறிவித்துள்ளார்.

செயலமர்விற்கு வருகை தரும் போது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள செயலமர்வு தொடர்பான கடிதங்களில் குறிப் பிடப்பட்டுள்ள உபகரணங்களையும் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# பாடசாலை கல்வியில் இருந்து 81 மாணவர்கள் இடைவிலகல்

## மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட78 பாடசாலைகளில் 23 ஆயிரத்து 588 மாண வர்கள் கல்வி பயின்று வருகின்ற நிலையில், 81 மாணவர்கள் பாடசாலை கல்வியில் இருந்து இடை விலகியுள்ளதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செபஸ்தியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட நானாட்டான் கல்வி கோட்டத்தில் 26 பாடசாலைகளில் 4ஆயிரத்து 570 மாண வர்களும் முசலி கல்வி கோட்டத்தில் 24 பாடசாலைகளில் 3 ஆயிரத்து 220 மாண வர்களும் மன்னார் கல்வி கோட்டத்தில் 38 பாடசாலைகளில் 15 ஆயிரத்து 798 மாண வர்களுமாக மொத்தம் 23 ஆயிரத்து 588 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களில் முசலி கல்வி கோட்டத்தில் 26 மாணவர்களும் மன்னார் கல்வி கோட்டத் தில் 40 மாணவர்களும் நானாட்டான் கல்வி கோட்டத்தில் 15 மாணவர்களுமாக மொத் தம் 81 மாணவர்கள் பொருளாதார பிரச்சினைகள் காரணமாகவும் மற்றும் குடும்ப வறுமை காரணமாக வும் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகி உள்ளதாக அவர் தெரிவித்தார். (2-15)

# சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை மக்களின் ஒத்துழைப்புடன் கட்டுப்படுத்த முடியும்

## பொலிஸாருடன் இணைந்து சிவில் பாதுகாப்பு செயற்பாட்டில் ஈடுபட்ட பொதுமக்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கிளி. மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு







கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸாருடன் இணைந்து சிவில் பாதுகாப்பு செயற்பாட்டில் ஈடுபட்ட பொதுமக்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

பொலிஸாருடன் இணைந்து கிராமங்களில் உருவாக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். கிராமங்களில் உள்ள சிறு குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் பொலிஸார் பொதுமக்களுடன் இணைந்து செயற்பட்டனர். அவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸாருடன் இணைந்து செயற்பட்ட பொதுமக்களுக்கு பொலிஸாரினால் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன் குறிப்பிடுகையில்,

கிராமங்களில் பொலிஸாருடன் இணைந்து செயற்படும் பொது மக்களை பாராட்டினார். இதேவேளை மாவட்டத்தில் நிலவும் சிறு குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் பொதுமக்களுடன் எடுத்த முயற்சியை பாராட்டியதுடன், பொதுமக்கள் மத்தியில் உள்ள சிவில் பாதுகாப்பு குழுக்களில் உள்ளவர்கள் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அத்துடன் குறித்த பணியில் ஈடுபடும் நபர்கள் பொது மக்கள் மத்தியில் நற் பிரஜையாக செயற்பட வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் சவாலான பிரச்சினையாக சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் காணப்படுகின்றது.

இதனை எதிர்வரும் காலங்களில் சிவில் பாதுகாப்பு குழுக்களின் ஒத்துழைப்புடனும் பொதுமக்கள், பெற்றோரின் ஒத்துழைப்புடனும் இப்பிரச்சினையை கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க முடியும்.

இதற்கு பாடசாலை கல்வியில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைப்பது பெற்றோரின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

பாடசாலைக்கு பிள்ளைகள் சமுகமளிப்பதனால் துஷ்பிரயோகங்களில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். எனவே இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

தொடர்ந்து அவர் கூறுகையில்,

கடந்த காலங்களில் பொலிஸ் சிவில் பாதுகாப்பு குழுக்களினுடைய ஒத்துழைப்புடன் சமூகவிரோத செயற்பாடுகள், சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை, இயற்கை சூழலை நாசப்படுத்தி மரங்களை வெட்டி கடத்துதல், போதைப் பொருள் பயன்பாட்டில் ஈடுபடல், ஏனைய குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களின் செயற்பாடுகள் என்பனவற்றை கட்டுப்படுத்தியுள்ளோம். எதிர்வரும் காலங்களில் இதேபோன்று சிவில் பாதுகாப்பு குழுக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுமிடத்து இப்பிரச்சினைகளை மேலும் கட்டுப்படுத்த முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (2-277-15)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான தெரிவுப் பரீட்சை வேம்படியில்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் காணப்படும் ஆசிரிய ஆலாசகர் பதவி வெற்றிடங்களுக்கான தெரிவுப் பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

முறைசாராக் கல்வி தகவல் தொழில் நுட்பம், மனைப்பொருளியல், உடற்கல்வி, இரண்டாம் மொழி சிங்களம், விசேட கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களுக்கான தெரிவு பரீட்சை நடைபெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (2-15)




# வவுனியா பிரதேச அபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடல்

(கற்குழி)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவுடன் நேற்று நண்பகல் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது அண்மையில் பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் மற்றும் மக்கள் தொடர்பாகவும் சுகாதார நிலைமை தொடர்பாகவும் பாதுகாப்பு முன்னேற்றம் பற்றியும் கலந்துரையாடியதுடன் இடம்பெயர்ந்தோர், காணி வீட்டுத் திட்டம் போன்ற பல முக்கிய மக்கள் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், மாவட்ட கட்சி அமைப்பாளர், உறுப்பினர்கள் எனப் பலதரப்பினரும் கலந்து கொண்டனர். (2-303)

# பொது மலசலகூடம் அகற்றப்பட்ட இடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம்

## பொதுமக்கள்,வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து நிலையத்திற்கு பின்புறமாக அமைக்கப்பட்டிருந்த பொது மலசலகூடம் அகற்றப்பட்ட இடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதுடன் பயணிகளும் தமது இயற்கை கடன்களை அவ்விடத்தில் கழிப்பதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் துர்நாற்றமும் வீசுவதாகவும் அப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி அரச பேருந்து நிலையத்திற்கு பின்புறமாகவிருந்த மலசலகூடம் பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்டதையடுத்து மன்னார் நகர சபையினரால் முற்றாக அகற்றப்பட்டு வேறொரு இடத்தில் பொது மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் நகர பகுதி வர்த்தக நிலையங்களில் சேருகின்ற கழிவுப் பொருட்கள் மதுபானம் அருந்துபவர்கள் வீசிவிட்டு செல்லுகின்ற வெற்றுப் போத்தல்கள்,பேருந்தில் பயணிக்கின்ற பயணிகள் அவ்விடத்தில் இயற்கை கடன்களை கழித்தல் ஆகியவற்றினாலேயே துர்நாற்றம் வீசுகின்றது.

இது தொடர்பில் பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோரினால் மன்னார் நகரசபையினர், மன்னார் அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வரப்பட்ட போதிலும் நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லையென அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

எனவே மன்னார் நகர சபையினர் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# சிதம்பரம் பழனி முருகன் கோவிலை யாத்திரை தலமாக பிரகடனப்படுத்துக

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள சிதம்பரம் பழனிமுருகன் கோவிலை யாத்திரைத் தலமாக பிரகடனப்படுத்துமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 41 ஆவது அமர்வில் சுற்றுலாத்துறை தொடர்பான விவாதம் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிதம்பரம் பழனி முருகன் கோவில் (மலைக் கோவில்) அமைந்துள்ளது.

அப் பகுதியைச் சுற்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அப்பகுதியில் பிரசித்தி பெற்ற கோவில் இருந்தும் அதை அபிவிருத்தி செய்யாமல் இருக்கும் காரணத்தால் அப்பகுதிக்கு மக்கள் சென்று வருவது குறைவாக காணப்படுகின்றது.

இக் கோவிலை யாத்திரைத் தலமாக பிரகடனப்படுத்தி அபிவிருத்தி செய்வதன் மூலம் அப்பகுதியில் உள்ள பலருக்கு வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொடுக்க முடியும்.

அத்துடன் வெளி இடங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இப்பிரசித்தி பெற்ற கோவிலைத் தரிசிக்க வரும் போது வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும்.

எனவே இது தொடர்பாக வடக்கு மாகாண சபை கூடிய கவனம் எடுத்து விரைவாக இக் கோவிலை யாத்திரைத் தலமாக பிரகடனப்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2-9)

# ஜனாதிபதி மைத்திரியால் கூட அரசைக் கலைக்க முடியாது

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**19ஆவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதியால் கூட அரசாங்கத்தை கலைக்க முடியாது எனவும் தற்போதைய அரசாங்கத்தை நான்கரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது எனவும் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

வெலிமடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் இரண்டு வாரங்களில் வங்குரோத்து நிலைக்கு சென்று கவிழ்ந்து விடும் என்ற தவறான கருத்து சிலரிடம் உள்ளது.

எனினும் அது கனவு மட்டுமே. இந்த அரசாங்கத்தை நான்கரை வருடங்களுக்குள் வீழ்த்த முடியாது. அரசாங்கத்தை கலைக்க ஜனாதிபதிக்கும் அதிகாரமில்லை.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு அமைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது. கலைக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவை எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



## பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவு இன்னும் அமுல்படுத்தப்படவில்லை

(கொழும்பு)

பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை பொலிஸ் தலைமையகம் இதுவரையில் அமுல்படுத்தவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெற்றிடமாகியுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிக்காக, எட்டு பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை நியமிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவித்திருந்தது.

சேவை மூப்பின் அடிப்படையில் எட்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இவ்வாறு பதில்பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகளை வழங்குமாறு அறிவித்திருந்தது.

இந்த உத்தரவு இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

எனினும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து கொண்டு பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இவர்கள் கடமையாற்ற வேண்டுமா அல்லது பதில் பிரதி பொலிஸ்மா அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டுமா என்பதில் பொலிஸ் தலைமையகம் குழப்பங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இதுவரையில் வெற்றிடமாகியுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியிலிருந்து கொண்டே பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியை வகித்தால் அது. இரண்டு கடமைகளையும் உரிய முறையில் செய்ய தடையாக அமையக் கூடுமென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கொழும்பு ஊடகமொன்றுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## 2,100 தொழிற்சாலைகளில் உற்பத்தியை நிறுத்த பணிப்பு

(பீஜிங்)

சீனாவில் காற்று மாசு பாடு அதிகரித்துள்ள காரணத்தால் அங்குள்ள மக்களுக்கு இரண்டாவது முறையாக சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதையடுத்து 2,100 தொழிற்சாலைகளில் உற்பத்தியை நிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து அந்நாட்டு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காற்று மாசுபாடு காரணமாக 3 வது நாளாக காற்றில் நச்சு கலந்து பனிப்புகை நிலவுகிறது. கடந்த சனிக்கிழமை முதல் நிலம் இந்த சூழ்நிலையை சமாளிக்க தலைநகர் பீஜிங்கில் இரண்டாவது முறையாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 2,100 தொழிற்சாலைகளில் நடைபெறும் உற்பத்தியை குறைக்க, சிலவற்றில் முற்றிலுமாக நிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. சீனாவின் கிழக்கு மற்றும் மத்திய சீனா சாங்டாங்-ல் பீஜிங்கில் ஹெனான் ஹெபெய், உட்பட 33 நகரங்களில் பனிப்புகை சூழ்ந்துள்ளது.

இதை 30 சதவீதம் வரை குறைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துவருவதாக நகரின் சுற்றுச் சூழல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பீஜிங்கில் கடந்த 7ஆம் திகதி முதலாவது சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மணிவிழா

தென்மராட்சி கல்வி வலய முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேலுப்பிள்ளை பாலசுப்ர மணியத்தின் மணிவிழா ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மணிவிழாவின் போது பாலாமிர்தம் என்ற மணிவிழா மலரும் வெளியிடப்படவுள்ளது. வே. பாலசுப்ரமணிம் கோப்பாய் கோட்டக் கல்வி முன்னாள் பணிப்பாளரும், கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் மற்றும் அச்சுவேலி மத்திய கல்லூரி என்பவற்றின் முன்னாள் அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இ-5-29

## கொழும்பு துறைமுக வருமானம் 5 மில்லியனை நெருங்கியுள்ளது

கொழும்பு துறைமுகத்தில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் ஏனைய துறை முகங்களின் கடன்கள் அடைக்கப்படுவதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு துறை முகத்தின் வருமானம் 5 மில்லியனை நெருங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது கொழும்பு துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை 13.1 வீதம் ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 10 இந்திய மீனவர்களையும் மறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகம் காரைக்கால் பகுதியை சேர்ந்த 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி சுப்ரமணியம் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 10 ஆம் திகதி இரவு ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்களை. யும் காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதவான் அவர்களை நேற்று 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் நேற்றைய தினம் ஆஜர்படுத் தப்பட்ட போது 2 ஆவது முறையாக எதிர் வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (இ-9)

## உலர் உணவுப் பொதிகள் முகாம் மக்களுக்கு வழங்கல்



வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கும் 56 குடும்பங்களுக்கு பருத்தித்துறையில் வைத்து உலர் உணவுப் பொருட்களை அண்மையில் வழங்கப்பட்டன.

வலம்புரிப் பத்திரிகையில் வெளியான செய்தியையடுத்து மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இருபாலை கட்டப்பிராயைச் சேர்ந்த திருலோகநாதன் என்பவரால் இந்த உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவரைப் போன்று உதவிகள் வழங்க விரும்புபவர்கள் 0773144883 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

## வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு சுன்னாகம் பிரதேச சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பிரதேச சபை செயலாளர் தியாகராஜா தியாகச்சந்திரன் அறிவித்துள்ளார்.

எனவே வரவு செலவுத் திட்ட அறிக்கையை பார்வையிடவுள்ள பொது மக்கள் இன்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.

அத்துடன் சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை போன்ற பிரதேச பொது நூலகங்களிலும் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நித்திரைக்குச் சென்ற இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

நித்திரைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் மறுநாள் காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் வடமராட்சி துன்னாலை மத்தி கோவிற் கடவையைச் சேர்ந்த சிவயோகநாதன்- சுயேந்தன் (வயது-33) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்படவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நித்திரைக்குச் சென்ற அவ் இளைஞர் நேற்றுக்காலை நித்திரை விட்டு எழும்பியதையடுத்து அவரது உறவினர்களால் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். வைத்தியசாலையில் இவ் இளைஞர் மரணமடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-5-60)











யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினரும் வங்கியாளர் சமூக திலகம் க.கைலாசப்பிள்ளை விக்னேஸ்வரனின் மணிவிழா நிகழ்வு கடந்த 19 ஆம் திகதியன்று இந்துக்கல்லூரி மண்டபத்தில் வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வரவேற்பு நடனத்தையும் நூல் வெளியீட்டினையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். -(படங்கள்:-உ.சாளின்)



# எதை... எப்போது... எப்படி சாப்பிட வேண்டும்?

Health Care மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்



நாம் சாப்பிடும் உணவு முற்றிலும் சமைக்கப்பட்டதாக இருக்கிறது. எண்ணெயில் பொரித்து, வேகவைத்து என உணவுப் பொருட்களைப் சமைக்கும்போது அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் பெரும்பாலும் அழிந்துவிடுகின்றன. சிலர். 'ஆரோக்கியத்துக்காக...' என்று கூறி வெறும் பச்சைக் காய்கறி, பழங்களை மட்டும் எடுத்துக்கொள்கின்றனர். இதுவும் தவறு. பொதுவாக சமைத்த உணவுகளை எடுத்துக்கொள்வது போல், தினசரி உணவில் சமைக்காத பச்சைக் காய்கறி பழங்களையும் எடுத்துக்கொள்ளும்படி வைத்தியர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஆரோக்கிய வாழ்வுக்கு சமைத்த உணவுகள். சமைக்காத உணவுகள், பாதிப் பக்குவப்படுத்தப்பட்ட உணவுகள் (Semi Processed food) ஆகிய மூன்று வகையான உணவுகளும்தேவை. எதை பச்சையாக எடுத்துக்கொள்வது, எதை அரை வேக்காட்டில் சாப்பிடுவது, எதை நன்கு சமைத்து சாப்பிடுவது என்பதில் பலருக்கும் பலவித குழப்பம் ஏற்படுகிறது.

## சமைத்த-உணவுகள்

ஓர் உணவை அதன் இயல்பான நிலையில் இருந்து முற்றிலும் வேறொரு நிலைக்கு மாற்ற நீரில் வேகவைத்தோ, நீராவியால் வேகவைத்தோ, எண்ணெயில் வறுத்தோ, வதக்கியோ, பதப்படுத்திகள் சேர்த்தோ, சூடுபடுத்தியோ சமைத்துச் சாப்பிடுவார்கள். இந்த உணவுகள் எல்லாம் இந்த வகையைச் சேர்ந்தவை.

தானியம், பருப்பு போன்றவற்றை அப்படியே சாப்பிட்டால். அதனை செரிக்கும் சக்தி மனிதனுக்கு கிடையாது. ஆனால், இந்த உணவுகளைச் சமைத்துச் சாப்பிடும்போது, நம் உடலில் உள்ள என்ஸைம்கள் மூலம் உணவு செரிக்கப்பட்டு, சத்துக்கள் உடலுக்குக் கிடைக்கின்றன. பொதுவாக, சமைத்த உணவுகளில் கார்போஹைட்ரேட் அதிக அளவில் இருக்கும். இதுதான் நமக்கு ஆற்றலைத் தருகிறது. எனவேதான், 'தினமும் காபோ ஹைதரேட் நிறைந்த உணவுகளை 55 - 65 சதவிகிதம் வரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள் வைத்தியர்கள்.

சமைத்த உணவுகளை அனைவருமே சாப்பிடலாம். செரிமானத்துக்கு ஏற்றது. குறிப்பாக, எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கும் நன்றாகச் சமைத்த உணவுகளே ஏற்றவை. உணவு நன்றாகச் சமைக்கப்படும்போது, நார்ச்சத்து, புரதச்சத்து போன்றவை ஓரளவுக்கு உடலுக்குக் கிடைக்குமு. எனினும், விற்றமின்கள், ஆன்டி ஒட்சிசன்கள் முதலான நுண்ணூட்டச் சத்துக்கள் மிகக் குறைவாகவே கிடைக்கும். எனவே, பாதி பக்குவப்படுத்தப்பட்ட உணவுகள், சமைக்காத உணவுகள் போன்றவற்றைக் கண்டிப்பாக உட்கொள்ள வேண்டும்.

## பாதி பக்குவப்படுத்தப்பட்ட உணவுகள்

அரை வேக்காட்டில் சமைக்கப்பட்ட உணவுகளுக்கும், பாதிப் பக்குவப்படுத்தப்பட்ட உணவுகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. அரை வேக்காட்டில் சமைக்கப்பட்ட உணவுகள் அனைத்துமே சமைக்கப்பட்ட / சமைத்த உணவுகள் என்ற வகையையே சேரும்.

பச்சைப் பயறை நீரில் ஊற வைத்து. அடுத்த நாள் முளை விட்ட பிறகு பச்சையாகச் சாப்பிடுவதை பாதி பக்குவப்படுத்தப்பட்ட உணவு என்கிறோம். இந்த முறையில் தண்ணீரில் ஊறவைக்கப்படுவதால் பல புதிய நுண்ணூட்டச்சத்துக்கள் கிடைக்கும். உதாரணத்துக்கு, பாதாம் பருப்பில் புரதச்சத்து அதிகம் விற்றமின் சி குறைவு. பாதாம் பருப்பை இரவில் தண்ணீரில் ஊறவைத்து, மறுநாள் காலையில் சாப்பிடும்போது, விற்றமின் சி அதிகம் கிடைக்கும். பாதாம், பிஸ்தா முதலான நட்ஸ் வகைகளைத் தண்ணீரில் ஊறவைத்துச் சாப்பிடுவதே சிறந்தது. பாலில் இருநது கிடைக்கும் தயிர் முதலான உணவுகள், அரிசியில் இருந்து கிடைக்கும் அவல் பொரி போன்றவையும் இந்த வகையில் சேரும். முளை கட்டிய பயறு தான் மிகச் சிறந்த பாதி பக்குவப்படுத்தப்பட்ட உணவு.

இந்த வகை உணவில் பெரும்பாலும் புரதச்சத்து அதிகம் நிறைந்திருக்கும். உடலுக்குத் தேவையான ஆற்றலுக்கும் தசை வலுவுக்கும் புரதச்சத்து மிகவும் அவசியம்.



பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகள மற்றும் இளைஞர்கள், அன்றாடம் இந்த வகை உணவுகளை மூன்றில் ஒரு பங்கு எடுத்துக்கொள்வது நல்லது. நொறுக்குத் தீனிகளுக்குப் பதில், பாதி பக்குவப் படுத்தப்ட உணவுகளைச்சாப்பிடலாம்

## சமைக்காத உணவுகள்

ஓர் உணவுப்பொருளை அதன் தன்மையை மாற்றாமல், வேறொரு உணவுப்பொருளோடு கலக்காமல், அப்படியே சாப்பிட ஏற்ற உணவுகள் அனைத்துமே 'சமைக்காத உணவுகள்' என்ற வகையைச் சேரும்.

விலங்கு, தாவரம் முதலியவற்றில் இருந்து கிடைக்கும் உணவுகள் அனைத்துமே சமைக்காத உணவுகளே. ஆனால், இவற்றில் பெரும்பாலான உணவுகளை, செரிமானப் பிரச்சினையைத் தடுக்க, சமைத்துத்தான் சாப்பிட வேண்டியிருக்கும். எனினும், இலை, கிழங்கு வகைகளைத் தவிர்த்த மற்ற காய்கறிகளை நாம் சமைக்காமலேயே சாப்பிடலாம். பழங்களை சமைக்க வேண்டும்என்ற அவசியமே இல்லை. அது சாப்பிட ஏற்ற வகையில்தான் கனிந்திருக்கிறது. மீன், இறைச்சி போன்றவற்றை நன்கு ஆவியிலோ, நீரிலோ வேக வைத்துதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சமைக்காத உணவுகளில் தான நார்ச்சத்து, மாவுச்சத்து, விற்றமின்கள், ஆன்டி ஒட்சிசன்கள், தாது உப்புகள்முதலான நுண்ஹூட்டச்சத்துக்கள் நிறைந்திருக்கின்றன.

காய்கறிகள், பழங்கள் போன்ற சமைக்காத உணவுகளை அனைவருமே சாப்பிடலாம். எனினும், ஏதாவது சில உணவுகள் செரிமானக் கோளாறை ஏற்படுத்துகிறது எனில், குறிப்பிட்ட அந்த உணவை தவிர்ப்பது சிறநதது. காய்கறிகள், பழங்கள் போன்றவற்றில் ஏதேனும் ஒரு பாகம் அழுகி இருந்தாலோ, அதன் தோல் உரிந்திருந்தாலோ, அவற்றை நேரடியாகச் சாப்பிடுவதைத் தவிர்த்து, சமைத்துச் சாப்பிடுவதே நல்லது.

# சீனாவில் பாரிய நிலச்சரிவால் 33 கட்டடங்கள் மண்ணுக்குள்

## 91 பேரைக் காணவில்லை



(பீஜிங்)

தெற்கு சீனாவில் ஹாங்காங் நகரின் எல்லையோரமுள்ள குவாங் டாங் மாகாணத்தின் ஷென்ஸேன் நகரில் உள்ள தொழிற்பூங்காவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய 91 பேரின் கதி என்னவானது என்று இதுவரை தெரியவில்லை.

விபத்து நடந்த தொழிற்பூங் காவில் கடந்த 2 ஆண்டுகளாக கட்டடங்கள் கட்டுவதற்காக தோண் டப்பட்ட மண் மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருந்ததாகவும். நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத் தால் கட்டட இடிபாடுகளுடன் கலந் திருந்த அந்த மண்மேடு சரிந்து அருகில் உள்ள 33 கட்டடங்களை மூடிவிட்டதாகவும் தெரியவந்துள் ளது. சுமார் 60 ஆயிரம் சதுரமீற்றர் பரப்பளவில் உள்ள கட்டடங்கள் இந்த நிலச்சரிவால் புதைந்து போய் கிடக்கின்றன.

இடிபாடுகளில் இருந்து சுமார் ஆயிரம் பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில் 59 ஆண்கள், 32 பெண் கள் என மொத்தம் 91 பேரை காணவில்லை என்று சீன அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் வடமேற்கு மாகாண மான கான்ஸாவில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட மோசமான நிலச்சரிவால் மலைப்பகுதியில் இருந்து ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான மக்கள் பலியானது நினைவிருக் கலாம். (இ-7)

# சிரியா போரை நிறுத்த புதிய அமைதித்திட்டம்

## ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**சிரியாவில் உள்நாட்டுப் போரை நிறுத்த ஐ.நா. சபை சார்பில் புதிய அமைதித் திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்பான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நேற்று முன்தினம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

சிரியாவில் ஷியா, சன்னி முஸ் லிம்களுக்கு இடையே நீண்ட கால மாக மோதல் நீடித்து வருகிறது. அங்கு சன்னி முஸ்லிம்கள் பெரும் பான்மையாக உள்ளனர். தற் போதைய ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்.

அவருக்கு எதிராக சன்னி பிரி வைச் சேர்ந்த ஐ.எஸ். தீவிரவாதி கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றனர். சிரியாவின் 70 சதவீத பகுதிகள் ஐ.எஸ். கட்டுப் பாட்டில் உள்ளன.

அல்-கொய்தா ஆதரவு அமைப் பான அல்-நஸ்ரா முன்னணி தீவிர வாதிகளும் அரசுக்கு எதிராக தனி யாக போரில் ஈடுபட்டுள்ளனர்.

இவை தவிர மிதவாத எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களும் சிரியாவில் செயற்படுகின்றன. அந்த குழுக் களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. ஜனாதிபதி ஆசாத்துக்கு ஆதரவளிக்கும் ரஷ்யா, அங்கு இரா ணுவ முகாம்களை அமைத்துள்ளது. ஐ.நா. சபை கணக்கீட்டின்படி சிரியா வில் சுமார் 160 கிளர்ச்சிக் குழுக் கள் செயற்படுகின்றன.

இந்நிலையில் அந்த நாட்டில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. பாதுகாப்பு சபை சார்பில் புதிய அமைதித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஐ.எஸ்., அல்-நஸ்ரா முன்னணியைத் தவிர்த்து இதர அரசியல் கட்சிகள் மற்றும் கிளர்ச்சிக் குழுக்களை ஒன்றிணைத்து சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)

# வான் தாக்குதலில் 42 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடமேற்குப் பகுதி யில் சிரிய-அரச எதிர்ப்புக் கிளர்ச்சி யாளர்களின் கட்டுப்பாட்டில் இருக் கும் நகரான இத்லிப் நகரில் நடந்த தொடர் வான் தாக்குதல்களில் 42 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு சந்தை, குடியிருப்புகள் மற்றும் அலுவலக கட்டடங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இதுவரை 43 பேர் உயிரிழந் திருப்பது உறுதி செய்யப்பட்டிருப் பதாக மீட்புப்பணிகளில் ஈடுபட் டவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் இடிபாடுகளுக்கு இடை யில் இருந்து இன்னமும் சடலங் கள் கண்டெடுக்கப்படுவது தொடர்வ தால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (இ-7)

# இந்தோனேஷியா நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(ஜகார்தா)

இந்தோனேஷியாவில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இந்தோனேஷியா வில் உள்ள போர்னியோ தீவுப் பகுதியை மையமாகக் கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6 ஆக பதிவானது. நில நடுக்கத்தால் கட்டடங்கள் குலுங் கியதால், பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப் புகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து உடனடியாக தகவல் ஏதும் இல்லை.

தீவுப்பகுதிகளால் நிறைந்த இந்தோனேஷியா, பசுபிக் கடலின் ரிங் ஆப் ஃபயர் என்று அழைக்கக் கூடிய டெக்டானிக் அடுக்குகள் மோதிக் கொள்ளும் இடத்தில் அமைந்துள்ள தால், அங்கு நிலநடுக்கம் ஏற்படுவது வாடிக்கையான ஒன்றாக அமைந் துள்ளது. கடந்த மாதம் 6.1 என்றள வில் கிழக்கு இந்தோனேஷியாவில் கடலை மையமாகக்கொண்டு நில நடுக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் சில மணி நேரங்களில் 6.2 ஆக ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. (இ-7)




# தாய்லாந்தில் பேருந்து விபத்தில் சுற்றுலா பயணிகள் 13 பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் நேற்று சுற்றுலாப் பயணிகள் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் பலி யாகியுள்ளனர்.

தாய்லாந்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஷாங்மை நகரத் தில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள டோய் சாகெத் மாவட்டத்தில் இந்த விபத்து நடந் துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பேருந்து, எதிரே வந்த மற்றொரு வாகனத்துடன் மோதி யது. பின் வீதியில் இருந்து விலகிச் சென்று விபத்துக்குள்ளானதில் பேருந் தில் இருந்த 13 பயணிகள் உயி ரிழந்தனர்.

இவர்கள் அனைவரும் தாய் லாந்து மற்றும் மலேசிய சீனர்கள் என்று தாய்லாந்து பொலிஸ் தெரி வித்துள்ளது. (இ-7)

# அணுஆயுதங்களை தரம் உயர்த்துவோம் போராயுதமாகப் பயன்படுத்த மாட்டோம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின்



(மொஸ்கோ)

உலகம் முழுவதும் அணு ஆயுத பரவலுக்கு எதிராக குரல் எழுப்பி வரும் வேளையில் ரஷ்யா தொடர்ந்து அணு ஆயுதங்களை தரம் உயர்த் தும் பணியில் ஈடுபடும் என அந் நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

'உலக ஒழுங்கு' என்ற தலைப் பில் ரஷ்ய அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒளிபரப்பிய ஆவணப்படத்தில் தனது கருத்தை பதிவு செய்திருக் கும் புடின், 'அணு ஆயுதங்களை வைத்திருக்கும் முக்கியமான நாடு என்ற முறையில் ஒரு வரைமுறைக்கு உட்பட்டு அணு ஆயுதங்களை தரம் உயர்த்தும் பணிகள் எப்போதும் போல் தொடர்ந்து நடைபெறும்.

அணு குண்டுகள், கண்டம் விட்டு கண்டம் தாவும் அணு ஏவுகணைகள் மற்றும் நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஏவப்படும் அணு ஆயுதங்கள் போன்றவை எங்களது அணு பாதுகாப்பு தொடர்பான கொள் கைகளில் ஒன்றாகும். இவற்றை வைத்து யாரையும் நாங்கள் அச் சுறுத்தியது கிடையாது. அச்சுறுத்த வும் மாட்டோம். ஆனால், எங்களது இராணுவ சித்தாந்தம் அணு ஆயு தங்களுக்கென தனி இடமும், பங்களிப்பும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது' என தெரிவித்தார். (இ-7)

# அதிஹாரி காலமானார்



முன்னாள் அமைச்சர் ஏ.எம்.எஸ். அதிஹாரி (வயது 80) கடந்த சனிக்கிழமைகாலை தனியார் வைத்தியசாலையில் காலமானார்.

இவர் 1974 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு கலாவெவ அநுராதபுர மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெரிவானார்.

இவர் தொடர்பாடல் துறை மற்றும் சுற்றுலாத்துறையில் முன்னாள் அமைச்சராக செயற்பட்டார். இவரின் சடலம் இறுதிக்கிரியைக்காக கொழும்பில் கொகுவல பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. (இ

# ஆயிரக்கணக்கில் செத்து மிதக்கும் மீன்கள்





(ஜகார்த்தா)

இந்தோனேசிய நாட்டில் உள்ள ஏரி ஒன்றில் ஏராளமான மீன்கள் செத்து மிதந்து கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகர் அருகில் சித்ரா என்ற ஏரியுள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏரியின் நீர்மட்டம் வேகமாக உயரத் தொடங்கியது.

இந்நிலையில் திடீரென ஏரியில் உள்ள மீன்கள் அனைத்தும் செத்து மிதக்க தொடங்கின.

சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாகவும் ஒட்சிசன் இல்லாததன் காரணமாகவுமே மீன்கள் செத்து மிதப்பதாக தகவல் பரவி வருகின்றன.

இதனால் அவைகளை அப்புறப்படுத்தும் வேளையில் மீனவர்கள். சமூக ஆர்வலர்கள் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டு வருன்றனர்.

இந்நிலையில் , ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்கள் ஏரியில் இறந்து மிதந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

மிரியான பகுதியில் 2 கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை மிரியான பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மிரியான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எம்புல்தெனிய சந்தியில் வைத்தே குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

மிரியான பொலிஸாருக்கு கிடைத்த தகவலினையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மஹரகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரை கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (இ-7)

# நாகபாம்புகளால் மக்கள் பீதியில்

(கொழும்பு)

இரத்தினபுரி கொடுக்கவல பகுதியில் உள்ள பல்லகவத்த. பிபிலகம்மாள. பலவின்ன ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகளில் கடந்த சில நாட்களாக நாகபாம்புகள் புகுந்துள்ளதால் அங்கு வாழும் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

வீடுகளில் உள்ள அறைகள், பொருட்கள் நிரம்பியுள்ள இடங்களிலும் மற்றும் விறகுகள் குவிந்துள்ள பகுதிகளிலும். வாகனத் தரிப்பிடங்களிலும் பாம்புகள் அதிமாகக் காணப்படுகின்றன. இதனால் பிரதேசவாசிகள் பீதியுடன் நாட்களைக் கழித்து வருகின்றனர்.

இவ்விடயங்களை அறிந்து கொண்ட அப்பகுதியைச் சேர்ந்த சமிந்தகுமார எனும் இளைஞன் சுமார் 40 நாகபாம்புகளைப் பிடித்து உடவளவ சரணாலயத்தில் விடுவித்துள்ளார். (இ-7)

# தாக்குதல் தொடர்பாக பொலிஸார் சோதனை

(பாரீஸ்)

கடந்த மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்ற கொடூர தாக்குதல் தொடர்பாக பெல்ஜியன் பொலிஸார் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற சுற்றுலாத்தளமாகவும் புரூசல்ஸ் நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவான தொலைவில் உள்ள மேலேன்பீக் நகர எல்லைக்குள் உள்ள கட்டடங்களில் பொலிஸார் திடீர் சோதனை நடத்தினர். உள்ளூர் நேரப்படி மாலை 6 மணியில் இருந்து இரவு 11 மணி வரை இந்த சோதனை நீடித்தது.

சோதனை நடந்த இடமானது புலம் பெயர்ந்தவர்கள் அதிகம் வாழும் இடங்களில் ஒன்றாகும். சோதனை முடிவில் சந்தேகத்திற்கிடமான இருவரை பொலிஸார் கைது செய்தனர். விசாரணைக்காக இருவர் கைது செய்யப்பட்டதாக மட்டும் கூறிய பொலிஸார் மேற்கொண்டு எந்த தக்வல்களையும் பகிர்ந்து கொள்ள மறுப்பு தெரிவித்தனர்.

பாரீஸ் தாக்குதலுக்கு முக்கிய தொடர்பாக இருக்கலாம் என்று கருதப்படும் நபரான புருஸ்லஸ்ஸ சேர்ந்த அப்தேஸலமை பொலிஸார் இன்னும் தீவிரமாக தேடி வருகின்றனர்.

அப்தேஸலமுக்கு எதிராக சர்வதேச பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாரீஸ் தாக்குதல் தொடர்பாக இதுவரை சந்தேகத்திற்கிடமான 8 பேர் கைதாகியுள்ளனர்.

முன்னதாக கடந்த மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் முக்கிய இடங்களை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய அடுத்தடுத்த தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# போர் விமானம் விழுந்து விபத்து



இந்தோனேசியாவின் ஜாவா தீவில் யோக்யாகத்தா விமான நிலையம் அருகே போர் விமானங்களின் சாகச நிகழ்ச்சி நடந்தது.

அங்குள்ள விமானப் படை பாடசாலையின் 70 ஆவது ஆண்டு விழாவையொட்டி இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் சாகசத்தில் ஈடுபட்ட ஒரு விமானம் , தரையில் விழுந்து நொறுங்கியது. அதில் விமானத்தில் இருந்த 2 விமானிகளும் பரிதாபமாக இறந்தனர். இது பார்வையாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. (இ-7)

# கண்தான சங்கத்திற்கு பெற்றுக்கொடுக்கும் நன்கொடை அதிகரிக்கப்படவுள்ளது - ராஜித

(கொழும்பு)

இலங்கை கண்தான சங்கத்திற்கு சுகாதார அமைச்சினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் நன்கொடை பணமானது 2 இலட்சத்திலிருந்து 10 இலட்சமாக அதிகரிக்கப்படவுள்ளதாக சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கான சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 64ஆவது கண்தான தினத்தை முன்னிட்டு கடந்த வாரம் இலங்கை கண்தான சங்கத்தினால் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது கண் திசுக்களை பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பாக வைத்தியசாலைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் எனவே வைத்தியர்கள் அச்சுற்றறிக்கையினை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1961ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச்சங்கமானது பார்வையற்றவர்களுக்காக 48.000 கருவில்லைகளை இலவசமாக வழங்கியுள்ளது. அத்துடன் அவர்களால் நடத்தப்பட்டு வரும் திசு வங்கி மூலம் இதுவரை 10ஆயிரம் திசுக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் இவ் வைத்தியசாலையின் நிறுவுனரான வைத்தியர் ஹட்சன் சில்வாவால் 10 ஆயிரம் நோயாளர்களுக்கு கண் புரை நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும். இந்த நிகழ்விற்காக பல அரசியல் கட்சி தலைவர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-7)

# இந்திய படகை எரித்து கவிழ்த்த பாகிஸ்தான்

## 70 மீனவர்கள் கைது; 11 படகுகள் பறிமுதல்

குஜராத் மாநிலத்தின் சர்வதேச கடற்பகுதியில் மீன்பிடித்த 71 மீனவர்களை பாகிஸ்தான் கடல் பாதுகாப்பு படை கைது செய்துள்ளதாக அகமதாபாத் மீனவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து. தேசிய மீனவ தொழிலாளர்கள் மன்ற செயலாளர் மனீஷ் லோதாரி கூறுகையில். "குஜராத்தின் ஜகவ் கடற்பகுதியில் 12 படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 70 மீனவர்களை பாகிஸ்தான் கடல் பாதுகாப்பு படை (MSA) நேற்று முன்தினம் கைது செய்துள்ளது. மேலும் அவர்களது 11 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. இதில் ஒரு படகு பாதுகாப்பு படையினரால் எரிக்கப்பட்டு கடலில் மூழ்கியுள்ளது. மூழ்கிய படகில் இருந்த மீனவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். என்ன காரணத்திற்காக இந்த தாக்குதல் நடைபெற்றது என்பது குறித்த விபரங்கள் எதுவும் தெரியவில்லை. கைது செய்யப்பட்ட மீனவர்களும் அவர்களின் படகுகளும் கராச்சி கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றார்.

மேலும் இந்த சம்பவம் குறித்து, இந்திய கடற்படை மற்றும் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நேற்று காலை நடந்த இந்த சம்பவம் அப்பகுதிக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மற்றொரு மீனவராலே வெளிச்சத்திற்கு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)



அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் நடத்தும் தமிழ் எழுத்தாளர் விழா அண்மையில் மெல்பேர்ன் சிவாவிஷ்ணு ஆலய பீக்கொக் மண்டபத்தில் நடைபெற்ற போது...



# சிறுவர் அரங்கம்

1313



## யானைக்கு வந்த நாட்டிய ஆசை!

முல்லை வனக் காட்டில் விலங்குகள் கூடி இருந்தன. வரப் போகும் புத்தாண்டை எப்படி கொண்டாடுவது என்பது தான் கூட்டத்தின் நோக்கம். நரியார்தான் முதலில் பேச ஆரம்பித்தார்.

"மனிதர்கள் ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டை விதவிதமாக கொண்டாடு கிறார்கள். இசை நடனம், விருந்து என்று கேளிக்கை களில் ஈடுபட்டு சந்தோஷமாக கொண்டாடுகிறார்கள் நமது காட்டிலும் இந்த ஆண்டு புத்தாண்டு கொண்டாட வேண்டும்" என்றது.

அப்போது குறுக்கிட்ட கரடி, "மனிதர்களின் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நமக்குத் தேவையா? அவர்களுக்கு மற்றவர்களின் கஷ்டத்தை பற்றிய கவலையே கிடையாது. நடு இரவில் வீதியில் பட்டாசு வெடித்து சத்தமான பாடல் களை பாடவிட்டு கும்மாளம் போட்டு அயலாரை துன்பப் படுத்துகின்றனர்! இதெல்லாம் காட்டுக்கு தேவையில்லை!" என்றது.

அப்போது மான் ஒன்று பதில் பேசியது, கொண்டாட்டம் என்றால் ஆட்டம் பாட்டம் இருக்கத்தான் செய்யும்! அது இல்லாமல் விழா இல்லை! அது மற்றவர்களை பாதிக்காத வண்ணம் இருந்தால் நல்லது. யாரோ சிலர் செய்யும் தவறுக்கு ஒட்டு மொத்த மனிதர்களையும் குறை சொல்லக் கூடாது! என்றது.

இதுவரை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த சிங்க ராஜா! "சரி இதுவரை நாம் புத் தாண்டு கொண்டாடியது இல்லை! இந்த வருடம் கொண்டாடு வோம்! ஆனால் அது மற்றவர் களுக்கு சங்கடம் இல்லாத வகையில் கொண்டாடுவோம்!" என்றது.

எல்லா விலங்குகளும் மகிழ்ச்சி ஆரவாரம் இட்டன. புத்தாண்டு அன்று விருந்து தயாரிக்கும் பொறுப்பை புலிக் கூட்டம் ஏற்றுக் கொள்கிறது. விலங்குகளுக்கு தேவையான அனைத்து உணவுகளும் நாங்கள் தயாரிக்கிறோம் என்றது புலி.

அதைக்கேட்டு பலத்த கரகோஷம் எழுந்தது. அடுத்து குயிலும் மயிலும் எழுந்து இசை நாட்டியம் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றது.

விளையாட்டு போட்டிகளுக் கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றன முயல்களும் மான்களும்

விழா நடத்த தேவையான இடத்தை தயார் செய்யும் பொறு ப்பை நாங்கள் செய்கிறோம் என்றன யானைகளும் கரடி களும்.

விழாவில் அனைவருக்கும் இனிப்பான பாணம் வழங்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள் கிறேன் என்றது குரங்குகள்.

இப்படி அனைவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றுக் கொள்ள விழா ஏற்பாடுகள் தொடங்கின. ஒத்திகைகள் நடந்தன. புத்தாண்டு அன்று காட்டின் மையத்தில் விழாவுக் கான மேடை அமைக்கப்பட் டது. அதில் முதல் நிகழ்ச்சியாக குயில் பாட மயில் நடனம் ஆடி யது. குரங்குகள் நகைச்சுவை செய்து காட்டின.

விளையாட்டு போட்டிகளை மானும் முயலும் நடத்த அனைத்து விலங்கு களும் கலந்து கொண்டன. குரங்கார் இளநீர்களை பறித்து வந்து அனைவருக்கும் வழங்கி னார். புலியாரின் தயாரிப்பில் அறுசுவை உணவுகளை அனைவரும் சாப்பிட்டு முடித்து விழாவை நிறைவு செய்து கிளம்பினர்.

விழாவில் மயிலின் நாட்டி யம் மிகவும் பிரமாதமாக பேச ப்பட்டது. அதைக் கேட்ட ஓர் குட்டி யானைக்கு தாமும் அப்படி நாட்டியம் ஆட வேண் டும் என்று ஆசை வந்தது. அது தன் தாயிடம் போய், "அம்மா அம்மா! நானும் மயில் போல நடனம் ஆட ஆசைப்படு கிறேன்!" என்று கேட்டது.

(தொடரும்)




- 1790 - துருக்கியின் இஸ்மாயில் நகரை ரஷ்யாவின் சுவோரவ் என்பவனும் அவனது படைகளும் கைப்பற்றின.
- 1807 - வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்பு களை நிறுத்தும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக் காவில் கொண்டுவரப்பட்டது.
- 1845 - பஞ்சாபில் ஃபெரோசிஷா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் சீக்கியர்களைத் தோற்கடித்தனர்.
- 1849 - ரஷ்ய எழுத்தாளர் பியோதர் தஸ்தயெவ்ஸ்கி யின் மரணதண்டனை கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.
- 1851 - இந்தியாவின் முதலாவது சரக்கு ரயில் உத்த ராஞ்சல் மாநிலத்தில் ரூர்க்கீ நகரத்தில் ஓட விடப்பட்டது.
- 1915 - மலேசியாவின் இலங்கைத் தமிழரால் வாங் கப்பட்ட யாழ்ப்பாணம் என்ற விமானம் பிரித் தானிய வான்படைக்கு அன்பளிப்புச் செய்யப் பட்டது.
- 1937 - லிங்கன் சுரங்கம் நியூயோர்க் நகரில் பொது மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: போரில் பாவிப்ப தற்கென வீ-2 ஏவுகணைகளை உற்பத்தி செய்ய ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: வியட்நாமில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிராக வியட்நாம் மக்கள் இராணுவம் அமைக்கப்பட்டது.
- 1963 - லக்கோனியா என்ற டச்சுக் கப்பல் போர்த்துக் கலில் மூழ்கியதில் 128 பேர் கொல்லப்பட்ட னர்.
- 1989 - ஒரு வார சண்டையின் பின்னர் இயோன் லியெஸ்கு, கம்யூனிச ஆட்சியாளரான நிக் கலாய் செய்செஸ்குவை வீழ்த்தி ருமேனியா வின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1989 - கிழக்கு ஜெர்மனியையும் மேற்கு ஜெர்மனி யையும் பேர்லினில் பிரித்த "பிராண்டன் பேர்க் கதவு" 30 ஆண்டுகளின் பின்னர் திறந்து விடப்பட்டது.
- 1990 - மார்ஷல் தீவுகள், மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஆகியன விடுதலையடைந்தன.

### பிறப்புக்கள்

- 1666 - குரு கோவிந்த் சிங், சீக்கிய குரு (இ. 1708)
- 1853 - **அன்னை சாரதா தேவி,** (இ. 1920)
- 1858 - ஜாக்கோமோ புச்சீனி, இத்தாலிய இசைய மைப்பாளர் (இ. 1924)
- 1887 - இராமானுசன், இந்தியக் கணிதவியலாளர் (இ. 1920)

### இறப்புகள்

- 1995 - ஜேம்ஸ் மீட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1907)
- 2006 - வி. நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் (பி. 1910)
- 2008 - லன்சானா கொண்டே, கினியின் அரசுத் தலைவர் (பி. 1934)

## சாரதா தேவி



அன்னை சாரதா தேவி கல்கத்தாவில் ஜெயராம்பாடி என்ற கிராமத்தில் 1853 டிசெம் பர் 22 ஆம் நாள் இராமசந்திர முகர்ஜிக் கும் சியாமா சுந்தரி தேவிக்கும் முதல் குழந்தை யாகப் பிறந்தார்.

இவர் பள்ளி சென்று படித்த தில்லை என்ற போதும் பிற்கால த்தில் தமது சொந்த முயற்சியால் சிறிது படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டார்.

ஐந்து வயதில் இவர், ராம கிருஷ்ணரின் வாழ்க்கைத் துணைவி யானார். தமது கண வரைப் பலர் பைத்தியக்காரர் என்று கூறுவ தால் வருத்தப்பட்டு அவருக்கு உதவி செய்ய வந்தார். அங்கு ராம கிருஷ்ணரின் ஆன்மிக வாழ்விற் குத் துணையாக அவருக்கும், அவரைக் காண வரும் பக்தர்களுக் கும் சமைப்பது, அவரது வழி காட்டுதலில் ஆன்மிக சாதனைகளில் ஈடுபடுவது என்று ஆன்மிகப் பணிகளைச் செய்தார்.

சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா தேவியை 'சங்க ஜனனி என்று குறிப்பிடுவார். ஸ்ரீராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின்னர், 1888 ஏப்ரல் மாதம் கயைக்குச் சென்ற அன்னை, அங்கு உள்ள சன்னியாசிகளுக்கு உள்ள மட வசதிகளை ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்சரின் துறவிச் சீடர்கள் இருந்த ஏழ்மை நிலையோடு ஒப்பிட் டுப் பார்த்து வருந்தி அழுதார். அவர், ஸ்ரீராமகிருஷ்ணரிடம் "..உமது பெயரில் அனைத்தையும் துறந்த என் பிள்ளைகள் உணவுக் காகப் பிச்சையெடுப்பதை என்னால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. உம்மிடம் எனது பிரார்த்தனை இதுதான்: உமது பெய ரைச் சொல் லிக் கொண்டு உலகைத் துறப்பவர்களுக்குச் சாதாரண உணவும் உடையும் கிடைக்க வேண்டும். அவர்கள் உமது உபதேசங்களை யும் இலட்சியங்களையும் மையமாகக் கொண்டு ஓரிடத்தில் ஒன்று கூடி வசிக்க வேண்டும். உலக வாழ்க்கையில் துன்புற்ற மக்கள், அவர்களிடம் வந்து உமது அமுதமொழிகளைக் கேட்டு ஆறுதல் பெற வேண்டும். அதற்காகவே அல்லவா நீர் வந்தீர்! அவர்கள் அலைந்து திரிவதைக் காண என்னால் சகிக்க முடியவில்லை" என்று பிரார்த்தித் தார். இவ்வாறு தமது பிரார்த் தனை மூலம் ராமகிருஷ்ண இயக்கத் திற்கு முதல் விதையை இட்டார். அதனாலேயே 'சங்க ஜனனி' (இயக்கத்தை தோற்று வித்தவர்) எனப் போற்றப்படுகிறார்.

அன்னை சாரதா தேவி பெண் கல்வியை ஊக்குவித்தார். நிவேதிதை யின் மறைவுக்குப் பின்னரும் அவர் ஆரம்பித்த பெண்கள் பள்ளி தொடர்ந்து நடைபெறக் காரணமானவர்.

# 38 புலனாய்வாளர்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு 38 இராணுவ புலனாய்வாளர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நாகஹ முல்ல ஆகியோரின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகர தலைமையிலான விசேட பொலிஸ் குழுவே இந்த 38 பேரையும் விசாரணை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன.

கடந்த 15 ஆம் திகதி முதல் அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட புலனாய்வாளர்கள் பலர் இவ்வாறு விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து மேலும் பலரும் இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த தகவல்கள் சுட்டிக்காட்டின.

இராஜகிரியவில் வைத்து கடத்தப்பட்ட பிரகீத் எக்னெலிகொட விவகாரம் தொடர்பில் இதுவரை இராணுவ புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடைய கேணல் தர அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அவர்களில் 5 பேர் விளக்கமறியலில் உள்ளனர்.

கடத்தப்பட்ட எக்னெலிகொட கிரித்தலை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை உள்ளிட்ட முக்கிய பல தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே கைதானவர்களுக்கு மேலதிகமாக மேலும் 38 இராணுவ புலனாய்வாளர்கள் விசாரணையினை எதிர்நோக்கியுள்ளதாக அறிய முடிகின்றது. (இ-7)

# தனியார் பல்கலைகளை ஊக்குவிக்க தீர்மானம்

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கவும் இயன்றளவு பூரண சுதந்திரத்தையும் அரச பல்கலைக்கழகங்களுக்கு வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதென உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.


பல்கலைக்கழகத் துறையின் அபிவிருத்திக்கென வரவு-செலவு திட்டத்தல், அரசாங்கம் போதிய நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதெனவும், உயர் கல்வித் துறையில் அபிவிருத்திக்கும் விரிவுபடுத்தலுக்கும் தனியார் துறையின் பங்களிப்பை அரசாங்கம் ஊக்குவிக்கும் எனவும் அமைச்சர் கிரியெல்ல தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தோரில் 20 சதவீதமானோர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்ல முடிகின்றது. உயர்கல்வித் துறையில் கூடுதல் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். "நாம், பல்கலைக்கழக விவகாரங்களில் தலையிட மாட்டோம். உபவேந்தர்கள் சுதந்திரமாக செயற்பட முடியும்" என அவர் தெரிவித்தார். இலங்கையில் தமது வளாகங்களை அமைக்க பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

முன்னைய அரசாங்கம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இதுபோன்ற ஒப்பந்தங்களைச் செய்ய விரும்பியது, அப்போதைய உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ வகை செய்யும் சட்டங்களை கொண்டுவர முனைந்தார் என வும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# அரசாங்கத்திற்கு பந்தம் பிடிக்கும் செயற்பாட்டில் தமிழ்க்கூட்டமைப்பு

## தினேஷ் குணவர்த்தன விசனம்



மக்களுக்கு எதிரான வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்ததன் மூலம் தேசிய அரசாங்கத்துக்கு பந்தம் பிடிக்கும் செயற்பாடுகளையே எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது என்று மகிந்த அணியின் முக்கியஸ்தரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஆனால் எமது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியானது உண்மையில் மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்றது. மக்களுக்கு நன்மையளிக்காத வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து குரல் கொடுத்து அதில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு வழி வகுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு நன்மையளிக்காத வரவு செலவுத்திட்டம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட நிலையில் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஆதரவு வழங்கியுள்ளது. அவ்வாறு பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கத்துக்கு பந்தம் பிடிக்கும் செயற்பாடுகளை நன்றாகவே மேற்கொண்டு வருகின்றமை புலனாகின்றது.

இந்த வரவு செலவுத்திட்டத்தினால் மக்களுக்கு நன்மையில்லை. வைத்தியர்கள், அரச ஊழியர்கள், விவசாயிகள் என பலதரப்பட்டவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவற்றை கவனத்திற்கொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

தற்போதைய நிலைமையில் தேசிய அரசாங்கத்துக்கு பந்தம் பிடிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அரசியல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் தேசிய அரசாங்கத்தின் ஒரு பகுதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறியுள்ளது.

இப்படியொரு தமிழ்க் கூட்டமைப்பை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. சாதாரண மக்கள் குறித்து எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிந்திக்காமல் இருக்கின்றது.

ஆனால் மக்களின் சார்பாக நிற்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினராகிய நாங்கள் வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்தோம். அது மட்டுமன்றி மக்களுக்கு நன்மையளிக்காத வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து குரல் கொடுத்து அதில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு வழி வகுத்துள்ளோம்.

எமது எதிர்ப்பு நியாயமானது என்ற காரணத்திற்காகவே வரவு செலவுத்திட்டத்தில் திருத்தங்களை செய்ய அரசாங்கமும் உடன்பட்டது. அந்தவகையில் பார்க்கும் போது மக்களுக்காக குரல் கொடுக்கும் உண்மையான எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியான நாங்களே செயற்பட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## உயிர் நம் கையில்

கொஞ்ச நாளைக்கு முன் ஒரு சினிமாப்படம் பார்த்தோம். அதில் ஒரு காட்சி! அதாவது, ஒருவர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவருடைய மகன் வெளிநாட்டிலிருந்து வருகிறான். வந்து அப்பாவைப் பார்க்கிறான். அப்பாவும் மகனைக் காண்கிறார். அவர் மெதுவாக வாயைத் திறந்து, "உன்னை ஒரு தரம் பார்த்துவிட்டு கண்ணை மூடலாம் என்றுதான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்தேன்" என்கிறார். அதேமாதிரி மகனைக் கண்டதும் கொஞ்ச நேரத்தில் கண்ணை மூடி விடுகிறார்.

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, திரும்பி வரும்போது ஒரு நண்பர் "சினிமாவில்தான் இப்படியெல்லாம் நடக்கும்! நடைமுறையில் அது சாத்தியமில்லை. வேளை வந்தால் போய்ச்சேர வேண்டியது தான்" என்றார்.

இவர் சொல்வதும் சரியென்றுதான் நமக்குத் தோன்றும்!

ஆனால், கலிபோர்னியாவில் நடந்த ஒரு ஆராய்ச்சியின் முடிவு வேறுமாதிரி இருக்கிறது.

"மரணத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டுமா? அது மனிதனால் முடியும்!" என்கிறது இந்த ஆராய்ச்சி. சரி! எவ்வளவு காலம் தள்ளிப்போட முடியும்? என்று கேட்டால் ஒரு குறிப்பிட்டகாலம் வரைக்கும் அது முடியும் என்கிறார்கள்.

அடுத்து வரப்போகும் ஒரு முக்கியமான நாள்வரைக்கும் நாம் இருக்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியுமாம். உதாரணத்துக்கு ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரது மகனுக்கு இன்னும் 10 நாட்களில் கல்யாணம் நடக்கப் போகிறது! அல்லது அவர்களின் குடும்பத்தில் ஏதோ ஒரு விஷேடம் நடக்கப் போகிறது!

சாகக் கிடக்கிறவர் அந்த சந்தோஷத்துக்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார் என்றால் அவருக்கு உயிர் போகாதாம்!

சீனாவில் அறுவடை திருநாளை சனங்களெல்லாம் மிகவும் சந்தோஷமாக கொண்டாடுவார்களாம்! அந்த அறுவடைத் திருநாளுக்கு ஒருவாரம் முதல், சாராசரியாக இறப்பவர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் வரைக்கும் குறைகிறதாம்!

ஆனால், அறுவடை திருநாளை தொடர்ந்து வரும் அடுத்த வாரத்தில் இறப்பு 35 சதவீதம் வரைக்கும் அதிகமாகிறதாம்!

ஒரு சந்தோசமான திருவிழாவுக்கு முன்வாரத்தில் இறப்பு விகிதம் குறைவதற்கும் அதற்குப் பின்னர் இறப்பு விகிதம் அதிகமாவதற்கும் என்ன காரணம் என்று சொல்லி ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள்.

ஒரு மகிழ்ச்சியான விடயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது மரணத்துடன் போராடுபவர்களின் மன வலிமை அதிகரிக்கின்றதாம்.

"அந்த மகிழ்ச்சியான அனுபவத்தை நாம் இழந்து விடக்கூடாது" என்ற எண்ணம் மேலோங்கி மன ஆதிக்கம் உடம்பின் மீது ஆக்கிரமிக்கும் போது மனதில் இருக்கும் விருப்பமும் ஆசையும் நிறைவேறும் வரைக்கும் மரணம் கிட்டவும் நெருங்குவதில்லையாம். ஆனால் ஒரு விடயம் இதற்கு அதிகமான மனோதிடம் மிகவும் அவசியம்! இது ஒரு பத்திரிகையில் நான் பார்த்த குறிப்பு. இதை எத்தனை பேர் ஒத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இருந்தாலும் இப்பொழுதும் கடைசிநேரத்தில் வைராக்கியமாக இருந்து நினைத்ததை சாதித்துவிட்டு மேலே போகிறவர்கள் உண்டு. அதைப்பலர் அனுபவத்தில் கூட பார்த்திருக்கலாம்.


ஒரு பெரியவர் மரணப்படுக்கையில் இருந்தார். அவரின் மகன் வெளிநாட்டிலிருந்து வந்துகொண்டிருந்தான். டாக்டர் அவருக்கு தீவிர சிகிச்சை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் டாக்டரைப் பார்த்து,

"என் பையன் இங்கு வந்து சேரும் வரைக்கும் நான் இருப்பேனா டாக்டர்!" என்று கேட்டார். "நான் இருக்கிறேன்! கவலைப்படாதீர்கள்!" என்றார் டாக்டர். அதற்குப் பெரியவர், "நீங்கள் இருப்பீர்கள் டாக்டர் ! நான் இருப்பேனா? என்று கேட்டேன்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2015~14.01.2016



**பத்தில் வரும் குருவால் பதவியில் வரும் மாற்றம்! அதிகாரம் செலுத்திக் காரியத்தைச் சாதிக்காமல், அன்பைச் செலுத்தி காரியத்தைச் சாதிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு சூரியன் வீட்டிலும் சூரியன் குருவின் வீடான உங்கள் ராசியிலும் பரிவர்த்தனை யோகம் பெற்று சஞ்சரிக்கிறார்கள். யோகங்களில் மிகச் சிறப்பான யோகம் பரிவர்த்தனை யோக மாகும். ஒன்பதாமிடத்தில் பரிவர்த்தனை என்பதால் பொன, பொருள் பெருகும். போற்றும் விதத் தில் செல்வாக்கு உயரும். வன்பகை மாறும்.

குருவின் பார்வை மூன்றா் மிடத்தில் பதிவதால் உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைக்கும். கூட்டுக் குடும்பத்தில் இருப்பவர்கள் பகையை மறந்து சமாதானம் அடைவர். ஏற்ற விதத்தில் பாகப் பிரிவினைகள் அமையும். இல்லத்தில் புதிய உறவுகளால் பொருளாதார நிலை உயரும்.

அதே நேரத்தில் அதிசார குருவாக 10 இல் பவனி வரப்போகிறார், குரு பகவான். அந்த நிகழ்வும் இம்மாதத்தில் நடைபெற இருக்கின்றது. 10 இல் வரும் குரு பதவி மாற்றத்தைக் கொடுக்கும் என்பார்கள். திசாபுத்தி பலம் பெற்ற வர்கள் எதற்கும் கவலைப் படத் தேவையில்லை. பதவிகளில் எதிர் பார்த்த நல்ல பதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்நிலை உருவாகும். தசாபுத்தி பலமிழந்தவர்கள், உங்கள் ஜாதகத்தில் திசாபுத்தி பலமறிந்து அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்வதன் மூலம் நல்ல பலன்களை வர வழைத்துக் கொள்ளு இயலும்.

ஏழரைச் சனியில் விரயச் சனி நடப்பதால் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழி படுவதோடு ராகு-கேது பெயர்ச்சியும் இம் மாதம் நிகழ இருப்பதால் அரவுக் கிரகங்களின் ஆதிக்கத்தால் உறவினர் பகை உருவாகாமல் இருக்க ராகு-கேது பரிகாரமும் செய்துகொள்வது நல்லது.

**அதிசார குருவின் ஆதிக்கம்!**

சிம்மத்தில் சஞ்சரிக்கும் குருபக வான் கன்னி ராசிக்கு அதிசாரமாகச் செல்கிறார். இதன் விளைவாக உங்கள் ராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும. இட மாற்றம், வீடு மாற்றம், உத்தி யோக மாற்றம் போன்றவற்றை எதிரபாராத விதத்தில் சந்திக்க நேரிடும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். வாகன மாற்றம் பற்றிச் சிந்திப் பீர்கள.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 26 ஆம் திகதி விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரப் போகின்றது. 6 இற்கு அதி பதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இலாகா மாற்றங்கள் கிடைக்கும். சங்கிலித் தொடர் போல் வந்த கடன சுமை, பாதிக்கு மேல் குறைந்தது என்று சொல்லி மகிழ்ச்சி அடைவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்து சரணடைவர்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

டிசெம்பர் 26 ஆம் திகதி செவ்வாய், துலாம் ராசிக்கு செல்கிறார். இதன் விளைவாக வீடு, இடம் வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உருவாகும். விரயாதிபதி செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயத்திற்கு ஏற்ற தன வரவு வந்துகொண்டேயிருக்கும். வெளிநாட்டு முயற்சியிலும் அனுகூலம் கிடைக்கும். குழந்தைகளுக்கு அன்னிய தேசத்திலிருந்து வரும் தகவலைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.




**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

9 ஆம் இடத்தில் ராகுவும், மூன்றாமிடத்தில் கேதுவும் ஜனவரி 8 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக பங்காளிப் பகை உருவாகலாம். பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையாமல் போகலாம்.

மங்கையர் வழி மனக் கலக்கம் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வாகனப் பழுதுகளால் பிரச்சினைகள் அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். விரயங்கள் கூடும் நேரமிது. ராகு-கேது வழிபாடு யோகம் தரும். இம் மாதம் நடராஜர் வழிபாடு நலம் பயக்கும். குருவழிபாடு குதூகலம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குருவின் அதிசாரப்பலனால் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். கூடுதல் விரயங்களை சமாளிக்கக் கூடிய ஆற்றல் உருவாகும்.

கணவன்-மனைவிக் குள் கருத்து வேறுபாடுகள் ஏற் படாமல் இருக்க பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். பிள்ளைகளை உங்கள் மேற் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. உடன்பிறப்புகளையும் அனுசரித்துக் கொள்ளுங்கள். பிரதோஷ வழி பாடு பெருமை சேர்க்கும். ராகு-கேது பரிகாரம் நன்மையை வழங்கும்.

# பத்தில் வரும் குருவால் பதவியில் வரும் மாற்றம்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**சுப விரயங்கள் அதிகரிக்கும் நேரம்! அனுபவ அறிவால் அனைவரையும் அசத்தும் மகர இராசி நேயர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தால் ஆரம்பத்தில் செலவு கள் கூடுதலாக இருந்தாலும் அதை சமாளிக்கும் திறன் உங்களுக்கு உண்டு. எதையுமே நிதானமாகச் செய்யும் நீங்கள் நிகழ்காலத்தல் கொஞ்சம் கோபமும், படபடபபும் கொண்டு செயறபடுவீர்கள். எதையும் ஒருமுறைகக்கு இருமுறை செய்வதன் மூலமே இது வரை உங்களுக்கு அனுகூலம் கிடைத்திருக்கலாம். ஆனால் இம்மாதத்தில் அதிசார குருவின் ஆதிக்கத்தால் ஆச்சரியப்படத் தக்க சம்பவங்கள் நிறைய நடைபெறப் போகின்றது.

குரு உங்கள் ராசியைப் பார்க்கும் அமைப்பு சில நாட்கள் மட்டும் இருந்தாலும் கூட அதற்குள் சில நல்ல பலன்களைச் செய்து விடும். குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கு ஏற்ப, சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதம் துரிதமாக நடைபெறும். குடும்பத்தில் அதிகச் செலவு ஏற்படுகிறதே என்று கடன் வாங்கியிருப்பீர்கள். அந்தக் கடன்களை தீர்க்கக் கூடிய நேரமாக இந்த நேரம் அமையப் போகின்றது.

ராகு-கேதுக்களின் பெயர்ச்சி இம்மாதம் நிகழ இருக்கிறது. 2இல் கேதுவும், 8 இல் ராகுவும் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டமத்து ராகு அலைச்சலைக் கூட்டும். ஆதாயத்தைக் குறைக்கும். 2 ஆம் இடத்து கேது கொடுத்த வாக்கை நிறைவேற்ற விடாது. எனவே அஷ்டமத்து ராகுவிற்கு உரிய பரிகாரங்களை, உங்கள் சுய ஜாதகத்திற்கு ஏற்ற ஸ்தலங்களுக்குச் சென்று செய்து வருவது நல்லது. மேலும் வாரம் தோறும் குருவிற்கு அர்ச்சனை செய்து வழி பட வேண்டும். அவ்வாறு வழிபட்டால் சீரும் சிறப்பும், செயறபாடுகளில் வெற்றியும் கிடைக்கும்.

**அதிசார குருவின் ஆதிக்கம்!**

குருபகவான், டிசெம்பர் 20 ஆம் திகதி கன்னி ராசியில் சஞ்சரிக்கின்றார். அதிசாரமாகச் செல்லும் பொழுது அதற்கு வேகம் அதிகமாக இருக்கும். அதன் பார்வை உங்கள் ராசியில் பதிவதோடு 3, 5 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே உடன்பிறப்புகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கும். இடம், பூமி பிரிவினையில் ஏற்பட்ட தகராறுகள் அகலும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குறிப்பாகச் சுபவிரயம் அதிகரக்கும் நேரமிது. பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் கூடும். வட்டுப் பராமரிப்பில அக்கறை காட்டுவீர்கள். மிதமிஞ்சிய வருமானம் உண்டு.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசியில் டிசெம்பர் 26ஆம் திகதியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகினறார். 10இற்கு அதிபதி 11 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் லாபம் எதிர் பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவோடு மிகச் சிறந்த நற்பலன்களைக் காண்பர். ஒரு சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். தங்கம, வெள்ளி போன்ற ஆபரணப் பொருட்களை வாங்குவதில் உங்கள் கவனம் செல்லும. பெண் குழந்தைகளால் பெருமை உண்டு.

**துலாம் ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கும் நேரம்!**

டிசெம்பர் 28 ஆம் திகதி துலாம் ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4, 11-இறகு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் தொழிலுக்கு உறுதுணை புரிவர். தொலைபேசி வழித்தகவல மகிழ்ச்சி தரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு கிட்டும்.




**அஷ்டமத்து ராகு அடியெடுத்து வைக்கும் நேரம்!**

8 ஆம் இடத்தில் எந்த கிரகம் வந்தாலும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பார்கள். குறிப்பாக 8 இல் சனி, செவ்வாய், குரு மற்றும் ராகு-கேதுக்கள் வரும் பொழுது மிக, மிக கவனம் தேவை. அன்றாட வாழ்க்கையில் மனக் கசப்பு தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். சீரான வாழ்க்கை அமைய சிறப்புப் பரிகாரங்கள் தேவை. தெய்வ தரிசனங்களாலும், செயறபாடுகளில் காட்டும் பொறுமையினாலும் தான் இக்காலத்தை இனிய காலமாக அமைத்துக்கொள்ள இயலும். ஏனென்றால் மனக்குழப்பமும், அதிக விரயமும் ஏற்படும் நேரமிது. இம்மாதம் நடராஜர் வழிபாடும், துர்க்கை வழிபாடும் நலம் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஜனவரி 7 ஆம் திகதி வரை தடையின்றி தன வரவு வந்துகொண்டே இருக்கும். பணத்தட்டுப்பாடு நீங்கும். முக்கியப் பணிகளைத் திருப்தியாகச் செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். ராகு-கேது பெயர்ச்சிக் குப் பின்னால் ஜனவரி 8 ஆம் திகதிக்கு மேல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதால் ஆதாயம் கிடைக்கும். வீண் விரயம் ஏற்படாதிருக்க வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவது நல்லது. துர்க்கை வழிபாடும், நடராஜர் தரிசனமும் துயரங்களைப் போக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டு செயற்பட வேண்டிய மாதமாகும்.

(தொடரும்)

# சுப விரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது!

# நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றுவதற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

**நாடாளுமன்றத்தை அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளைக் கலந்தாலோசிக்கும் அரசியலமைப்புப் பேரவையாக மாற்றுவதற்கான பிரேரணையைக் கொண்டுவர அரசாங்கம் கொண்டுள்ள திட்டத்துக்கு எதிராக பெரும் எதிர்ப்பைக் காட்டவுள்ளதாகவும் இப்போதுள்ள அரசியலமைப்புக்கு இது எதிரானது எனவும் கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.**

புதியதொரு அரசியலமைப்பை உருவாக்கும் செயன்முறையின் தொடக்கமாக, நாடாளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக செயற்படுவதற்கான ஒரு சட்டமுலத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்த நாளை ஜனவரி 9 உடன் பொருத்தும் முறையில், ஜனவரி 9 அன்றே ஒரு பிரேரணையை கொண்டுவரவுள்ளது.

இந்த விடயம் தொடர்பான கட்சிப் பிரதிநிதிகள் சபாநாயகர் கருஜயசூரியவுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தினர். இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்ற ஓர் அரசியலமைப்பு பேரவை அமைக்க சட்ட ஏற்பாடு இல்லை.

அமைச்சரவையின் விவாதத்துக்கு, உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயம் பெற்று அரசியலமைப்பை மாற்றுவதே சட்ட முறையானது. இதற்கு மாறான வழியில் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பு மாற்றங்களை கூட்டு எதிரணியினை எதிர்க்கும் என அவர் தெரிவித்தார். நாம் அரசியலமைப்பை மாற்றக் கூடாதெனக் கூறவில்லை. சரியான வழியில் அது மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு என அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு மாற்றத்திற்கென தனியாக குழுவை நியமித்து காலத்துக்கு காலம் அதில் முன்னேற்றத்தை நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப் போவதாகவாசுதேவநாணயக்கார உட்பட சில எதிரணியினர் தெரிவித்தார்.

இதேவளை, அரசியலமைப்பின் பிரிவு 74 இன் படி நாடாளுமன்ற அலுவலகம் நிலையிற் கட்டளைகள் அல்லது தீர்மானங்கள் மூலம் செயற்படுத்தப்படலாம். நாம் நாடாளுமன்ற தீர்மானத்தின் ஊடாக ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டுவரும் செயன்முறையை தொடங்குவோம் என அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (இ-7)

# அனைத்து பாகங்களிலும் மழை குறையும் சாத்தியம்

நாட்டின் அனைத்து பாகங்களிலும் மழைவீழ்ச்சி குறைவடைவதற்கான சாத்தியம் நிலவுகிறது என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் ஆங்காங்கே மழைக்கான சாத்தியம் நிலவுகிறது என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் பிற்பகல் 4 மணிக்கு பின்னர் மத்திய சப்ரகமுவ மேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைக்கான சாததியம் நிலவலாம் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடலோரங்களில் இடி மின்னலுடன் அதிக மழைக்கான சாத்தியம் நிலவுவதனால் அனைத்து மீனவர்கள், கடல் சார்ந்த தொழிலாளர்கள் ;கடற்படை வீரர்கள் என அனைவரையும் கவனத்துடன் இருக்குமாறு வானிலை அவதான நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### பிரதான நகரங்களின் காலநிலை

நாட்டின் வானிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இரவில் அதிகளவிலான இடி முழக்கங்கள் ஏற்படக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து பிரதேசங்களிலும் மாலையில் அல்லது இரவில் மழைக்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது.

அநுராதபுர மாவட்டத்தில் வெபப நிலையானது ஆகக்கூடியது 31 செல்சியஸ் பாகையாகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 24 செல்சியஸ் பாகையாகவும் காணப்படுவதோடு மிதமான காலநிலை காணப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகக்கூடியது 32 செல்சியஸ் பாகையாகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 23 செல்சியஸ் பாகையாகவும் காணப்படும் அதே வேளை யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களில் மிதமான காலநிலை காணப்படலாம்.

மட்டக்களப்பில் ஆகக்கூடுதலான வெப்பநிலையாக 31 பாகை செல்சியஸாகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 24 பாகை செல்சியஸாகவும் காணப்படும் அதேவேளை பிற்பகல் வேளையில் மழைக்கான சாத்தியம் காணப்படுகிறது. கொழும்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலான வெப்பநிலை 32 பாகை செல்சிஸாகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 23 பாகை செல் சியஸாகவும் காணப்படுவதோடு பெரும்பாலும் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழைக்கான காலநிலை காணப்படலாம்.

கண்டி,நுவரெலியா, இரத்தினபுரி,கொழும்பு, காலி மாவட்டங்களில் சிறிதளவிலான மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் ஆகக்கூடிய வெப்ப நிலையாக பொத்துவில் பிரதேசத்தில் 32.7 பாகை செல்சியஸாகவும் குறைந்தளவு வெப்பநிலையாக நுவரெலியா மாவட்டத்தில் 12.9 பாகை செல்சியஸாகவும் காணப்படுகிறது.

### ஆகக்கூடியளவு மழைவீழ்ச்சி பதிவாகிய பிரதேசம்

நாட்டில் ஆகக்கூடியளவு மழைவீழ்ச்சியாக நுவரெலியா பிரதேசத்தில் 90.9 மில்லி மீற்றர் பதியப்பட்டுள்ளது. (இ-7)

# வல்லப்பட்டைகளுடன் மூவர் கைது

மாத்தறை - மகலுவலஹேன பிரதேசத்தில் வல்லப்பட்டைகளுடன் பயணித்துக் கொண்டிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் இருவர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களிலேயே இவர்கள் கைதாகியுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் வசமிருந்து 4 கிலோ 340 கிராம் வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கைதான இரு வெளிநாட்டுப் பிரஜைகளும் சீனர்கள் எனவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.


மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 581


நதீபன்




அரோன்




நதீபன்




நதீ

யாராவது தடுக்கி விழுந்திட்டா,
ஓடிபோய் தூக்கிவிட்டது
நம் தாத்தா தலைமுறை !!

கண்டுக்காம போனது,
நம் அப்பா தலைமுறை !!

நின்று செல்பி எடுத்துடுறது
நம் தலைமுறை !! .

வர்ணராஜ்




விலுக்ஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சீனா தொடர்பாக மைத்திரிக்கு ஜோன்கெரி கூறிய இரகசியம்?



சீனாவின் நிதியுதவியுடனான கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவது தொடர்பில் இந்தியா தனது எதிர்ப்பை வெளிக் காண்பிக்காவிட்டாலும் கூட, இத்திட்டத்தை குழப்புவதற்கான நடவடிக்கையில் இந்தியா இறங்கிவிடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில், உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்கிற்கு சென்ற போது, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடன் உரையாடியிருந்தார். மைத்திரி பால சிறிசேனவுடனான நீண்ட கலந்துரையாடலை நிறைவு செய்துவிட்டு ஜோன் கெரி புறப்பட்ட போது,ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முக்கிய கேள்வியொன்றை வினவினார்.

'நீங்கள் எவ்வாறு சீனா மற்றும் இந்தியாவை சம நிலைப்படுத்தப் போகிறீர்கள்?' என்பதே மைத்திரியால் சிறிசேனவால் ஜோன் கெரியிடம் எழுப்பப்பட்ட கேள்வி.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு சீனாவின் உதவியும் தேவைப்படுவதை மைத்திரி பால சிறிசேன, கெரியிடம் வலியுறுத்தினார்.

சீனாவிடமிருந்தும் உதவிகளைப் பெறுமாறும் அதனை அமெரிக்கா எதிர்க்கவில்லை எனவும், அதே வேளை, இந்தியாவுடனான உறவை இலங்கை சம நிலைப்படுத்த வேண்டும் எனவும் ஜோன் கெரி, எடுத்துரைத்தார்.

சீனாவின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பச்சை விளக்கை மைத்திரி அரசாங்கம் காண்பித்துள்ளது. இத்திட்டம் இடைநிறுத்தப்பட்ட போது, தனது முகத்தில் இலங்கை அறைந்துள்ளது என்றே சீனா கருதியது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது சீன ஜனாதிபதியால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்க வைக்கப்பட்டதாகவும், சீன ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்படும் எந்தவொரு திட்டங்களும் இதுவரையில் இடைநிறுத்தப்படவோ அல்லது இரத்துச் செய்யப்படவோ இல்லை எனவும் சீனா அதிருப்தி வெளியிட்டிருந்தது.

சீனாவின் நிதியுதவியுடனான கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவது தொடர்பில் இந்தியா தனது எதிர்ப்பை வெளிக்காண்பிக்காவிட்டாலும் கூட, இத்திட்டத்தை குழப்புவதற்கான நடவடிக்கையில் இந்தியா இறங்கிவிடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கோட்பாடுகள் போனறு மைத்திரி அரசாங்கத்தின் கோட்பாடுகள் தீங்குவிளைவிக்கக் கூடியவை அல்ல என்பதை இந்தியா நன்கு அறிந்துள்ளது. எனினும், இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையில் இலங்கையின் எதிர்கால அரசாங்கங்கள் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை மாற்றியமைத்தால் என்ன நடக்கும் என்பது தொடர்பான அச்சம் இந்திய அரசியல் வட்டாரத்திற்குள் தற்போதும் நிலவுகிறது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது எவ்வளவு முக்கியமானது என்பது தொடர்பான விழிப்புணர்வு பரப்புரை ஒன்றை சீனா மேற்கொண்டிருந்தது. அதாவது இத்திட்டத்தை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் இடைநிறுத்திய போது இதனைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு இலங்கையின் உள்நாட்டு மக்களின் அனுமதியைப் பெறுவதற்காக சீனா ஒரு தொகைப் பணத்தைச் செலவிட்டுள்ளது.

இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சீனா 'கரட் மற்றும் குச்சி' அணுகுமுறையைக் கைக்கொண்டது. அதாவது சீனா தனது இலக்கை அடைந்து கொள்வதற்காக இலங்கை வாழ் மக்களிடம் கொழும்புத் துறைமுகத் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படாதவிடத்து மேலும் தனது நிதியைப் பயன்படுத்தப் போவதில்லை என அச்சுறுத்தியுள்ளது.

இதுவே சீனாவின் 'கரட் மற்றும் குச்சி' அணுகுமுறையாகும்.

'இந்திய மாக்கடலின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளதன் காரணமாக அங்கு எவ்வித சிறப்பு முதலீடுகளையும் சீனா மேற்கொள்ளவில்லை. இப்பிராந்தியத்தில் அமைந்துள்ள ஏனைய கரையோர நாடுகளைப் போலவே இலங்கைக்கும் சீனா உதவுகிறது. தற்போது சீன-இலங்கை ஒத்துழைப்பின் முக்கியத்தும் மீது கவனம் செலுத்தியுள்ளது' என நவம்பர் 20 அன்று கொழும்பில் வைத்து இலங்கைகான சீனத் தூதுவர் ஜி சியான்லியாங் குறிப்பிட்டிருந்தார்.

சீனத் தூதுவரின் இந்தக் கூற்றானது இலங்கை மீதான சீனாவின் நிலைப்பாட்டைத் தெளிவாகக் காண்பிக்கின்றது.

'இலங்கை கிழக்கு மற்றும் மேற்குச் சந்தைகளை இணைகின்ற பட்டுப்பாதைத் திட்டத்தின் கேந்திரமுக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ளதால் இதன் முழுமையான கட்டுப்பாட்டையும் இலங்கை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என சீனாவின் யுனான் மாகாணத்தின் வெளிவிவகார அலுவலகத்தின் பிரதம ஆலோசகர் ஜின் செங்க் குறிப்பிட்டுள்ளார்.

பட்டுப்பாதைத் திட்டத்திற்குள் இலங்கை உள்ளீர்க்கப்படாவிட்டால் இத்திட்டம் முழு அளவில் வெற்றிபெறமாட்டாது என்பதே ஜின் செங்கின் கருத்தாகும்.

'நாங்கள் இலங்கையின் அமைவிடம் தொடர்பாக பொறாமைப்படுகிறோம். எமக்குச் சொந்தமாக கடலும் இல்லை. இலங்கையைப் போன்ற கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் எமது நாடும் அமைந்திருக்கவில்லை' என சீனாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை ஊடகவியலாளர் குழுவிடம் செங்க் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

யுனான் மாகாணமானது தென் கிழக்கு மற்றும் தென்னாசியா நாடுகளுக்கான சீனாவின் நுழைவாயிலாக உள்ளதுடன், இலங்கையுடன் இருதரப்பு வர்த்தக உறவுகளைப் பேணிக் கொள்வதில் சீனா ஆர்வமாக உள்ளதாகவும் செங்க் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

**கடந்த மூன்று ஆண்டுகளில் சீனாவின் யுனான் மாகாணத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பாடல் அதிகரித்துள்ளதாகவும் இவர் குறிப்பிட்டார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த வர்த்தகத் தொடர்பாடலை விட கடந்த ஆண்டு இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக உறவு நிலையானது ஒரு மில்லியன் டொலர் வரை அதிகரித்துள்ளதாகவும் பிரதம ஆலோசகர் செங்க் குறிப்பிட்டார்.**

'நாங்கள் ஏற்கனவே இலங்கையின் வர்த்தக அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் வர்த்தக வட்டாரங்களுடனான உறவை வலுப்படுத்தியுள்ளோம்' எனவும் செங்க் தெரிவித்தார்.

யுனான் மாகாணத்தில் வர்த்தக மற்றும் வியாபாரம் போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் இனிவருங் காலங்களில் பொருளாதார ஒத்துழைப்பையும் இலங்கையிடமிருந்து எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் செங்க் சுட்டிக்காட்டினார். (தொடரும்)

# இளம் வயதிலேயே கணித மேதையான

# இராமானுஜன்



பட்டதாரி மாணவர்கள் இருவர் ஒரு தடவை. சிக்கலான கணக்கொன்றை செய்வதற்காக பல படிமுறைகளை எழுதியும் விடை காண முடியாமல் தவித்துக் கொண்டிருந்த போது ஒரு மாணவன் குறுக்கிட்டு அந்தக் கணக்கை நான்கே வரிகளில் செய்து சரியான விடையைப் பெற்றுக் கொடுத்தான். அந்தப் பட்டதாரி மாணவர்கள், அந்த மாணவன் செய்து காட்டிய செயல்முறையை தமது கணித பேராசிரியரிடம் காட்டினார்கள். அதற்கு பேராசிரியர் "எனக்கே தெரியாத இந்தச் சுருக்கமுறையை சொல்லித் தந்தவர் ஒரு பெரிய கணித மேதையாக இருக்க வேண்டுமே? அவர் எந்தக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார்?" என்று வியப்புடன் வினவினார். பட்டதாரி மாணவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டே "அவர் ஒரு பேராசிரியர் அல்ல. பத்தாம் வகுப்பு படிக்கும் சாதாரண மாணவன் தான்" என்று கூறினார்கள். அந்த மாணவன்தான் இராமானுஜன்.

இராமானுஜன், சீனிவாசனுக்கும் கமலத்தம்மாளுக்கும் 1887 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி ஈரோட்டில் குடந்தை சாரங்கபாணி என்ற வீதியில் அமைந்த வீட்டில், பழமையில் ஊறியிருந்த தென்னிந்திய பிராமண குடும்பத்தில் பிறந்தார். இராமானுஜன் அவர்களின் தந்தை சீனிவாசன் துணிக் கடையில் எழுதுவினைஞராக பணிபுரியும் எளிய குடும்பத்தை சேர்ந்தவர்.

இராமானுஜன் 12 ஆவது வயதில் லோனி எழுதிய திரிகோண கணிதம் (Trigonometry) என்ற கணித பாடப் புத்தகத்தை கல்லூரியில் இளங்கலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்த தன் அண்டை வீட்டு மாணவனிடமிருந்து இரவல் வாங்கி படிக்கத் தொடங்கினான். தன்னை விட 7 வயது சிறியவனான இப்பள்ளி மாணவன் இக்கல்லூரி கணித பாடப் புத்தகத்தை ஒரே வாசிப்பில் முடித்ததோடு மட்டுமல்லாமல் அதிலிருந்த எல்லா கணக்குகளையும் தானே சுயமாக செய்து முடித்து விட்டான் என்றதும் அந்தக் கல்லூரி மாணவனுக்கு ஒரே வியப்பு.

1909 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி இராமானுஜன் தனது 22 ஆவது வயதில் ஒன்பதே வயது நிரம்பியிருந்த ஜானகியைக் கைப்பிடித்தார். இராமானுஜன் என்ற கணித மேதையை உலகுக்கு அறிவிக்கும் கலங்கரை வெளிச்சத் தொடர் சங்கிலியில் முதல் வளையமாக இருந்தவர் இந்தியக் கணிதக் கழகப் பேராசிரியர் வி. ராமஸ்வாமி ஐயர் ஆவார்.

இராமானுஜன் சென்னை துறைமுக அலுவலகத்தில் ஒரு கிளார்க் வேலையை ஏற்றுக் கொண்டார். ஆனால் கணிதத்தில் அவருடைய ஈடுபாடும் ஆராய்ச்சியும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. 1911 இல் இந்தியக்கணிதக் கழகத்தின ஆய்வுப் பத்திரிகையில் (Journal) இராமானுஜனின் முதல் ஆய்வுக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. இதற்குள்ளாக, சென்னை துறைமுக அலுவலகத்தின் தலைவரான பிரான்ஸிஸ் ஸ்பரிங் என்பவரும் இராமானுஜத்தைப் பற்றி கேள்விப்பட்டு அவரைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார். துறைமுக அலுவலகத்தில் ஒரு கிளார்க். கணிதத்தில் சாதனைகள் புரிந்து வருகிறார் என்ற செய்தி பரவலாக சென்னை கலவிக் கூடங்களில் பேசப்படத் தொடங்கியது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவருக்கு ஒரு நிலையான உதவிச் சம்பளம் வாங்கித் தந்துவிட பல பேர் முயன்றனர். இந்த முயற்சிக்கெல்லாம் பயன் கிடைத்தது. 1913 ஆம் ஆண்டு மே 1 முதல் இராமானுஜன் (அவரது 26 ஆவது வயதில்) சென்னை பல்கலைக்கழகத்தில மாதம் ரூ.75 சம்பளத்துடன் கணித ஆராய்ச்சியாளராக நியமிக்கப்பட்டார். அன்று தொடங்கி அவருடைய குறுகிய ஆயுள் முடியும்வரை அவருக்கு இந்த ஆராய்ச்சி தான் தொழிலாகும்.

கேம்பிரிட்ஜ் இல் பேராசிரியராக இருந்த G.H. ஹார்டி அவர்கள் இராமானுஜனின் கணித திறமைகளை அறிந்து, அவரை கேம்பிரிட்ஜ் இற்கு கொண்டுவர தீர்மானித்தார். அத் தீர்மானம் கணிதத்தில் வரலாறு படைத்த தீர்மானம் ஆகும். ஆனாலும் இராமானுஜனால் உடனே நாடு விட்டு நாடு வர முடியவில்லை. 1914 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பழைமையான பண்புகளில் ஊறியிருந்த அவரது குடும்பச் சூழலின் பாதிப்பையும் மீறி நாட்டை விட்டு கணித ஆராய்ச்சி மாணவ ராக லண்டன் புறப்பட்டார்.

இராமானுஜன் கேம்பிரிட்ஜ இல் ஹார்டி உடன் இருந்த நான்கு ஆண்டுகளும் (1914-1918) இராமானுஜன் அவர்களுக்கு மட்டுமல்ல பேராசிரியர் ஹார்டிக்குமே பொன்னான ஆண்டுகள் தாம. "நான் அவருக்கு சொல்லிக் கொடுத்தது தான் சரி என்று வைத்துக்கொண்டாலும், ஒன்றுமாத்திரம் உண்மை. அவர் என்னிடமிருந்து கற்றதை விட நான் அவரிடமிருந்து கற்றது தான் அதிகம்" என்று ஹார்டியே சொல்கிறார்.

இந்நான்கு ஆண்டுகளில் இராமானுஜன் 27 ஆய்வுக்கட்டுரைகள் பிரசுரித்தார். அவைகளில் 7 கட்டுரைகள் ஹார்டியுடன் கூட்டாக எழுதியவை. 1918 இல் F.R.S. (Fellow of The Royal Society) என்ற கௌரவம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதே ஆண்டு ட்ரினிடி கல்லூரியின் பெலோ வாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த இரண்டு கௌரவங்களையுமே பெற்ற முதல் இந்தியர் அவர்தான்.


1919 ஆம் ஆண்டு இந்தியா திரும்பினார். தீராத வியாதியும் கூடவே வந்தது. அப்போது அவர் அடையாளம் தெரியாமல் மெலிந்து எலும்பும் தோலுமாக காணப்பட்டார். சென்னை திரும்பிய பின்னர் ஒரு வருடமாக கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த கணித மேதை இராமானுஜன் உடல் நலம் குன்றியதால் மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல் 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி தனது 32 ஆவது வயதில் இறந்தார்.

கணித மேதை இராமானுஜன் தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்த எத்தனையோ கணித செய்முறைகளை அன்றிருந்தவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது. இன்றும் தொடர்ந்து அக் கணித் செய்முறைகள் தொடர்பான விளக்கத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு கணித ஆய்வாளர்கள் ஆராய்ந்து கொண்டே தான் இருக்கின்றனர்.

இராமானுஜனின் உள்ளுணர்விலிருந்து உதயமான இக்கணிதச் சொத்துக்கள் உலகில் கணித வல்லுநர்களையும் மாணவர்களையும் ஈர்த்து எடுத்துவிட்டது.

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்
யாழ்ப்பாணம்,

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**வயிற்றின் மீது**

பொதுவாக வயிற்றின் மீது மச்சம் உள்ள மனிதன் அழுக்குத் துணியும் பரட்டைத் தலையுமாகப் பார்ப்பதற்கு மிகவும் விகாரமாகக் காட்சியப்பான். தன் வறுமை காரணமாக வசதிபடைத்தவர்களைக் கண்டு பொறாமையும் பேராசையுமாகக் காலம் கழிப்பான்.

வயிற்றின் மீது இடது பக்கத்தில் மச்சம் இருந்தால் பொய், பொறாமை, பித்தலாட்டம், மோசடி செய்தல் பிறரை நிந்தித்து பேசுதல் ஆகியவை எதுவுமின்றி நேர்மையாகவும் உழைத்து வாழ்வார்கள். தம்மிடம் உள்ளதைக் கொண்டு மனநிறைவு கொள்வார்கள். பிறருடைய பாராட்டுதலைப் பெறுவார்கள்.

வயிற்றின் மீது இடது பக்கத்தில் மச்சம் இருந்தால் மேற்கூறிய பலன்களுக்கு மாறான பலன்களை உடையவர்களாக இருப்பார்கள். பிறரைக் கண்டு பொறாமை கொள்வார்கள். பிறரை நிந் தித்து பேசியே காலத்தை கழிப் பார்கள். நேர்மையான வழியில் உழைக்கவோ முன்னேறவோ நினைக்கமாட்டார்கள். தனக்குப் பிறர் செய்யும் உதவிகளை மறந்து அவர்களைப் பற்றி தவறாகப் பேசுவார்கள். பிறருக்கு தீங்கு செய்யத் தயங்க மாட்டார்கள். பிறருக்குத் தீங்கு செய்வதால் தங்களுக்கு கேட்டினை விளைவித்துக் கொள்வார்கள்.

வயிற்றின் மீது கீழ் பாகத்தில் மச்சம் இருந்தால் மிகவும் மெலிந்து காணப்படுவார்கள். இவர்களுக்கு தாங்க முடியாத ஏதாவது ஒரு நோய் உபத்திரவம் செய்து கொண்டே இருக்கும்.

**தொப்புளில்**

தொப்புளின் மீது மச்சம் இருந்தால் நல்லது என்றே சொல்லலாம். ஏனென்றால் தொப்புள் மீது மச்சம் உள்ளவர்கள் கொஞ்சம் பணக்காரர்களாக இருப்பார்கள். வாழ்க்கைக்குரிய வசதிகள் இவர்களுக்கு சாதாரணமாக இருக்கும். அளவுக்கு மீறிய பசியுள்ளவர்களாகவும் அப் பசியை ஆற்றிக் கொள்வதற்கு அடிக்கடி புசிப்புவர்களாக இருப்பார்கள்.

தொப்புள் மீது மச்சம் இல்லாமல் அந்த மச்சம் தொப்புளுக்கு சற்று கீழே இருக் குமானால் அத்தகையவர்கள் பல வகையில் பணம் ஈட்டுவர்கள். இந்த மச்சம் உள்ளவர்கள் அதிகமாக சம்பாதிக்கும் போது அதனை தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சம்பாதித்த பணத்தை வீடு, நிலம், பொருள் போன்றவற்றில் முதலீடு செய்து விடுதல் வேண்டும். இல்லை என்றால் விதிவசமாக அவர்கள் சேர்த்து வைத்த பணமெல்லாம் கொள்ளையடிக்கப்படும்.

இந்த மச்சம் உடையவர்களில் சிலர், ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கு முன் துணிந்து செய்யாமல் அதைப் பற்றி பலவகையிலும் யோசித்து மனம் குழம்புவார்கள். இவ்வாறு யோசிப்பதன் மூலம் அக்காரியத்தை செய்ய வேண்டிய காலத்தில் செய்யாது காலந்தாழ்த்தி செய்து தோல்வி அடைவார்கள். இந்த மச்சம் உடையவர்களில் சிலர் வீட்டில் தங்குவதை விட வெளியூர்ப் பிரயாணம் செய்வதில் விருப்பம் உள்ளவர்களாக இருப்பார்கள். (தொடரும்)

# செய்தித் துளிகள்

## 14 நாள் சிசு படுகொலை தாய்க்கு விளக்கமறியல்

14 நாட்களேயான தனது சிசுவைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தாயொருவரை, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மெதிவெல என்ற பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய தாயே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன்னர், குறித்த தாய் தனது சிசுவுடன், பொரளையிலுள்ள காசல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காய்ச்சல் ஒன்றினால் பீடிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

இந்நிலையில், தன்னுடைய சிசுவைக் கொலைச் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

## 223 பில்லியன் ரூபாவை அரசால் எடுக்க முடியாது

### பட்ஜெட் குறித்து பொருளாதார நிபுணர் கருத்து

2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி 223 பில்லியன் வருமானத்தை எடுக்க அரசு முடிவு செய்தது. ஆனால் பல திருத்தங்கள் வரவு செலவுத்திட்டத்தில் செய்தமையால் அரசாங்கத்தால் இவ் வருமானத்தை எட்ட முடியாது என பொருளாதார நிபுணர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புகைப்பரிசோதனை, வாகனவரி குறைப்பு, சலுகைகள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் ஏற்பட்ட மாற்றம் போன்ற காரணங் களினால் இவ் வருமானத்தை பெற முடியாது என்றும் கூறியுள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் படி இவ்வாண்டு வரவு செலவுத்திட்டத்தில் அதிகளவான திருத்தம் செய்யப்பட்டுள்ளது என பொருளாதார நிபுணர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும். வரவு செலவுத் திட்டத்தின் படி செலவீனமே அதி உச்சளவு காணப்படுகின்றது என்றும் தெரிவித்தார். (இ

## எயிட்ஸ் நோயாளிகள் 21 பேர் கண்டுபிடிப்பு

இந்த வருடத்தினுள் மட்டும் எயிட்ஸ் காவி நோயாளர்கள் இருபத்தொரு பேர் குருநாகல் மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ளனர்.

இது இலங்கையில் இரண்டாவது இடத்துக்கு வந்துள்ளதாக குருநாகல் பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

இதுவரையில் குருநாகல் பிரதேசத்தில் மற்றும் வாரியபொல பிரதேசங்களில் காணப்படும் தகாத தொடர்புகள் நடத்திச் செல்லும் சில களியாட்ட நிலையங்களுக்கு செல்வதாலும் இதுபற்றி களியாட்ட நிலையங்களுக்கு செல்பவர்கள் நல்ல தெளிவை பெற்றுக் கொள்வது அவசியமெனவும் இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களென சந்தேகிக்கப்படும் ஆயிரத்து ஐந்நூறு அல்லது ஆயிரத்து அறுநூறு பேர் மட்டில் தமது நிறுவனத்தினால் இனம் காணக்கூடியதாக இருந்தது என குருநாகல் மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். பீ. எல். விக்ரமசிங்க தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தாக்கி சிசு பலி

பிங்கிரிய, ஹெல்மில்வெவ பகுதியிலுள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கி 11 மாதங்களேயான சிசு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் பாதுகாப்பற்ற முறையில் பொருத்தப்பட்டிருந்த மின்கம்பியைப் பிடிப்பதற்கு முயன்ற போதே குறித்த சிசு, மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிசு உயிரிழந்ததாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இனவாத தாக்குதல்களை நடத்தும் இனவாதிகளுக்கு ஒரு எச்சரிக்கை

களுத்துறை மாவட்ட புலத்சிங்கள பொலிஸ் பிரிவுக்குள் வரும் கொபவக தோட்ட பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக கொடும் இனவாத வன்முறையை நடத்திவிட்டு தலைமறைவாகியிருந்த சமிந்த, ரன்கெட்டி ஆகிய இரண்டு பிரதான சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவில் நடைபெற்ற பொலிஸ் சுற்றிவளைப்பிலும், மூன்றாவது சந்தேக நபரான ததா என்பவர் நேற்றுக் காலையும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இனி இந்த நபர்கள் மீது எடுக்கப்படும் மிக கடுமையான சட்ட நடவடிக்கைகள், களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் அவிசாவளை, மாத்தறை மாவட்டத்தின் தெனியாய ஆகிய தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் ஒதுக்குபுறமான தோட்ட பகுதிகளில் வாழும் அப்பாவி தோட்டப்புற தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத தாக்குதல்களை நடத்தும் இனவாதிகளுக்கு ஒரு எச்சரிக்கை செய்தியாக அமையும் வண்ணம் நான் பார்த்துக் கொள்வேன். இது நாங்கள் உருவாக் கிய எங்கள் ஆட்சி. இது இன வாதம் தலைவிரித்து ஆடிய மகிந்த ஆட்சி அல்ல என ஜன நாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (இ-7)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 21.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.45 | 145.68 |
| பவுண்ட் | பிரிட்டன் | 210.15 | 217.96 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 152.76 | 159.13 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 141.68 | 147.85 |
| டொலர் | கனடா | 100.77 | 105.13 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.35 | 105.29 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.73 | 103.76 |
| ரூபா | இந்தியா | 2.1686 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.5222 |
| குவைத் | டினார் | 472.6550 |
| ஓமான் | ரியால் | 372.8812 |
| கட்டார் | ரியால் | 39.4153 |
| சவுதி அரேபியா | ரியாம் | 39.0789 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ரியால் | 38.2540 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 170 | 160 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 70 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 700 | 600 | 650 | 700 | 700 | 1000 |
| தக்காளி | 200 | 130 | 140 | 180 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 15-30 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 150 | 120 | 140 | 160 | 120 |
| கரட் | 200 | 250 | 200 | 200-320 | 320 | 200 |
| பூசணி | 60 | 40 | 30-40 | 50 | 60 | 50 |
| புடோல் | 100 | 150 | 100 | 120 | 140 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 120 | 100 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 65 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 400 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 100 | 150-200 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 260 | 200 | 230 | 250-300 | 300 | 250 |
| லீக்ஸ் | 180 | 140 | 130 | 160 | 200 | 150 |
| பீற்றூட் | 200 | — | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 400 | — | — | — | 500 | 500 |
| முருங்கைக்காய் | 450 | — | — | — | — | — |
| போஞ்சி | 280 | — | 240 | 280 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 250 | 120 | 80 | 200 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-45 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 240 | 200 | 120 | 160 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 200 | — | — | — | — |
| முள்ளங்கி | 140 | 100 | 100 | 100 | 160 | 140 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 50 | 50 | 50 | 60-100 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## வெலிக்கடை சிறையில் குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்தனர் 59

...இந்தப் பிணங்களைத் திரளான எண்ணிக்கையில் கூடியிருந்த சிங்களவர்களின் பார்வைக்கு வைத்து அவர்களின் வெறியைத் தூண்டி விட்டனர்.

அரசாங்கத்தின் ஆசியைப் பெற்றுக் கொண்டு தமிழர்கள் மீது சிங்களவர்கள் கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர். ஜூலை 24 ஆம் திகதி தொடங்கி மொத்தம் 7 நாட்கள்; தமிழன் என்று ஒரு இன்மே இருக்கக்கூடாது என்ற உக்கிரம் அவர்கள் உள்ளத்தில் இருந்தது.



கொழும்பு நகரில் வன்முறை தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்தது. வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு தமிழர்களை அடையாளம் கண்டறிந்து தேடிப்பிடித்து வெட்டினார்கள். தமிழர்களின் வீட்டை வெளியில் பூட்டிவிட்டு உள்ளே தீப்பந்தங்களை எறிந்தார்கள். தமிழர்களின் கடைகளை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று பொருட்களைக் கொள்ளையடித்துவிட்டு கடைகளைக் கொளுத்தினார்கள். கண்ணில் கண்ட தமிழர்களை எல்லாம் கொன்று குவித்தனர்.

இந்தக் கலவரம் தமிழர்கள் அதிகம் வசிக்கும் பதுளை வெள்ளத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி போன்ற பகுதிகளிலும் பரவியது.

இந்தக் கலவரத்தில் ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டனர். கொழும்பு நகரில் மட்டும் 2 ஆயிரம் தமிழர்கள் பலியானார்கள். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து அகதிகள் ஆனார்கள்.

### ரகசியத் திட்டம்

கலவரத்தைத் தொடர்ந்து இலங்கையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதைப் பயன்படுத்தி, வெலிக்கடை சிறையில் இருந்த தமிழ்க் கைதிகளைக் கொல்வதற்கு ரகசியத் திட்டம் வகுக்கப்பட்டது.

சிறைச்சாலைக்குள் தமிழ்க் கைதிகளுக்கும் சிங்களக் கைதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோமலில் தமிழ்க் கைதிகள் இறந்துபோனார்கள் என்று நாடகமாட திட்டமிட்டனர்.

### தாக்குதல்

ஜூலை 25 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு உயர் அதிகாரிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி மதிய உணவுக்குத் தங்களின் வீடுகளுக்குச் சென்றனர்.

அவர்கள் சென்றவுடன் குடிபோதையில் இருந்த சிங்களக் கைதிகள் கடப்பாரை, கத்தி, அரிவாள், கோடாரி எனப் பயங்கர ஆயுதங்களால் சிறையில் இருந்த தமிழ்க் கைதிகளை வெறிகொண்டு தாக்கினார்கள்.

அதே சமயம், சிறைக்கு வெளியே இருந்தும் சிங்களக் குண்டர்கள் பயங்கர ஆயுதங்களுடன் உள்ளே புகுந்தனர்.

### கண்களைத் தோண்டினர்

தங்கதுரை, ஜெகன் உள்ளிட்ட தமிழ்க் கைதிகளை அடித்ததே கொன்றனர்.

குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் இருவரும் தங்கள் கண்களைப் பார்வையற்ற தமிழர்களுக்கு வழங்கும்படியும் அதன்மூலம் தமிழ் ஈழத்தைப் பார்க்க முடியும் என்றும் உருக்கமான வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

குட்டிமணியின் உடலில் உயிர் ஒட்டிக்கொண்டிருந்தது. சிங்கள வெறியர்கள் அவரை வெளியே இழுத்து வந்தனர். அவரது நாக்கை ஒருவன் அறுத்தான்.

பீறிட்டு வந்த குட்டி மணியின் ரத்தத்தை இன்னொருவன் குடித்துவிட்டு புலியின் ரத்தத்தை ருசித்துவிட்டேன் என்று உற்சாகத்தில் உரக்கக் கத்தினான். ரத்தத்தை உடலில் பூசிக் கொண்டு கும்மாளம் அடித்தனர். அப்போது குட்டிமணியின் உடலில் அசைவு இருந்தது. குட்டிமணியின் கண்கள் இரண்டையும் கூரிய கத்தி யைக்கொண்டு தோண்டி எடுத்தனர். இந்தக் கண்கள் தானே தமிழ் ஈழத்தைக் காண விரும்பிய கண்கள் என்று கூறியபடி அந்தக் கண்களை கீழே எறிந்து பூட்ஸ் காலால் மிதித்தனர். ஜெகனின் கண்கள் தோண்டப்பட்டன.

அப்போது அப்போது ஒரு மூலையில் 14 வயது சிறுவன் மயில்வாகனன் பதுங்கி நின்றான். இதைக் கவனித்த சிறை அதிகாரி முடியைப் பிடித்து இழுத்து வந்து அவனை அடித்துக் கொன்றார்.

புத்தர் சிலை அருகே 37 உடல்களையும் கொண்டு போய் குவித்து வைத்தனர்.




(தொடரும்)

நியாயத்தை விட கருணை உயர்ந்தது; புனிதமானது.

– கர்மயோகி

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# குடிசை வீட்டின் குந்தில் குந்தியிருந்த ஜனாதிபதி மைத்திரி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். ஒரு சாதாரண மனிதராக அவர் வருகை அமைந் திருந்தது.

எந்தவித படோபகாரமும் கிடையாது. படையின ரின் பாதுகாப்பு பதற்றங்களும் இல்லை. ஒரு நாட்டின் தலைவர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஜனா திபதி மைத்திரி நல்லதொரு உதாரணம் என்று கூறும் அளவில் அவர் பெருந்தன்மையோடு வந்திருந்தார்.

முன்பெல்லாம் ஜனாதிபதி வருகிறார் என்றால் படையினர் படும்பாடு; பள்ளிக்கூடங்களில் வரவேற்று நடனத்துக்கான ஏற்பாடு; வீதிகளுக்கு வர்ணம் பூசாக்குறை என்ற பாட்டில் எல்லாம் தடல்புடலாக நட க்கும்.

ஆனால் ஜனாதிபதி ம்மைத்திரி மிகவும் அமைதி யாக வருகை தந்தார். அவரின் வருகையுடன் தொட ர்புபடாத ஒரு நிகழ்வு நடந்தமை தமிழ் மக்களின் மனங்களை நெகிழ வைத்து விட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாமுக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட துடன் அங்கு மக்களைச் சந்தித்தார்.

முகாம் மக்கள் படும் கஷ்டங்களை–துன்பங்களை எத்தனை பேர் சென்று ஜனாதிபதியிடம் தெரிவித்தாலும் அதன் புரிதல் என்பது 40 வீதத்தை தாண்டி விடாது.

ஆனால் நேரில் சென்று பார்க்கின்றபோது, அதுவும் திடீர் விஜயமாகச் சென்று பார்க்கும்போது உண்மை நிலையை அப்படியே உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த வகையில் கோணப்புலம் நலன்புரி முகா முக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரி, முகாமில் உள்ள ஒரு தற்காலிக குடியிருப்புக்குச் சென்று ஒரு குந்தில் குந்தியிருந்து அந்த வீட்டாருடன் கதைத்தார். அந்த வீட்டின் குசினிக்குள் சென்று சமைக்கப்பட்ட உண வைப் பார்த்தார். சமைக்கப்பட்ட கறி ஒன்று மூடப்பட் டிருந்தது. அந்த மூடியைத் திறந்து என்ன கறி என் றும் பார்த்தார். அதில் சொதி இருந்தது.

இதில் இருந்து அந்த மக்கள் சாப்பாட்டிற்கும் இடர்படுகின்றனர் என்ற உண்மையை அவர் அறிந் திருப்பார் போலும்.

இவற்றை எல்லாம் பார்த்த பின்பு ஜனாதிபதி மைத்திரி என்ற மனிதம் பேசியது.

தெற்கில் உள்ள கடும்போக்குவாதிகள் ஒரு முறை யாழ்ப்பாணத்துக்கு நேரில் வந்து பார்க்கவேண்டும். அப்போது அவர்களுக்கு இங்குள்ள நிலைமை என்னவென்று புரியும் என்று கூறினார்..

நலன்புரி முகாம்களில் உள்ள மக்களின் பிரச்சி னைகளைத் தீர்க்க ஆறு மாதங்களுக்குள் நடவ டிக்கை எடுப்பதாகக் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரி கூறிய உத்தரவாதம் என்பத ற்கு அப்பால் இந்த நாட்டின் ஜனாதிபதி ஒருவர் தமிழ் மக்கள் வாழ்கின்ற நலன்புரி முகாமுக்குச் சென்று; அந்த மக்கள் வாழ்கின்ற தற்காலிக குடிசை க்குள் நுழைந்து; அங்குள்ள குந்தில் குந்தியிருந்து என்ன உணவு சமைக்கப்பட்டன என்பதைப் பார்த்து; அந்த மக்களின் குறைகளைக் கேட்டு; சிறு பிள்ளை களை அரவணைத்து; தனது மனித நேயத்தை வெளிப்படுத்தியபோது எங்கள் நெஞ்சமும் நெகிழ் ந்து கொண்டன.

ஜனாதிபதி மைத்திரி எங்கள் பிரச்சினைக்கு நிச் சயம் நல்லதொரு தீர்வைத் தருவார். பேரினவாத த்தின் கூக்குரலுக்கு இசையார் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் எழுந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரியை குறித்த முகாமுக்கு அழைத்துச் சென்ற அத்தனை பேரும் இடம்பெயர் ந்த மக்கள் மீது தங்கள் கருசினையை–இரக்கத்தை கொண்டிருந்துள்ளனர் என்பதும் தெரிகிறது.

இது போல கடும் போக்காளர்களையும் அழைத்து வந்து எங்கள் மக்கள் படும் அவலத்தை நேரில் பார் க்கச் செய்வது பலத்த முன்னேற்றங்களைத் தரும்

# றக்பி போட்டியில் விளையாடிய யோஷித்த வைத்தியசாலையில்

(கொழும்பு)

ஹெவ்லொக் விளையா ட்டு கழகத்திற்கும் கடற்படை விளையாட்டு கழகத்திற்கும் இடையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற றக்பி போட்டியில் முன் னாள் ஜனாதிபதியின் இரண் டாவது புதல்வர் யோஷித்த ராஜபக்ஷ காயமடைந்து வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கொழும்பு நவலோக மருத்துவமனையில் அவர் தங்கி சிகிச்சை பெற்று வரு கிறார். போட்டியில் இடைநடு வில் ஹெவ்லொக் விளையா ட்டு கழகத்தின் வீரர்கள் யோஷித்தவை சுற்றிவளை த்து தாக்கியதாக அவரது நண்பர்கள் தெரிவித்துள்ள னர்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிப தியாக இருந்த காலத்தில் றக்பி போட்டிகளின் போது யோஷித்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ரோஹித்த ராஜ பக்ஷ ஆகியோரின் அருகில் கூட எதிரணி வீரர்கள் நெரு ங்க முடியாதபடி விளையா ட்டு வீரர்களாலேயே வலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது அப்படியான பாதுகாப்பு இல்லாத காரணத் தினால் எதிரணி வீரர்களின் பல்வேறு இலக்குகளை அவ ர்கள் சந்தித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் யோஷி த்த ராஜபக்ஷ மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் அது வழமையாக விளையா ட்டின் போது ஏற்படும் விபத்து எனவும் ஹெவ்லொக் விளை யாட்டு கழகத்தின் தகவல் கள் தெரிவிக்கின்றன. (எ–11)

# மனிதர் வாழக்கூடிய புதிய கிரகம் கண்டுபிடிப்பு

பூமியை போன்றே மனி தர்கள் வாழ ஏற்ற சூழலில் உல்ப் 1061 ( Wolf 1061) எனும் புதிய கிரகத்தை விஞ் ஞானிகள் கண்டுபிடித்துள்ள னர். இது பூமியிலிருந்து 14 ஒளியாண்டுகள் தொலை வில் உள்ளது.

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலை க்கழகத்தைச் சேர்ந்த விண் வெளி விஞ்ஞானிகள் மேற் கொண்ட ஆய்வில் தெரியவ ந்ததாவது, மனிதர்கள் வசிப் பதற்குத் தகுதியான கிரகங் கள் பற்றி ஆய்வு மேற்கொ ண்டதில், பூமியை ஒத்த சூழல கொண்ட 3 கிரகங்கள் கண் டறியப்பட்டன.

ஒரு சிறு நட்சத்திரத்தை இம்மூன்று கிரகங்களும் சுற்றி வருகின்றன நட்சத்திர த்திற்கு உல்ப் 1061 எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது புவியிலிருந்து 14 ஒளியாண் டுகள் தொலைவில் உள்ளது.

இம்மூன்று கிரகங்க ளின் நிலப்பரப்பும் பாறை போல கடினமாக இருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

குறிப்பாக நடுவில் உள்ள கிரகத்தின் தன்மை, பூமி யைப் போலவே உள்ளது. அந்த கிரகத்திற்கு உல்ப் 10 61சி எனப் பெயர் சூட்டப்பட்டு ள்ளது. இது பூமியைவிட 4 மடங்கு பெரியதாக இருக் கும். இங்கு திரவ வடிவில் நீர் இருக்கவும் வாய்ப்புள் ளது என தெரிவிக்கப்பட்டு ள்ளது.

மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்ற சூழல் உள்ள கிரகங் கள் இதற்கு முன்பு கண்டறி யப்பட்டாலும், அவை உல்ப் 1061 நட்சத்திரத்தைவிட இரு மடங்கு தொலைவில் உள் ளன. (எ–11)

# தடை தாண்டல் பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவல கம் ஊடாக ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 3.I,3.II ஆசிரியர் களை 2.IIக்கு பதவியுயர்வு செய்வதற் கான தடைதாண்டல் பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 28,29,30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் காலை 8மணி தொடக்கம் மாலை 5மணி வரை நடைபெறவுள்ளது.

எனவே இப்பயிற்சி வகுப்புக்கு விண் ணப்பித்த யாழ்.கல்வி வலயத்தைச் சேர் ந்த 3-I உள்ள ஆசிரியர்கள் பங்குபற்ற வேண்டும் என யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி அறிவித் துள்ளார்.

பங்குபற்றவுள்ள ஆசிரியர்கள் தமது பங்குபற்றுதலை உறுதி செய்வதற்கு தமது பெயரை 0776163980 எனும் தொலை பேசி எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் அறி வித்துள்ளார். (இ–5)

## வலம்புரி 16ஆவது ஆண்டு நிறைவில்

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி



வலம்புரி நாளிதழ் தமிழ் மண்ணில் கால்பதித்து தனது பதினாறாவது அகவை நிறைவு செய்து 17வது ஆண்டில் கால் பதிக்கும் இவ்வேளையில் இந்த செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கடந்த காலங்களில் இந்நாளி தழ் தனது செயற்பாட்டினை விரிவுபடுத்தி தனது வாடி க்கையாளர்களைக் கவர்ந்திருப்பது அனைவரும் அறிந் ததே. உண்மை நிலையினை துணிவுடன் எடுத்தியம்பும் தன்மை வலம்புரிக்குரிய சிறப்பம்சமாகும். சூழ்நிலைகளை நன்கு ஆராய்ந்து சரியானவற்றை வெளிக்கொண்டு வருவது வலம்புரியின் தனித்தன்மையாகும். ஒருவருடைய சுய விருப்பு வெறுப்புக்களுக்கு இடம்கொடாது வேண்டிய விடயங்களை தனித்துவமாக எடுத்தியம்பும் தன்மை பல ராலும் பாராட்டப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள் ளது. வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் அனைவரா லும் ஏகமனதாக பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்படுவதும் ஒரு விடயமாகும். இந்த நாளிதழ் தனது பணியினை மேலும் தனது ஒழுக்கக் கோட்பாடுகளுடன் தொடர்ந்தும் பின்பற்றி மேலும் மேலும் தளராது வளர இறைவனைப் பிரார்த் திக்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணை வேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# 160 பயணிகளை காப்பாற்றிய விமானி

(புதுடில்லி)



நடுவானில் விமானத் தில் ஏற்பட்ட கோளாறினை சரியாக உணர்ந்து புத்தி சாதுரியத்துடன் செயற்பட்டு விமானி ஒருவர் 160 பயணி களின் உயிரைக் காப்பாற்றி யுள்ளார்.

டெல்லியில் உள்ள இந் திரா காந்தி விமான நிலையத் திலிருந்து நேற்று காலை 7.15 மணிக்கு லக்னோ செல்லும் ஏர் இந்தியா விமா னம் புறப்பட்டது.

புறப்பட்ட சிறிது நேரத்தி லேயே, வின்ட்ஷீல்ட் எனப்ப டும் விமானத்தின் முன்பக்க கண்ணாடியில் விரிசல் இரு ப்பதை அதன் விமானி கவ னித்தார்,

விரிசல் கொஞ்சம் கொஞ் சமாக விரிவடையத் தொட ங்கியதைக் கண்டு பதற்றம டைந்த அவர், உடனடியாக விமானத்தை திருப்ப முடிவு செய்தார். திடீரென விமா னம் திருப்பப்பட்டதால் பய ணிகளும் பரபரப்படைந்த னர்.

விமானியின் துரிதமான நடவடிக்கையால 8.20 மணிக்கு இந்திரா காந்தி விமான நிலையத்தில் விமா னம் பாதுகாப்பாக தரையிற ங்கியது.

இந்த விமானத்தில் பய ணித்த 160 பயணிகளும் வேறு விமானத்தின் மூல மாக தங்கள பயணத்தை தொடர்ந்தனர்.

கண்ணாடியில் இருந்த விரிசல் சரி செய்யப்பட்டதும் விமானம் மீண்டும் தனது சேவையை தொடங்கியது.(எ–11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எப்போதும் மிக உயர்ந்ததையே தேடு. ஏனெனில் மிக உயர்ந்ததில்தான் நித்தியமான பேரானந்தம் உள்ளது. நான் வேட்டையாட வேண்டுமானால் காண்டாமிரு கத்தை வேட்டையாடுவேன். கொள்ளையடிக்க வேண்டு மானால் அரசனின் பொக்கிஷத்தைக் கொள்ளையடிப் பேன். எப்போதும் உயர்ந்ததையே தேடு.

ஆசைகள் பெருகப்பெருக இன்பத்தின் ஆற்றலும் வளர்கிறது. அதனுடன் கூடவே துன்பத்தின் ஆற்றலும் வளர்கிறது.


நீயே எங்கள் தந்தை, நீயே எங்கள் தாய், நீயே எங்கள் அன்பு நண்பன், உலகின் சுமையை நீயே தாங்குவாய். எங்கள் வாழ்க்கையின் சுமையை நாங்கள் தாங்கிக்கொள்ள எங்களுக்கு உதவுவாய். நீயே எங்கள் நண்பன். எங்கள் அன்பன். எங்கள் தலைவன். நீயே நாங்கள்.

கடவுள் ஒருவரே என்று நாங்கள் நம்புகிறோம். அவர் நம் எல்லோருக்கும் தந்தை. அவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர், எல்லையற்ற அன்புடன் அவர் தமது குழந்தைகளைக் காப்பாற்றுகிறார். வழி நடத்துகிறார்.

யாருடைய நம்பிக்கையையும் குலைக்காதீர்கள். இதில் மிகவும் கவனமாக இருங்கள். ஏனெனில் மதம் என்பது கொள்கைகளில் இல்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறு இருக்கிறோம், எவ்வாறு ஆகிக்கொண்டிருக்கிறோம் என்பதில்தான் மதம் உள்ளது; அனுபூதியில்தான் மதம் உள்ளது.

வில்லியம்ஸ் சதம்

# இலங்கைக்கு எதிரான தொடரை முழுமையாக வென்றது நியூசிலாந்து





இலங்கை அணிக்கு எதிரான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 2:0 என முழுமையாக கைப்பற்றி அசத்தியுள்ளது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. இதில் 2 ஆவது டெஸ்ட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் இலங்கை அணி 292 ஓட்டங்களும். நியூசிலாந்து அணி 237 ஓட்டங்களும் எடுத்தது.

பின்னர் 55 ஓட்டங்கள் முன்னிலையில் 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர்கள் கருணாரத்னே (27). மெண்டிஸ் (46) நல்ல தொடக்கம் கொடுத்தனர்.

இருப்பினும் பின்னர் வந்தவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் நடையை கட்ட இலங்கை அணி 133 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் நியூசிலாந்து அணிக்கு 189 ஓட்டங்கள் வெற்றி இலக்காக கொடுக்கப்பட்டது.

இந்நிலையில் எளிய இலக்கை நோக்கி 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் தடுமாறியது. தொடக்க வீரர்கள் லதம் (4). குப்தில் (1) ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழந்தனர்.

பின்னர் வந்த வில்லியம்சன், டெய்லர் (35) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் நியூசிலாந்து வெற்றி இலக்கை நெருங்கியது.

அணித்தலைவர் மக்குல்லம் 18 ஓட்டங்களிலும். சாண்டர் 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்தது. வில்லியம்சன் 78 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

வெற்றி பெற 47 ஓட்டங்களே தேவை என்ற நிலையில். நேற்று தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து இலக்கை எட்டி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. நிதானமாக ஆடிய வில்லியம்சன் சதம் அடித்தார். அவர் 108 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவரு டன் வாட்லிங் (13) களத்தில் இருந்தார்.

இதன் மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 2:0 எனக் கைப்பற்றியது. சதம் விளாசிய வில்லியம்சன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

## மாஸ்டர்ஸ் சம்பியன் லீக் போட்டி அட்டவணை அறிவிப்பு

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் இருபது-20 போட்டிகளின் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி இந்தப் போட்டிகள் ஜனவரி 28 ஆம் திகதி முதல் பெப்ரவரி 13 ஆம் திகதி நடக்கிறது.

இந்த தொடரில் லிப்ரா லெஜண்ட்ஸ். ஜெமினி அரேபியன்ஸ், காப்ரிகார்ன் கமெண்டர்ஸ். லியோ லயன்ஸ். விர்கோ சுப்பர் கிங்ஸ் மற்றும் சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் என மொத்தம் 6 அணிகள் பங்கேற்கின்றன.

இதில் கங்குலி, ஷேவாக். காலிஸ். ஜெயவர்த்தனே, சங்கக்காரா, முரளிதரன். கில்கிறிஸ்ட். வெட்டோரி. பிரட் லீ. பிரையன் லாரா என பல முன்னாள் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியம் இந்த தொடருக்கு 10 ஆண்டுகள் அனுமதி வழங்கி இருக்கிறது. அமெரிக்காவில் நடந்த ஆல் ஸ்டார் கிரிக்கெட் தொடர் வெற்றி பெற்றதையடுத்து இதற்கும் ஐசிசி அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தொடருக்கான போட்டி அட்டவணை இன்று அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் முதல் போட்டியில் கங்குலியின் லிப்ரா லெஜண்ட்ஸ் மற்றும் ஷேவாக்கின் ஜெமினி அரேபியன்ஸ் அணிகள் மோதுகின்றன. இந்த இரு அணிகள் மோதும் தொடரின் முதல் லீக் போட்டி ஜனவரி 28 ஆம் திகதி டுபாயில் நடக்கிறது.

மொத்தம் 18 போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் அரையிறுதியில் பெப்ரவரி 11 ஆம் திகதியும், இரண்டாவது அரையிறுதி பெப்ரவரி 12 ஆம் திகதியும் நடக்கிறது. இறுதிப் போட்டி டுபாயில் பெப்ரவரி 13 ஆம் திகதி நடைபெறுகிறது. (க)

## பிபா கிளப் சம்பியன்ஷிப் பார்சிலோனா சம்பியன்



ஜப்பானில் நடைபெற்ற பிபா கிளப் உலக கோப்பை சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில். நட்சத்திர வீரர்கள் லயனல் மெஸ்ஸி. நெய்மர். சுவாரெஸ் ஆகியோர் அடங்கிய பார்சிலோனா எப்சி அணி சம்பியன் பட்டம் வென்றது. யோகஹாமா நகரில் நேற்று நடந்த இறுதியில் ஸ்பெயினின் பார்சிலோனா எப்சி - ரிவர் பிளேட் (ஆர்ஜென்டினா) அணிகள் மோதின.

விறுவிறுப்பாக அமைந்த இப் போட்டியில். அபாரமாக விளையாடிய பார்சிலோனா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வென்று கிளப் அணிகளுக்கான பிபா உலக கோப்பையை கைப்பற்றியது. லயனல் மெஸ்ஸி 36 ஆவது நிமிடத்திலும். லூயிஸ் சுவாரெஸ் 49 ஆவது மற்றும் 68 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்து அசத்தினர். பார்சிலோனா அணி 3 ஆவது முறையாக கிளப் உலக கோப்பையை வென்றுள்ளது. 2015 இல் மட்டும் அந்த அணி வெவ்வேறு தொடர்களில் 5 சம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## சென்னை எப்.சி. காற்பந்து தலைவர் திடீர் கைது



இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் கோப்பையை வென்ற சென்னை எப்சி அணியின் கப்டன் எலானோ ப்ளூமர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

கோவாவில் உள்ள படோர்டாவில் நேற்றுமுன்தினம் இரண்டாவது இந் தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) காற்பந்து திருவிழாவின் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் கோவாவை வீழ்த்தி சென்னை அணி சம்பியன் பட்டம் வென்றது.

அந்த அணியின் தலைவர் எலானோ ப்ளூமர் வெற்றிக் கிண்ணத்தை ஏந்தியபடி சக வீரர்களுடன் மைதானத்தை வலம்வந்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில், போட்டிக்குப் பிறகு நடந்த கொண்டாட்டத்தின் போது கோவா அணியின் உரிமையாளர் தத்தராஜ் சல்கான்கரை அவமதித்தது மற்றும் தாக்கியதற்காக எலானோ ப்ளூமரை கோவா பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர். முன்னதாக போட்டியை பார்க்க வந்த கோவா முதல்வர் லக்ஷ்மிகாந்த் பர்சேகர் விரைவாக மைதானத்தை விட்டு வெளியேறி விட்டார். பின்னர் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது. சல்கான்கர்தான் என்னை இந்தப் போட்டியைக் காண அழைத்திருந்தார்.

அவர் சென்னை எப்.சி அணியின் தலைவர் எலானோ ப்ளூமரால் அவமதிக்கப்பட்டு தாக்கப்படுவதை கண்டதால், பரிசு வழங்கும் நிகழ்ச்சி வரை காத்திருக்க வேண்டும் என்று தோன்றவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சென்னை எப்.சி. அணி சம்பியன் பட்டம் வென்ற சில மணி நேரங்களிலேயே அதன் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (க)

# புலிகளை மீண்டும் உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி இலங்கையில் மீண்டும் புலிகளின் ஆக்கிரமிப்பை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதற்காகவே இலங்கைக்கு சர்வதேச பிரதிநிதிகள் தொடர்ந்து வருகின்றனர் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி விடுதலைப் புலிகளின் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் நியாயப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றம் சுமத்திய அவர் இன்று நாடு பாதுகாப்பான நிலையில் இருப்பதாக சொல்ல முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தி குறிப்பாக வடகிழக்கை பாதுகாப்பின் கீழ் கட்டுப்படுத்தி வைத்திருந்ததாக தெரிவித்த அவர், புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன் நாடு காப்பாற்றப்பட்டு விட்டது என்று கூற முடியாது என்றும் தெரிவித்தார்.

புலிகளின் அரசியல் சர்வதேச செயற்பாடுகள் தொடர்கிறது. புலிகளின் புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தினதும் தடைகளை நீக்கி அவர்களை இலங்கையில் அரசு பலப்படுத்தியிருக்கிறது. தடுப்பில் உள்ள புலிகளை அரசு விடுவித்து வருகிறது. பயங்கரவாத தடைச்சட்டம் இருப்பதனால்தான் புலிகள் தொடர்பில் பலமான நடவடிக்கைகளை எடுக்க முடியும் இன்றைய அரசாங்கம் நாட்டை இரண்டாக கூறுபோடும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை புலிகளுக்கு ஒப்படைக்கும் நோக்கிலேயே ஐ.நா அதிகாரிகளும் அமெரிக்க ராஜதந்திரிகளும் வருகை தருவதாகவும் எதிர்வரும ஜெனிவா கூட்டத் தொடருடன் இலங்கையில் நிரந்தரமாக பிரிவினையை ஏற்படுத்துவதே அவர்களின் முயற்சி என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (எ-11)

## குடும்பத்துடன்...

பயணமாக நத்தார் விடுமுறையைக் கழிக்கவே குடும்பத்துடன் கொழும்பு வந்திருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், மகேஷினி கொலன்ன,

ஒரு சுற்றுலாப் பயணியாக முற்றிலும் தனிப்பட்ட பயணமாகவே நிஷா பிஸ்வால் கொழும்பு வந்திருக்கிறார். ஜனாதிபதி உள்ளிட்ட எவரையும் அவர் சந்திக்கமாட்டார்.

எல்லா அதிகாரபூர்வ பயணங்கள் தொடர்பாகவும் வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிடும் என்று தெரிவித்துள்ளார்.

மார்கழி விடுமுறையைக் கழிக்க நிஷா பிஸ்வால் இலங்கையைத் தெரிவு செய்திருப்பதாகவும், அதிகாரபூர்வ பேச்சுக்களில் அவர ஈடுபட வாய்ப்பில்லை என்றும் சில மரியாதை நிமித்தமான சந்திப்புகள் எதிர்பார்க்கப்படுவதாகவும், வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, உயர்மட்ட அரசியல் தலைவர்களுடன் நிஷா பிஸ்வால் மரியாதை நிமித்தமான சந்திப்புகளை மேற்கொள்வார் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், நிஷா பிஸ்வால் இலங்கை வந்திருப்பது இது நான்காவது தடவையாகும். கடந்த ஜனவரி, மே, ஓகஸ்ட் மாதங்களில் அவர் ஏற்கெனவே இலங்கை வந்திருந்தார்.

அதேவேளை, அமெரிக்க உயர் மட்ட அதிகாரிகள் அடுத்தடுத்து இலங்கை வருவது குறித்து, கொழும்பு அரசியலில் கேள்விகள் எழுப்பப்படும் நிலையில், நிஷா பிஸ்வாலின் இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## எமில் காந்தனை...

சார்பாக எமில்காந்தன் என்பவரே பணத்தை பெற்று விடுதலைப் புலிகளின் தலைமையிடம் வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இதனடிப்படையில் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக எமில்காந்தனை இம்மாத இறுதிக்குள் இலங்கை அழைத்து வர அரசாங்கம் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எமில்காந்தன் வருகை தரும் இடத்தில் பணப் பரிமாற்றம் குறித்த பல தகவல்கள் அம்பலமாகும் என தெரியவருகிறது. (எ-11)

## தமிழக மக்களுக்கான...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்திய அரசு வடக்கு மாகாண சபையின் வெள்ள நிவாரண உதவிகளை ஏற்காது என வெளி வந்த செய்திகள் உண்மைக்கு மாறானவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெளப் பெருக்கினால் இலட்சக்கணக்கான மக்கள பாதிப்பை எதிர்நோக்கியிருந்தனர். இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக வடக்கு மாகாண சபை வங்கி கணக்கொன்றினை ஆரம்பித்து அதனூடாக பணத்தை திரட்டி வருகின்றது.

இதற்கு வடக்கு மாகாண சபையின் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பூரண ஆதரவினை வழங்கி வருகின்றனர். வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் 38 பேரின் பங்களிப்பில் மட்டும் நான்கரை இலட்சம் ரூபாய் வெள்ள நிவாரணத்துக்காக சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சேர்க்கப்படும் நிதி எதிர்வரும் 31ஆம் திகதி அன்று தமிழக அரசிடம் கையளிக்கப்படவுள்ளது. இந்நிதி கையளிப்பு முக்கியஸ்தர் ஒருவர் ஊடாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் நேரடியாக கையளிக்கப்படவுள்ளது அல்லது தமிழக முதலமைச்சரின் கணக்கிலக்கத்திற்கு அனுப்பப்படும்.

தமிழக மக்கள் எமது உரிமைக்காகவும், எம்மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் போதும் எமக்காக குரல் கொடுத்தவர்கள். அந்த வகையில் எமது தமிழ் மக்களின் உதவி என்பது அவசியமாகும்.

குறிப்பாக வடக்கு மாகாண சபையின் உதவி என்பது ஒட்டு மொத்த ஈழத்தமிழ் மக்களின் உதவியாக இருக்கும். அதனையே நாம் மேற்கொள்கின் றோம் என்றார் அவைத்தலைவர் சிவஞானம். (எ-4)

## 2500 ரூபாய்...

அரச சேவையில் தக்க வைத்துக் கொள்ள போதுமானதாக அமையவில்லை.

இவ்வாறான ஓர் நிலையில் 1:3:5 என்ற விகிதாசாரத்தில் அரச ஊழியர்களின் சம்பள இடைவெளி காணப்பட்டால் புத்திஜீவிகளை அரசாங்க சேவை இழக்க நேரிடும். பலர் வெளிநாடுகள் செல்லக் கூடுமெனவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (எ-11)

## முகாம்களில் உள்ள...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டு வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தினால் இடம்பெயர்ந்த மக்களை கோணப்புலம் முகாமில் சந்தித்து மக்களின் நிலைமைகளை பார்வையிட்டிருந்தார். இதன்போது முகாமில் வதியும் மக்களின் குடிசைகளுக்கு சென்றும் அவர்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளையும் பார்த்திருந்தார்.

இதன் பின்னர் யாழ்.நகரில் நடைபெற்ற நத்தார் நிகழ்வில் வலி, வடக்கு மக்களின் இன்னல்களுக்கு 6 மாதங்களில் தீர்வு காண்பேன் எனவும், தென்னிலங்கையில் இருந்து கொண்டு இனவாதம் பேசும் தீவிரவாதிகள் வடக்குக்கு வந்து இங்கு கஷ்டப்படுகின்ற மக்களின் நிலைமைகளை பார்க்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். இதற்கு வடமாகாண சபை சார்பில் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

ஒரு ஜனாதிபதி என்பவர் இவ்வாறுதான் இருக்க வேண்டும். தெற்கிலிருந்து இனவாதம் பேசுபவர்கள் இங்கு வந்து மக்களின் நிலைமைகளை பார்வையிடுமாறு கூறி, இங்கு வருவதற்கான செலவினை தான் ஏற்பதாகவும் கூறியுள்ளார். ஜனாதிபதியின் இக்கருத்தை நாம் வரவேற்கின்றோம். ஒரு ஜனாதிபதி என்பவர் இவ்வாறுதான் இருக்க வேண்டும்.

மேலும் வடமாகாணத்தின் யாழ். மாவட்டத்தில் தேசிய நத்தார் நிகழ்வு நடைபெற்றது. இதில் மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் அழைக்கப்படவில்லை. இந்நிலையில் மத்திய அரசாங்க அதிகாரிகள் மாகாணசபையை புறக்கணிக்கவே நினைக்கின்றனர். இந்த நிகழ்வுக்கு முதலமைச்சர் அழைக்கப்பட்டுள்ளார். ஆனால் முதலமைச்சர் மட்டும் மாகாணசபை இல்லை. குறிப்பாக மாகாணசபை கிறிஸ்தவ உறுப்பினர்கள் கூட அழைக்கப்படவில்லை.

இங்கு ஒரு மாகாண சபை உள்ளது என்பதனை மத்திய அரசு அல்லது அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவில்லை போன்று தோன்றுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் சிவஞானம் தெரிவித்தார். (எ-4)

## தீர்வுத்திட்டத்...

படவுள்ள சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை உருவாக்க வேண்டிய கடமை தமிழ்த் தலைமைகளிடம் காணப்படுகின்றது.

இத்தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்கள் மத்தியில் வைத்து சரியானதா அல்லது பிழையானதா என்று ஆராயவேண்டும். அதனை விடுத்து, கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாமல் ஒன்று அல்லது இரண்டு பேர் தாங்கள் விரும்பியவாறு அரசாங்கத்துடன் பேசுவது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்களின் தலைவிதி ஓரிருவரின் கைகளில் இல்லை. இதனை சம்பந்தன் சரியாக கையாண்டிருந்தால் தமிழ் மக்கள் பேரவை உருவாகவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

மேலும், இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமானது பொதுமக்கள், புத்திஜீவிகள் மற்றும் ஆலோசகர்களின் கருத்துக்கமைய உருவாக்கப்பட்டு, அதனை முன்வைப்போம். அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவும் முன்வைக்கப்படலாம். அதனையே தமிழ் மக்கள் பேரவை செய்கின்றது.

நல்ல விடயங்கள் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்படவேண்டும். இந்த அமைப்பு அரசியல் கட்சி அல்ல. கூட்டமைப்புக்கு எதிரானது என்ற தோற்றப்பாட்டையும் கொடுப்பது அர்த்தமற்ற செயற்பாடு ஆகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டம் மாத்திரமின்றி, தற்போது இளைஞர்கள் மத்தியில் பரவும் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழித்தல், கல்வியில் பின்தங்கியிருக்கும் வட மாகாணத்தை முன்னேற்றுதல், சுகாதாரத்தை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்த அமைப்பால் மேற்கொள்ளப்படும்.

அமைப்பின் மீது சாயம் பூசுதல் அல்லது தேவையான வியாக்கியானங்களை கூறுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## ஐ.தே.கவில்...

முறைப்பாட்டு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாரத்தில் 5 நாட்களில் அந்த பிரிவில் முறைப்பாடுகளையும் யோசனைகளையும் முன்வைக்க முடியும்.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த பிரிவின் நடவடிக்கைகளை கையாள உள்ளதுடன் கிடைக்கும் முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் முன்வைத்து தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-11)

## லண்டனில்...

பிரதமர் வாயில்தளத்தின் முன் டிசம்பர் 20ஆம் திகதி இக்கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பாதுகாப்பினையும் விடுதலையை உத்தரவாதப்படுத்துமாறும் அனைத்துலக சமூகத்தினை கோரும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இது தொடர்பில் அனைத்துலக மட்டத்தில் தபால் அட்டைப் பரப்புரையொன்றினையும் மேற்கொண்டு வருகின்றது.

இதனொரு அங்கமாக, பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தின் முன் இக்கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

குறியீட்டு ரீதியில் சிறைகூட முகப்பொன்றினையும் இரத்தக்கறையுடன் கைதிகள் உள்ளிருப்பது போலவும் வடிவமைத்து இடம பெற்றிருந்த இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இரகசிய சந்தி...

களிற்கு 31 தடவை தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

மேலும் அந்த அரசியல்வாதி குறிப்பிட்ட அதிகாரியை தனது இல்லத்திற்கு வருமாறு அழைத்துள்ளார். எனினும் அந்த அதிகாரி அதனை நிராகரித்துள்ளார்.நீங்கள் வாக்குமூலமொன்றை வழங்க விரும்பினால் எங்கள் அலுவலகத்திற்கு வாருங்கள் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-11)

## அமெரிக்காவின்...

நாட்டின் அபிவிருத்திக்கு உதவிகளை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. அமெரிக்கா உட்பட உலகில் பலமிக்க நாடுகள் எமக்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

முன்னைய அரசாங்கம் ருவாண்டா, புருண்டி, சோமாலியா, உகண்டா, சிம்பாப்வே போன்ற நாடுகளுடனேயே தொடர்புகளை கொண்டிருந்தது. இந்த நாடுகளிடம் இருந்து எமக்கு முக்கியமான பிரயோசனங்களை பெற்றுக்கொள்ள முடியாது.

சுமார் 60 மனைவிகளை கொண்டுள்ள சுவாசிலாந்து மன்னர் எமது நாட்டுக்கு வந்தார். இப்படியான நாடுகளையே ராஜபக்ஷ அரசாங்கம் தம்முடன் நெருக்கமாக வைத்திருந்தது.

நாட்டின் வீடமைப்பு துறையில் பாரிய அபிவிருத்தியை எனது அமைச்சின் மூலம் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். (எ-11)

## மூதூர் படு...

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த விபரங்களை ஒப்படைக்குமாறு குற்றப் புலனாய்வு பிரிவினர் கோரியுள்ளனர்.

எனினும் இதற்கு படையினர் போதிய ஒத்துழைப்பை வழங்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

## இராணுவத்...

ந்த, மேஜர் ஜெனரல் லி டெசியூ தலைமையிலான இந்தக் குழுவில், ஐந்து மூத்த கேணல் தர அதிகாரிகளும், ஒரு லெப். கேணல் தர அதிகாரியும் இடம்பெற்றிருந்தனர்.

இலங்கையின் கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலகவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

சீன இராணுவ அதிகாரிகள் குழு, சபுகஸ்கந்த, பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் கல்லூரிக்கும் சென்றிருந்தது.

மேலும், சீனாவில் பயிற்சி பெற்ற இலங்கையின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளையும், சீன படை அதிகாரிகள் குழு தனியாகச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் முன்னைய ஆட்சிக்கால த்தில் இருந்த நெருக்கத்தை தொடர்ந்து பேணுவதற்கு சீன அரசாங்கம் முயற்சிக்கின்றது.

முன்னதாக 2009ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்திற்கு சீன இராணுவம் தனது முழுமையான ஆதரவை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


### தேவை

யாழ் நாவலர் வீதியில்
உள்ள போட்டோ பிரதி/
புத்தகக் கடை நடாத்துவதற்கு
ஒருவர் தேவை. (2950)
(ஓய்வூதியர் விரும்பத்தக்கது)

தொடர்பு :0775040714


## விசுவமடுவில்...

யளவில் விடுதலை புலிகளின் ஆயுதக் கிடங்கு இருக்கலாம் என சந்தேகித்து அகழ்வு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டம், மூங்கிலாற்று பிரதேசத்தில் இலங்கை மின்சார சபை மின் வழங்கும் நோக்கில் கடந்த மூன்று நாட்களுக்கு முன் மின் கம்பங்களை நாட்டும் வேலையை செய்து வந்தது.

கொளுந்துபுளவு சந்தியில் மூங்கிலாற்று பிரதானவீதி அருகில் மண்ணைத் தோண்டும் பொழுது வித்தியாசமான பொருள் ஒன்றுடன் தட்டப்பட்டு வரும் சத்தத்தை உணர்ந்த மின்சார சபை ஊழியர்கள் மேல் அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பினார்கள்.

மின்சார சபை அதிகாரிகள் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு அறிவித்ததை தொடர்ந்து குறித்த இடத்தில் விடுதலை புலிகளின் ஆயுதக் கிடங்கு அல்லது விடுதலை புலிகளின் நில பதுங்குகுழி இருக்கலாம் என சந்தேகித்து கிளிநொச்சி நீதிமன்றின் அனுமதியுடன் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் குறித்த இடத்தை அகழ்ந்தனர்.

எனினும் அதற்குள் இருந்து ஆட்லரி செல்லின் வெற்றுக்கோதும் கூரைத்தகடுகளும் மட்டுமே மீட்கப்பட்டன. (எ-11)

## 2500 ரூபாய்...

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளங்களும் 2ஆயிரத்து 500 ரூபாயினால் உயர்த்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறு 2 ஆயிரத்து 500 ரூபாய் அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்பட்டால் ஒட்டுமொத்த சம்பள விகிதாசாரமும் சீர்குலையும்.

தற்போது காணப்படும் சம்பள விகிதாசாரத்தை கருத்தற் கொண்டே அடிப்படைச் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டும்.

கடைநிலை ஊழியருக்கு ஒரு பங்கு அதிகரித்தால் அதன் நான்கு மடங்கினால் உயர் அதிகாரிக்கு சம்பளம் உயர்த்தப்பட வேணடும். பொது வாக இது 1:4 என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு சம்பள விகிதாசாரம் கருத்திற் கொள்ளப்படாது அனைவருக்கும் 2500 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்பட்டால் அது சம்பள முரண்பாட்டையே ஏற்படுத்தும் எனவும், அரச ஊழியர்களின் சம்பள இடைவெளி 1:3:5 என குறைவடையக் கூடுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

1:4 என்ற சம்பள விகிதாசாரமும் நாட்டின் புத்தி ஜீவிகளை

23ஆம் பக்கம் பார்க்க


O/L பரீட்சை எழுதிவிட்டீர்களா... இனி.?



3 வருட A/L க்குப் பதிலாக

1 வருட Foundation COURSE

(சி-3038)

4 வருடங்களில் பட்டதாரி ஆகலாம்!

| | | |
|---|---|---|
| 2016 - 17 | 1 வருட | Foundation |
| 2018 - 20 | 3 வருட | Bachelors Degree |

Business/IT/Engineering/Medicine/Arts
UK / Australia / New Zealand / Canada / Malaysian University Degree Pathways

Rapid Preparatory Course for Foundation
Business / IT / Science & Arts (3 months)

விரிவான விளக்கக் கருத்தரங்கு
28-12-2015
திங்கள் பி.ப.3மணி
@ சிகரம் விரிவுரை மண்டபம்

SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams

A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk 0777 32 4004

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)


## மரண அறிவித்தல்

### சிவயோகநாதன் சுயந்தன்

(காரியாலய இணைப்பாளர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நெல்லியடிக் காரியாலயம்)



துன்னாலை மத்தி, கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சிவயோகநாதன் சுயந்தன் 21-12-2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகநாதன் - பத்மாவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுபாஜினி, மயூரன், சிவராம், ஸ்ரீராம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலநாதன்-கிருஷ்ணவேணியின் (லண்டன்) மருமகனும், இரவிச்சந்திரன் கருணாவதி (பிரதேச செயலகம்- கோப்பாய்), ராஜேந்திரநாதன் மதனாவதி (சுவிஸ்), அருணாச்சலம் சுலோசனாவதி (லண்டன்), கமலஹாசன்-தில்லைநாயகி (ஆசிரியை-முஸ்லிம் ம.வி. வவுனியா), கமலநாதன் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற செல்லப்பாக்கியம் (அதிபர்) மற்றும் யோகம்மா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி நாகமுத்து ஆகியோரின் பேரனும், கோபிகா, பவன், ராகவராம், தாருகா, ராகுலன், மிதுரா, பிரியங்கா, துவாரகா, பானுகோபன், நேமிகிருஷ்ணா, தயாளன், கஜந்தன், லகிதரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் பவன்ஜா, காமாட்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22/12/2015) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(C-3040)

தகவல் :-
குடும்பத்தினர்


British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கிகரிக்கப்பட்ட பாடநெறி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

(சி-3020)

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935



V2 TRAVELS & TOURS

நீங்களும் முகவராகலாம் - உங்கள் ஊரில் இருந்தவாறே வருமானம் ஈட்டலாம்.



சர்வதேச விமானபயணச்சீட்டுகள் ,சர்வதேச பொதிகள் சேவை, உள்ளூர் பொதிகள் சேவை

10 இற்கும் மேற்பட்ட சேவைகளை உள்ளடக்கிய எமது நிறுவனத்திற்கு பிரதேசவாரியாக அனைத்து மாவட்டங்களிலும், பிரதேசங்களிலும், ஊர்களிலும் முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.
மாதம் 25,000/= மேற்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

முழுநேரமாகவோ ,பகுதிநேரமாகவோ, தனியாகவோ, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் சேர்ந்தோ இந்த தொழிலினை மேற்கொள்ளலாம். சுயதொழில் முயற்சியாளர்கள், ஏற்கனவே தொழில் செய்துகொண்டிருப்பவர்கள், 0/L,A/L, DIPLOMA, DEGREE முடித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருப்பவர்கள், மேலதிக வருமானத்தினை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் என அனைவருக்கும் ஓர் அரிய வாய்ப்பாகும். சிறிதளவான முதலீட்டில் நிரந்தர வருமானம். நாளாக நாளாக வியாபாரம் விரிவடைந்தே செல்லும் உத்தரவாதம்.

5 வருடகாலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நேரடியாக 4 கிளைகளை கொண்டு இயங்கிவரும் எமது நிறுவனம் வியாபாரத்தினை நாடுமுழுவதும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுடன் இணைந்து அவர்களுக்கு நிரந்தர/தற்காலிகமான வருமானத்தினை ஏற்படுத்தும் நோக்கிலான ஓர் முயற்சி.



DHL FedEx TNT SKYNET PROMPT XP

(சி-3039)

நேர்முகத்தேர்வு மற்றும் தொழில்விளக்கம் : 27-12-2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். - 0768226243


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.